24

32°c

கூடிய வெப்பநிலை 39°c
குறைந்த வெப்பநிலை 26°c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 137 வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 29, சனி 12.04.2014

12 APR 2014

# கோபி, தேவிகன், அப்பன் நேற்றுச் சுட்டுக் கொலை

## பதவியா காட்டுக்குள் நடந்த சண்டையில் என்கிறது இராணுவம் சடலங்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்ப்பிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயன்ற கோபி, தேவிகன், அப்பன் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

அதிகாலையில் பதவியா காட்டுக்குள் இடம்பெற்ற சண்டையில் இவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று அமைச்சு வெளியிட்ட இருபக்க அறிக்கை கூறியது. அநுராதபுரம் விமானத் தளம் மீதான தாக்குதல் மற்றும் 2007இல் கொழும்பு கொலன்னாவ மீதான தாக்குதல்போன்றவற்றில் பங்கெடுத்த தேவிகன் எனப்படும் சுந்தரலிங்கம் கஜீபன், கோபி எனப்படும் செல்வநாயகம் கஜீபன் ஆகியோர் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் அந்த அறிக்கை, மூன்றாவது நபர் யார் என்பது அடையாளம் காணப்படாத போதும் அவர் அப்பன் எனப்படும் நவரட்ணம் நவநீதனாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளது.

இவர்கள் மூவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளவும் இலங்கையில் கட்டியெழுப்ப முயன்றார்கள் என்று குற்றஞ்சாட்டும் அந்த அறிக்கை, ஐரோப்பிய நாடுகளில் உள்ள நெடியவன் மற்றும் விநாயகம் ஆகிய விடுதலைப் புலிகள் இயக்க குழுவினரிடம் இருந்து இவர்களுக்கு அதற்கான நிதி கிடைத்தது என்றும், அந்த நிதி ஹவாலா முறையில் இவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றது.

புலிகளால் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டெடுத்தல், புலிகளின் புலனாய்வு வலையமைப்பை மீண்டும் உருவாக்குதல், புனர்வாழ்வு பெற்றவர்கள் உள்ளிட்ட புலிகளின் உறுப்பினர்களை மீள ஒருங்கிணைத்தல், ஏனைய மாகாணங்களில் உள்ள தாக்குதல் இலக்குகளை அடையாளம் காணுதல் ஆகிய நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொண்டு வந்தனர் என்றும் அறிக்கை கூறுகின்றது.

இந்த மூவரும் காட்டுக்குள் பதுங்கி இருக்கின்றனர் என்று

21ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடு குடிதண்ணீர் யாழ். வருவது உறுதியாம்

### தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சூசகமாகக் கூறுகின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.12

இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தை மாகாண அரசு இடைநிறுத்தினால், மத்திய அரசு நடைமுறைப்படுத்தியே தீரும் என்று சூசகமாகத் தெரிவித்துள்ளனர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர். 'இலங்கையின் தற்போதைய அரசியலில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ளன. அவர்கள் எதை

21ஆம் பக்கம் பார்க்க

## பிரி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைப் ப்யணத்தை நிறுத்தினர்

லண்டன், ஏப்.12

இலங்கைக்கு வரவிருந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பயணம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று சனல் - 4 ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளதுடன், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளி தரனின் நிதியுதவியிலே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு இரண்டு வாரங்களினுள் இந்தப் பயண ஏற்பாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதில் பிரிட்டனின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்க திட்டமிட்டிருந்தனர். இவர்கள் இலங்கைக்கு வருகை தந்து இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகளுடன் குறிப்பாக, ஜனாதிபதி மஹிந்த ராஜ

21ஆம் பக்கம் பார்க்க

## எம்மைப் பின்தொடருங்கள்...

முகநூல் www.facebook.com/uthayan.print

டுவிற்றர் https://twitter.com/UthayanPrint

## தவறுதலான சூட்டில் தமிழ் அதிகாரி சாவு

யாழ்ப்பாணம், ஏப்.12

வவுனியா வடக்கில் நேற்று முன்தினம் இரவு நடந்த இராணுவப் பயிற்சியின் போது தவறுதலான துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். இராணுவத்தின் 7 ஆவது இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் எஸ்.கமல்ராஜா என்ற தமிழ் இராணுவ அதிகாரியே உயிரிழந்துள்ளார் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த தமிழ் இராணுவ அதிகாரி கோபி, தேவிகன் ஆகியோர் தொடர்பான விசாரணைகளில் பங்குபற்றியவராவார். குறித்த விசாரணைகளின் போது அவர் மொழி பெயர்ப்பாளராக செயற்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

பதவியா மருத்துவமனையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் இரவே அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். படையினரின் குழுவொன்று, பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, சக படைச்சிப்பாய் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் இலக்காகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

21ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மொழியைப் பேணுடுவீர்

பக்கம் 13

## வடபகுதியில் வறுமை நிலவுகின்றது

லண்டன்.ஏப்.12

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இன்னமும் வறுமை நிலவுகின்றது என்று தெரிவித்துள்ளார் பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி திணைக்

21ஆம் பக்கம் பார்க்க

## ரூ.35 லட்சம் பெறுமதியான பொருள்கள் கடந்த வாரத்தில் மட்டும் களவாடப்பட்டன

### தொடர்புடைய எவரும் இதுவரை கைதாகவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களில் மட்டும் சுமார் 32 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள பொலிஸார், எனினும் அந்தத் திருட்டுக்கள் குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ்.பிராந்தியசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன இந்தத் தகவலை வெளியிட்

21ஆம் பக்கம் பார்க்க

## துன்புறுத்தலுக்கு ஆளாகும் அப்பாவித் தமிழ் பெண்கள்



பக்கம் 12

## உறுப்பினர் விண்ணப்பித்தாலே பாதுகாப்பு வழங்க முடியும்

### வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் அவர்களுக்காக விண்ணப்பிக்க முடியாது

யாழ்ப்பாணம், ஏப்.12

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தமக்குப் பாதுகாப்புத் தேவையெனக் கருதினால் அவர்களே தனித்தனியாக - நேரடியாக அதற்கு விண்ணப்பிக்க வேண்டும். உறுப்பினர்களது பாதுகாப்புத் தொடர்பான அவைத்தலைவரின் கோரிக்கையை விண்ணப்பமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்

21ஆம் பக்கம் பார்க்க

## நிலத்தடி நீரை பாதுகாப்பதற்காக சேதன முறை மாதிரிப் பண்ணை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ். குடாநாட்டில் நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் சேதன முறை மாதிரிப் பண்ணை நீர்வேலி மேற்குப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் இந்த மாதிரிப் பண்ணை அமைக்கப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயத்தில் அதிக அளவில் விவசாய உரங்களும், பூச்சி கொல்லிகளும் பெருமளவு நீரும் பயன்படுத்தப்படுகிறது. அதனால் நிலத்தடி நீர் விவசாய இரசாயனங்களால் மாசடைந்து வருவதோடு நிலத்தடி நீரின் அளவும் குறைந்து வருகிறது.

21ஆம் பக்கம் பார்க்க

## ஆஸியில் தீக்குளித்த இளைஞர் ஆபத்தான நிலையில்

சிட்னி, ஏப்.12

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்த தமிழ் இளைஞர் ஒருவர், புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து தனக்குத் தனே தீ மூட்டிக் கொண்டுள்ளார். உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த இளைஞர் தற்போது மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பின் கீழ் உள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இளைஞர் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவராவார். குறித்த இளைஞர், பாதுகாப்பு அடைக்கலம் கோரி குடிவரவு குடியகல்வுத் திணைக்கத்துக்கு விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்தே தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டார் என்று கூறப்படுகின்றது.

தற்போது அதி தீவிர சிகிச்சைகளின் கீழ் இருக்கும் அவரைப் பார்ப்பதற்காக 65 வயதுடைய அவரது தாய் மற்றும் சகோதரனை ஆஸ்திரேலியோவுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரியவருகின்றது.

கிடைக்கப்பெற்ற முதற்கட்டத் தகவல்களின் அடிப்படையில் நேற்றைய தினம் பிரசுரமான செய்தியில், குறித்த இளைஞர் உயிரிழந்தார் என்று பிரசுரமாகியிருந்தது. எனினும் பிந்திய தகவல்களின்படி குறித்த இளைஞர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரியவந்துள்ளது.(பு)

## யுவதி. வன்புணர்வுச் சம்பவம் சந்தேகநபர் ஒருவர் சரண்

யாழ்ப்பாணம், ஏப்.12

வடமராட்சி துன்னாலையில் யுவதி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்த இருவரில் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த பொம்மை என்றழைக்கப்படும் சண்முகராஜா றஜீவன் என்பவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் நேற்றுச்சரணடைந்தார். அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

வன்புணர்வுச் சம்பவத்தில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கைவிடப்பட்ட வீடு ஒன்றிலிருந்து நெல்லியடிப் பொலிஸார் கடந்த மாத இறுதியில் கைப்பற்றிக் கடந்த தவணை பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைத்திருந்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதிவான் சுப்பிரமணியம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று வந்தபோது சந்தேக நபரான றஜீவன் தனது சட்டத்தரணி ஊடாக சரணடைந்தார்.

இந்த வன்புணர்வு வழக்கில் பாலேந்திரன் பிரபாகரன் என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார். அவருக்கும் நேற்றைய தினம் சரணடைந்தவருக்கும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட வீட்டிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்ட குறித்த மோட்டார் சைக்கிளை புலோலியைச் சேர்ந்த ஸ்ரீகணேசன் சுதாகரன் என்பவரே பயன்படுத்தி வந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரைப் பொலிஸார் இதுவரை கைதுசெய்யவில்லை. அவர் இன்னும் தலைமறைவாகவே இருந்துவருகிறார்.

துன்னாலையில் கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இளைஞன் ஒருவரும், யுவதி ஒருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற மூவர் இளைஞனைத் தாக்கிவிட்டு யுவதியை வன்புணர்வுக்குட்படுத்தியிருந்தனர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ற-4)

## மது போதையில் வாகனம் செலுத்திய 168 பேர் கைது

கொழும்பு, ஏப்.12

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களில் இதுவரை 168 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை 6 மணி முதலான 24 மணிநேரத்திலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

76 மோட்டார் சைக்கிள் சாரதிகள், 68 முச்சக்கர வண்டிச் சாரதிகள் மற்றும் ஏனைய வாகனங்களை செலுத்திய 24 பேர் இவ்வாறு கைதாகியுள்ளனர். (ற)

## கொள்கைகளை மாற்றினால் ஆதரவு வழங்க நாம் தயார்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸை அழைக்கின்றது பொது பல சேனா

கொழும்பு,ஏப்.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது கொள்கைகளைத் திருத்திக் கொண்டு அரசியலில் ஈடுபடுமாயின், அந்த கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக உள்ளோம்.



இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஐக்கியத்தை ஏற்றுக் கொள்ளும் மற்றும் பௌத்த மதத்துக்கு முதன்மை இடம் வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் கொள்கைகளை ஆராய்ந்து அவருக்கு எமது அமைப்பு தயக்கமின்றி ஆதரவு வழங்கும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் கொள்கைகளை ஆராய்ந்தே நாங்கள் ஆதரவு வழங்குவோம். பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால், அவருக்குப் பின்னால், அரச சார்பற்ற குழுக்கள் இருக்கக் கூடும்.

கடந்த காலங்களில் தனி நபர்களின் அடையாளம் மற்றும் வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சிலர் ஆதரவு வழங்கினர். நாங்கள் வேட்பாளரின் கொள்கையை கவனத்தில் கொள்வோம்.

பௌத்த மதத்துக்கு முதன்மை இடத்தையும் நாட்டின் ஐக்கியத்தை ஏற்றுக்கொள்ளும் எந்தத் தரப்பாக இருந்தாலும் நாங்கள் ஆதரவு வழங்குவோம். அது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா என்பது முக்கியமல்ல. அவர்கள் தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டியது முக்கியம்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சரியான பார்வையுடன் செயற்படும் நபருக்கும் நாங்கள் ஆதரவு வழங்கத் தயார்-என்றார். (ச)

## நாலாம் சடங்கில் பறிபோனது உறவினரின் தாலிக் கொடியே

யாழ்ப்பாணம், ஏப்.12

திருமணம் முடிந்து நாலாம் நாள் சடங்கு இடம்பெற்ற வீட்டினுள் புகுந்த திருடர் மணப்பெண்ணினுடைய சகோதரனின் மனைவியினுடைய தாலிக்கொடி உட்பட 23 பவுண் நிறையுடைய நகைகளையே திருடிச் சென்றுள்ளனர். மணப்பெண்ணின் தாலிக்கொடி திருடப்படவில்லை - என்று உதயனுக்குத் தெரிவித்தனர் நகைகளைப் பறிகொடுத்தவர்கள்.

உரும்பிராயில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில் மணமகளின் 15 பவுண் நிறையுடைய தாலிக்கொடியும் திருடப்பட்டது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்திருந்தனர். குறித்த செய்தி உதயனில் பிரசுரமாயிருந்தது. இந்தநிலையிலேயே வெளிநாட்டில் இருந்து திருமணத்துக்கு வந்திருந்த சகோதரனின் மனைவியினுடைய தாலிக் கொடியே பறிபோனது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## ஐ.நா. மீளாய்வுத் திட்டத்தின் ஊடாக மனித உரிமைகள் மேம்படுத்தப்படும்

நியூயோர்க், ஏப்.12

சர்வதேச மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மீளாய்வுத் திட்டத்தின் ஊடாக உந்துசக்தி கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உறுப்பு நாடுகள் தமது மனித உரிமைக் கடப்பாடுகளை மதித்து நடக்கின்றனஎன்பதுகுறித்துமீளாய்வு செய்து அதனை வலிமைப்படுத்தும் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கடந்த புதன்கிழமை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனூடாக மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான புதிய உந்துசக்தி கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யோசனையின்படி, ஜெனிவாவை தளமாகக் கொண்ட 10 இணக்க அமைப்புக்களை புதுப்பிப்பதே நோக்கமாக உள்ளது. இந்த இணக்க அமைப்புக்கள், ஐ.நாவின் உறுப்பு நாடுகள் சர்வதேச மாநாட்டு விழுமியங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன, குறிப்பாக சித்திரவதைக்கு எதிராகவும் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும்நாடுகள்எவ்வாறுநடந்து கொள்கின்றன என்பதை இந்த அமைப்புக்கள் மீளாய்வு செய்யும் அதாவது இந்த அமைப்புக்கள், சர்வதேச மனித உரிமை பாதுகாப்பு திட்டத்தின் இதயங்களாக விளங்கும்.

இவை, உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் குறித்து உடனடியாகவே எச்சரிக்கைகளை விடுப்பது, மனித உரிமைகளுக்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல் போன்ற கடமைகளை கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தடுத்தலுக்கான நடவடிக்கை இந்த நிலையில் குறித்த அமைப்புக்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சிவில் குழுக்கள், ஜெனிவாவின் அமர்வுகளில் பங்கேற்கும் அரசுகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களை மையமாகக் கொண்ட முறையான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்படும் என்று நவநீதம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## லக்பிம உதவி ஆசிரியரிடமும் புலனாய்வுத்துறை விசாரணை

கொழும்பு, ஏப்.12

பாதுகாப்புச் செயலரின் துணைவியாரின் படம் பிரசுரித்தமை தொடர்பாக லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் சமன் வாகா ஆராச்சி புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்தப் பத்திரிகையின் உதவி ஆசிரியரும் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு தரப்பால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சிவில் பாதுகாப்பு நிகழ்வு ஒன்றின்போது பாதுகாப்பு செயலாளரும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் அமர்ந்திருக்கும் படம் குறித்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மற்றும் ஒரு பெண் கோத்தபாய ராஜபக்ஷவிடம் வழங்கும் ஓர் ஆவணத்தை மையமாகக் கொண்டு அது போலி நாணயத்தாளா? என்ற தலைப்பை பத்திரிகை வெளியிட்டிருந்தது. இது தொடர்பிலேயே லக்பிம ஆசிரியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள லக்பிம பத்திரிகையின் ஆசிரியர் வாகா ஆராச்சி, தாம் படத்துக்கு கீழ் இருந்த தலைப்பை கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டார். இந்தப் படம் பிரசுரிக்கப்பட்டமைக்காக தாம் அடுத்த நாள் பிரசுரத்தில் மன்னிப்புக் கோரியமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## புதுவருட பாரம்பரிய அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு,ஏப்.12

தமிழ், சிங்கள புதுவருடத்தின் நிகழ்வுகள் தொகுக்கப்பட்ட பாரம்பரிய அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தங்கல்ல கால்டன் இல்லத்தில் வைத்து சம்பிரதாய முறைப்படி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

கலாசார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க ஆகியோர் கலந்துகொண்டதுடன் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ச)

விசா ஆலோசனையில் புத்தாண்டுச் சலுகைகள்

★ ஆஸ்திரேலியா: குடும்பமாகச் செல்லலாம்

★ கனடா : சுகாதார துறைசார்ந்தோர், Electricians சமையலாளர், வெல்டேர்ஸ் IELTS தேவையில்லை.

★ இத்தாலி : இல்குவில் பறக்கலாம்.

★ சைபிரஸ், நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை.

(அனைத்தும் நிபந்தனைகளுடன்)

இன்றில் இருந்து 15.04.2014 வரை அனைத்து விசா ஆலோசனைகளுக்கும் 10% கட்டணக்கழிவு.

புத்தாண்டு அன்றும் திறந்திருப்போம்.

(4680)(5.6)

திசைகாட்டி பிறைவேற் லிமிட்

இல.175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி சந்தி,யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 499 3502 / 021 221 9016

www.thisaivisa.com



## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி ரூ.10 லட்சம் காசோலை மோசடி

யாழ்ப்பாணம், ஏப்.12

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர் 10 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையைப் பெற்று மோசடி செய்துள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி. விமலசேன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

"குறித்த இருவரும் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள். காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள விசேட பொலிஸ் பிரிவில் கடந்த 3 ஆம் திகதி கரவெட்டியைச் சேர்ந்த ஒருவர் 9 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்தமை தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். அதேவேளை கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த [illegible]வர் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்தமை தொடர்பில் பாதிக்கப்பட்டவர் பொலிஸில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்"- என்று அவர் தெரிவித்தார். (ற-4-86)

## வெளிநாட்டிலிருந்து வந்தவரின் வீட்டில் திருடர்கள் கைவரிசை

*வீட்டார் திருமண வீட்டுக்குச் சென்ற வேளை*

தென்மராட்சி, ஏப்.12

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒருவர் தமது குடும்பத்தாருடன் திருமண வீடொன்றுக்குச் சென்றிருந்த வேளையில், அவரது வீட்டின் ஜன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வெளிநாட்டுப் பணநோட்டுக்களையும் (டொலர் மற்றும் இந்தியன் ரூபா) தங்க நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ள னர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டிப் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

நாவற்குழி, கேரதீவு வீதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தமது தாயாரின் திவசத்துக்காக வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அளவெட்டியில் நடைபெற்ற உறவினரின் திருமண நிகழ்வுக்காக மதியம் 12 மணிக்கு வீட்டில் உள்ள அனைவரும் வாகனத்தில் சென்றுவிட்டுப் பிற்பகல் 2.30 மணிக்கு வீடு திரும்பினர்.

வெளிக் கதவைத் திறந்த போது வீட்டின் கதவும் ஜன்னலும் திறந்திருந்தன. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டு அலுமாரி உடைக்கப்பட்டு அதனுள் இருந்த டொலர்களும், வைத்திய தேவைக்காக இந்தியாவுக்கு கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த இந்திய ரூபா நோட்டுக்கள், தாயாரின் நினைவுச் சின்னமான தங்கத்தோடு மற்றும் கைச் சங்கிலி என்பவையும் திருட்டுப் போயிருந்தன.

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பெறுமதிமிக்க 4 கையடக்கத் தொலைபேசிகள் , மடிக் கணினிகள் போன்றவை அலுமாரியில் காணப்பட்டபோதிலும் அவை திருடர்களால் எடுத்துச் செல்லப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நாள் ஒன்றுக்கு ஒருவருக்கு 5 லீற்றர் தண்ணீர் மட்டுமே

*வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில்*

யாழ்ப்பாணம், ஏப்.12

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள குடும்பங்களில் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 5 லீற்றர் குடிதண்ணீர் மட்டுமே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராஜா தெரிவித்தார்.

தீவுப் பகுதியில் தற்போது நிலவும் குடிண்ணீர் தட்டுப்பாட்டை அடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கூட்டத்தில் நீர் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள், பிரதேச செயலக பிரதிநிதி, ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வேலணைப் பிரதேச சபை தலைவர் மேலும் கூறுகையில்:-

தற்போது தீவுப் பகுதிக்கு குடிதண்ணீரை வழங்கும் சாட்டி கிணற்றிலிருந்து பிரதேச சபை, சர்வோதயம் மற்றும் தனியார்களின் பௌசர்கள் மூலம் நீர் எடுத்துச் செல்லப்படுவதால் நீர்மட்டம் குறைந்துள்ளது. எனவே குறிப்பிட்ட நேரத்துக்கே நீர் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நீர் பற்றாக்குறை காரணமாக ஒருவருக்கு நாளொன்றுக்கு 5 லீற்றர் நீர் மட்டுமே வழங்கக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீருக்கு மட்டுமே நீர் எடுத்துச்செல்ல அனுமதிப்பதெனவும் ஏனைய கட்டுமானப் பணிகளுக்கு தண்ணீரை எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே தண்ணீரை வீண் விரயம் செய்யவேண்டாம் என்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார். (வ-7)

## பிறரை அடித்த குற்றத்தில் கடந்த வாரம் 31 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 12

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

சந்தேகத்தின் பேரில் 13 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 6 பேரும், சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 15 பேரும், வாகன விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் 5 பேரும், நட்டம் ஏற்படுத்திய குற்றம் தொடர்பில் 2 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஒருவரும், போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 8 பேரும், களவு தொடர்பில் 9 பேரும், சட்ட விரோத மின்சாரம் பெற்ற குற்றச் சாட்டில் 4 பேரும், அத்து மீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும், மோசடிக் குற்றச்சாட்டில் ஈடுபட்ட 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4-86)

## வர்த்தகரின் வீட்டில் பணம், நகை சூறை

*பேராலையில் பட்டப்பகலில் சம்பவம்*

பளை, ஏப்.12

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராலைப் பகுதியில் உள்ள வர்த்தகரொருவரின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 65 ஆயிரம் ரூபா பணத்தையும், சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை பட்டப்பகலில் இடம்பெற்றது.

அன்றைய தினம் காலையில் வீட்டைப் பூட்டிவிட்டு கணவனும், மனைவியும் வர்த்தக நிலையத்துக்குச் சென்றதாகவும், மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்தபோது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் மற்றும் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## யாழ்.தட்டாதெரு பிள்ளையாரின் உண்டியல் உடைத்து திருட்டு

*கோயிலுக்குள் புகுந்து திருடர்கள் தேடுதல்*



உடைக்கப்பட்ட ஆலய உண்டியல்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.தட்டாதெரு, ஐயனார் கோயில் வீதியிலுள்ள விசுவேச விநாயகர் ஆலயத்தில் வியாழக்கிழமை இரவு கூரையைப் பிரிந்து உட்புகுந்த திருடர்கள் உண்டியலை உடைத்துப் பணத்தைக் களவாடிச் சென்றுள்ளனர்.

மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கு ஒரு பூட்டை உடைத்த போதும், கதவைத் திறக்க முடியாத நிலையில், உண்டியலை உடைத்துப் பணத்தைக் களவாடியுள்ளனர்.

நேற்றுக்காலை வழமை போல் கோயிலைத் திறந்து உள்ளே சென்றபோதே கோயிலில் திருட்டு இடம்பெற்றிருந்தமை தெரியவந்தது.

கோயிலுக்குள் புகுந்த திருடர்கள் பல இடங்களிலும் தேடுதல் நடத்தியுள்ளனர். அங்கிருந்த பொருள்கள் பலவும் கிண்டிக் கிளறிப் பார்க்கப்பட்டிருந்தன. மூலஸ்தானத்துக்குள் போகும் முயற்சியும் கைகூடவில்லை. இறுதியாக உண்டியலை உடைத்துள்ளனர். அதில் சுமார் ஆயிரம் ரூபா வரையான பணம் தான் இருந்திருக்க வேண்டும். கடந்த சில தினங்களுக்கு முன்னர் தான் உண்டியலில் இருந்த பணத்தை எடுத்தோம்" என்றார் ஆலயத்தின் குருக்களான க.பாஸ்கரக்குருக்கள். திருட்டுத் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஓ-21)

# வறண்டுவரும் கிணறுகள், குளங்கள்; கிளாலிப் பகுதி மக்கள் பெரும் அவலம்

*குடிதண்ணீருக்கு பெரும்பாடு; கால்நடைகள் நீர்தேடி அலைந்து திரிகின்றன*

கொடிகாமம், ஏப்.12

கடும் வெப்பம் காரணமாக கிளாலிப் பகுதியிலுள்ள கிணறுகளிலும் குளங்களிலும் நீர் மட்டம் நாளாந்தம் குறைந்து வருவதால் குடிதண்ணீருக்கு மக்கள் மட்டுமல்ல கால் நடைகளும் அலைந்து திரியவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

எனவே மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் குறிப்பிட்ட இடங்களில் தண்ணீர்த் தாங்கிகளை வைத்துக் குடிதண்ணீர் வழங்குமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையையும் பிரதேச செயலரையும் கோரியுள்ள கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கம், கால்நடைகளின் நலன்கருதி குளங்களை ஆழமாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

கிளாலிப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளார்கள். இவர்களின் அத்தியாவசியத் தேவையான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அப்பகுதியிலுள்ள 13 கிணறுகள் பொது நிறுவனங்களின் உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டன. இது வரை காலமும் இவர்கள் குறிப்பிட்ட கிணறுகளைப் பயன்படுத்தி வந்தனர்.

நாட்டில் தற்பொழுது வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் குடி தண்ணீர் பெறப் பயன்படுத்தப்பட்டு வந்த கிணறுகளில் உள்ள நீர்மட்டம் குறைந்து செல்வதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல குடும்பங்கள் குடிதண்ணீருக்காகத் தூர இடங்களை நாட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இப்பகுதியில் இடம் பெறும் விசேட வைபவங்களுக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறமுடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள்.

**கடந்த வருடம் பருவமழை ஏமாற்றியதாலும் கடும் வெப்பத்தினாலும் இப் பகுதியிலுள்ள குளங்களில் நீர்மட்டம் குறைந்துள்ளது. சில குளங்கள் வற்றி வறண்டு விட்டன.**

இதேவேளை கடந்த வருடம் பருவமழை ஏமாற்றியதாலும் கடும் வெப்பத்தினாலும் இப் பகுதியிலுள்ள குளங்களில் நீர்மட்டம் குறைந்துள்ளது. சில குளங்கள் வற்றி வறண்டு விட்டன. இதனால் நூற்றுக் கணக்கான கால்நடைகள் தண்ணீருக்காக அலைந்து திரிகின்றன. எனவே கால் நடைகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இப்பகுதியிலுள்ள குளங்களை ஆழமாக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சங்கம் பிரதேச செயலரைக் கோரியுள்ளது. (ஓ-115)

# திட்டமிடப்படாத காணி வழங்கல் நிகழ்வால் அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிப்பு

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான காணி வழங்கும் நிகழ்வு திட்டமிடப்படாமல் நடைபெற்றதாக அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நெடுங்கேணி பிரதேசத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான காணிகள் நேற்றுமுன்தினம் பனிச்சங்குளப் பகுதியில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமக்குரிய காணிகளை திருவுளச் சீட்டின்மூலம் பெற்றுக் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கே அவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனால் விடுமுறையில் வீடு திரும்பிய ஆசிரியர்கள் உட்பட பலர் தமது சேவைகளையும் இடை நிறுத்திவிட்டு நேற்று முன்தினம் தமது காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிற் பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்ட நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் கே.பரந்தாமன் இன்று நிலத்தை அளக்கும் நில அளவையியலாளர் வருகை தரவில்லை. எனவே எதிர்வரும் 21ஆம் திகதிக்குப்பின்னர் இப்பகுதியில் தாம் ஓர் அலுவலகம் திறக்கவுள்ளதாகவும், அதன் பின்னர் ஒவ்வொரு திங்கள், வியாழக்கிழமைகளில் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான காணி வழங்கும் திட்டம் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதும் இன்று வரைக்கும் சரிவரத் திட்டமிடப்படாது அதிகாரிகள் தம்மை அலைய வைப்பதாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நடை பெற்ற இந்த நிகழ்வுக்கு ஆசிரியர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், பிரதேச சபை, பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் தமது வேலைகளை இடை நிறுத்தி வருகைதந்தபோதும் இவ்வாறான நெடுங்கேணிப் பிரதேச செயலாளரின் திட்டமிடப்படாத செயற்பாட்டால் அரச உத்தியோகத்தர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். எனவே இனியாவது தம்மை அழைக்கும்போது சரியாகத் திட்டமிட்டு தமது வேலை நேரத்தை வீணடிக்கும் செயற்பாட்டில் ஈடு படாமல் உரிய முறையில் செயற்படுமாறும் அவர்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.(வ-422)

# வீதியில் மறித்து ஓட்டோச் சாரதியை தாக்க முயன்ற சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.12
வீதியில் வைத்து ஓட்டோ சாரதியை தாக்க முற்பட்ட சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த நபரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் அவரை தர்ம புரம் பொலிஸாரிடம்ஒப்படைத்தனர்.
இச்சம்பவம் நேற்றிரவு 9 மணிக்குபுதுக்குடியிருப்பு12ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது.
இச்சம்பவம்தொடர்பாகமேலும் தெரியவருவதாவது:-
விசுவமடு ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்து வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோச் சாரதியை புதுக்குடியிருப்பு 12ஆம் கட்டைப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மூவர் தமது மோட்டார் சைக்கிளை வீதிக்குக் குறுக்கே விட்டு மறித்துள்ளனர். இதனை அடுத்து குறித்த மூவரும் ஓட்டோ சாரதியுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவரைத் தாக்கவும் முற்பட்டனர்.
இதனால் அச்சமடைந்த குறித்த ஓட்டோச் சாரதி தனது சகாக்களுக்கு தகவல் வழங்கினார். அங்கு ஓட்டோ சாரதிகளும் பொது மக்களும் ஒன்றுகூடவே இனந்தெரியாத மூன்று நபர்களும் தப்பியோட முயற்சித்தனர். அவர்களில் இருவர் தப்பியோடியபோதும்ஒருவரைபொது மக்கள் மடக்கிப் பிடித்து தர்ம புரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இச்சம்பவம் தொடர்பாக தர்ம புரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மடக்கிப் பிடிக்கப்பட்டவர் சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர் என்று ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.
இதேவேளை, அண்மைக் காலமாக பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் இனந்தெரியாத நபர்களால் வாகனங்கள் வழிப்பறிசெய்யும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. அச்சூழலில் தனது ஓட்டோவைப் பறிக்கும் முயற்சியாக இச்சம்பவம் இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (ற-400)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12
மோட்டார் சைக்கிளில் பயணித்தவர், கண்ணில் பூச்சி தாக்கியதால் நிலைதடுமாறி பாதையை விட்டு விலகி விழுந்து விபத்துக்குள்ளானார். இவர்தற்போது ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
யாழ். கோண்டாவிலில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிங்காரவேலு வசந்தரூபன் (வயது-20)என்பவரே படுகாயமடைந்தார்.(ற-4)

**காணி விற்பனைக்கு**

புங்கங்குளம் வீதி, கணக்கர் சந்திக்கு அண்மையில் வீடு கட்டுவதற்கு உரிய வகையில் துண்டுகளாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0773114353, 0770202998, 0777626241.

**புதிய வீடு விற்பனைக்கு**

புங்கங்குளம் வீதி, கணக்கர் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் நவீன முறையில் அமைக்கப்பட்ட புத்தம்புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0773114353, 0770202998, 0777626241.

**அலுவலக பாவனைக்கு/காட்சியறைக்கு ஆன கட்டடம் விற்பனைக்கு**

புங்கங்குளம் வீதி, கணக்கர் சந்திக்கு அண்மையில் அலுவலக பாவனைக்கு/காட்சியறைக்கு உரிய முறையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமும் அத்துடன் விசாலமான இட வசதியுடன் கூடிய நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடும் விற்பனைக்கு உண்டு. *தொடர்புகளுக்கு: 0773114353, 0770202998, 0777626241.*

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.12
ஐங்கரன் மீடியா சொலூஷன் நிறுவனம், யாழ். உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து நடத்தும் அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும், நாளையும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
(து-400)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
**பொன்மணி கந்தசாமி**

தோற்றம் 27.01.1951 — மறைவு 14.03.2014

கடந்த 14.03.2014 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் சிவபதப் பேறு குறித்த நினைவுகள் இன்று (12.04.2014) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மூர்த்தி வளவு,
செல்வாபுரம்,
தெல்லிப்பழை.

கணவர் மா.கந்தசாமி மற்றும்பிள்ளைகள்
க. அமிர்தாஸ் (கிளி/கோணாவில் அ.த.க.பா.)
க.சஜிதன் (ஓமந்தை) க.கஜந்தன்
(கஜன் வவுனியா), க.பிரதீஸ் க.டயானா.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

விழுதுகள் நாம் விருட்சமாகமுன்னே எம்மை விட்டு பிரிந்து
விட்டீர் ஆருயிர் அப்பா எதை எதை இழந்த போதும்
கலங்காத நாங்கள் கலங்குகிறோம் உம் நினைவால்



கொழும்பு சுப்பமாக்கேற்றில்
மேற்பார்வையாளர்

அமரர்
**செல்லையா ஆறுமுகம்**

தோற்றம் 26.06.1952 — மறைவு 13.03.2014

கடந்த 13.03.2014 அன்று பிரான்சில் சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் 31 ஆம் நாள் நினைவு நாள் இன்று 12.04.2014 பிரான்சில் நடைபெற உள்ளது. எமது தந்தையின் மறைவுச் செய்தியைக் கேட்டு உடன் இருந்து உதவி புரிந்தோருக்கும் மலர்ச்சாலையில் வந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் இணையத்தளம் மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்திகளை பகிர்ந்து எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மல்லாவி
தொ.பே.: 0779673679

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## 2ஆவது நாளாகவும் பட்டினிப்போர் நடத்தும் நாகை மீனவர்கள்

நாகை, ஏப்.12
நாகை மீனவர்கள் 2 ஆவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
அரசால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதாகக் கூறி நாகை நம்பியார் நகர் மீனவர்கள் நாகை துறைமுகத்தில் படகுகளை நிறுத்தக் கூடாது என்றும் மீன் இறங்கு தளத்தில் வைத்து மீன் விற்பனை செய்யக்கூடாது என்றும் அக்கரைப்பேட்டை கிராமத் தலைவர்கள் தடை விதித்ததாகக் கூறப்படுகிறது.
இதனைக் கண்டித்து புதன்கிழமை காலை நாகை நம்பியார் நகர் மீனவ கிராம மக்கள் வீதி மறியலில் ஈடுபட்டனர்.
அதைதொடர்ந்து நாகை நம்பியார் நகரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அக்கரைப் பேட்டை கிராமத் தலைவர்கள், நாகை நம்பியார் நகர் மீனவர்கள் கடுவையாற்றில் படகை நிறுத்தி மீன்பிடிக்கக் கூடாது என்று தடை விதித்துள்ளனர். இது குறித்து நாகை மாவட்ட நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.
இதனைக் கண்டித்து புதன்கிழமை தொடக்கம் நாகை நம்பியார் நகர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தம் செய்வது, தொடர் உண்ணாவிரதம் இருப்பது என்று முடிவு செய்தனர். இதையடுத்து நேற்றுமுன்தினம் 2 ஆவது நாளாக நம்பியார் நகர் மக்கள் தங்களது பங்கீட்டு அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகளை அரசிடம் ஒப்படைக்கப் போவதாகக் கூறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மேலும் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக நாகை நம்பியார் நகர் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. நாகை மாவட்டம், தரங்கம்பாடி, சீர்காழி தாலுகாவைச்சேர்ந்த 8 கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் நாகை நம்பியார் நகர் மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தால் மீனவ கிராமங்களில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. (வ)

**பாதுகாப்பு சேவைக்கு ஆள்கள் தேவை**

தேவையான உடைமைகள்: குடும்ப பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை கலர் படம் (பாஸ்போட் size) - 03, சேவை அனுபவ சான்றிதழ்
சந்திக்கும் நேரம்: 12.04.2014 சனிக்கிழமை காலை 9 - மாலை 6 மணிவரை
தொடர்புக்கு: 0778919367, 0777928681, 0217200170
தேவைப்படும் பிரதேசங்கள்: யாழ்ப்பாணம், கொக்குவில், திருநெல்வேலி, சுன்னாகம்.
எமது சேவைகள்: வீடுகளுக்கான பாதுகாப்புச் சேவை விசேட சேவை, தனிநபர்களுக்கான பாதுகாப்பு, கடைகள், அனைத்து வித நிறுவனங்கள்.

***PERFECT SECURITY SERVICES (Pvt.) Ltd.***
***125 B, K.K.S. Road, KoKuvil Junction.***
***Kokuvil, Jaffna, Sri Lanka.***

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் லீலாவதி

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லீலாவதி (11.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், புஸ்பராணியின் அன்புத் தாயும், கதிர்காமநாதனின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (12.04.2014) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீலகிரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி,
காரைநகர்.
(46741)
தகவல்:
புஸ்பராணி (மகள்)

## மரண அறிவித்தல்

### பசுபதி பரசோதிலிங்கம் (நந்தன்)



கோட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும், திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பரசோதிலிங்கம் நேற்று (11.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோட்டைக்காடு,*
*மல்லாகம்.*

தகவல்:
**குடும்பத்தினர்**
*தொ.பே: 0772338247*

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து சங்கரப்பிள்ளை



புலோலி தெற்கு, சாரையடி யைப் பிறப்பிடமாகவும், மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதி சிவக்கொழுந்து சங்கரப்பிள்ளை நேற்று (11.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வைரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சிவசங்கர் (சாரங்கன் பல்பொருள் வாணிபம் - மந்திகை), சிவகுமார் (அபிவிருத்தி உதவியாளர் - பிரதேச செயலகம், மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனரூபி, வனஜா (அபிவிருத்தி உதவியாளர் - பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் அன்னபாக்கியம், ராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சாகித்யா சாரங்கன், ராகவன், ராகவி, கோகுலன், அனோஜன், அச்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது சாரையடி இல்லத்தில் நாளை (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்று காலை 9 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆனை விழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சாரையடி,*
*புலோலி தெற்கு,*
*0776079550*

தகவல்:
**குடும்பத்தினர்.**

# பிரதேச மருத்துவ மனைகளிலும் இனி காச நோய்ச் சிகிச்சைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஏப்.12
யாழ்.மாவட்டத்தில் காசநோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அந்தந்த பிரதேச மருத்துவமனைகளுக்கு நேரடியாகச் சென்று சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி ஆர்.மணிவாசகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக அந்தந்தப் பிரதேச மருத்துவ மனைகளில் குறிக்கப்பட்ட தினங்களில் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மாதத்தில் முதல் திங்கட்கிழமைகளில் சங்கானை பிரதேச மருத்துவமனையிலும், மாதத்தில் முதல் வியாழக்கிழமைகளில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலும், மாதத்தில் இரண்டாவது வியாழக்கிழமைகளில் ஊர்காவற்றுறை மருத்துவமனையிலும், மாதத்தில் மூன்றாவது வெள்ளிக் கிழமைகளில் சாவகச்சேரி மருத்துவமனையிலும், மாதத்தில் 4 ஆவது வெள் ளிக்கிழமைகளில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும் இந்தச் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. அந்தந்த பிரதேச மருத்துவமனைகளில் காசநோயாளர்கள் உரிய சிகிச்சைகளைப் பெறமுடியும் எனத்தெரிவித்துள்ளார். (வ-14)

## ரயில் கடவைக் காப்பாளரை நியமிக்க பொலிஸார் ஏற்பாடு


தென்மராட்சி, ஏப்.12
புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ரயில் பாதைகளுக்கு கடவைக் காப்பாளர்களை நியமிக்கச் சாவகச்சேரி பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள 18 ரயில் கடவைகளுக்குக் காவலாளிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

அந்தந்த ரயில் கடவைகளுக்கு அண்மித்த பகுதிகளில் உள்ள, தீய பழக்கங்கள் அற்ற 40-50 இற்கு இடைப்பட்ட வயதினர் இப்பணிக்கு நியமிக்கப்படவுள்ளனர். சுழற்சி முறையில் கடமை செய்வதற்கு ரூபா 7 ஆயிரத்து 500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விரைவில் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கடவைகளில் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதாக ஆலோசனைக் குழுத் தலைவர் மருத்துவர் த.குகதாஸன் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு. எம். எஸ்.தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நியமிக்கப்படவுள்ள பாதுகாப்புக் கடவைக் காவலாளிகளை ரயில் செல்லும் வேளைகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (வ-9)



மே 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள குமுதினிப் படகுப் படுகொலையின் 29 ஆவது ஆண்டு நிறைவுக்கு முன்பாக நெடுந்தீவு துறைமுகத்திலுள்ள குமுதினி நினைவுத் தூபியைச் சீரமைத்து பெயர்வளைவு பொருத்த நெடுந்தீவு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. குமுதினிப் படகில் பயணித்த 36 பேர் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)



*சீர் செய்யப்பட்ட ரயில் பாதை*

## ரயில் பாதை சீரமைப்பு

### போக்குவரத்து இலகுவானது

தென்மராட்சி, ஏப்.12
சாவகச்சேரி கச்சாய் வீதியின் குறுக்கே செல்லும் ரயில் பாதை சீர்செய்யப்பட்டு அதனூடாக வாகனங்கள் பயணிக்கின்றன.

ரயில் பாதை அமைக்கப்பட்ட போது வாகனங்கள் செல்லக் கூடிய வகையில் காணப்பட்ட போதிலும் கடந்த சனிக் கிழமை இயந்திரம் மூலம் கொங்கிறீற் சிலிப்பர் கட்டைகளுக்கிடையில் கற்களைப் புதைக்கும் பணிகள் இடம்பெற்றதால் கற்கள் கீழே இறங்கியதால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இது தொடர்பாக செய்தி பிரசுரமாகியதை அடுத்து நேற்று முன்தினம் ரயில் பாதைப் பணியாளர்கள் வீதியைச் சீர் செய்யும்பணிகளைமேற்கொண்டனர். வாகனங்கள் தற்போது சிரமமின்றி வீதியில் பயணிக்கக்கூடியதாகவுள்ளது. (வ-9)

## வீதி விளக்குக் கம்பங்களுக்கு இலக்கமிடுமாறு வலியுறுத்து

### சாவகச்சேரி நகர சபை மாதாந்தக் கூட்டத்தில் பிரேரணை

தென்மராட்சி, ஏப்.12
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதி விளக்குகளின் கம்பங்களுக்கு இலக்கமிடப்படல் வேண்டும். நகர சபையால் 500 இற்கும்மேற்பட்ட வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வீதி விளக்குப் பொருத்தப்பட்டுள்ள கம்பங்கள் அடிக்கடி மாற்றப்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிப்பதாலும், வீதி விளக்கு பழுதடையும் வேளையில் அது தொடர்பாக மக்கள் நகர சபைக்கு அறிவிப்பதற்கு வசதியாக இருப்பதற்கும் வீதி விளக்கு பொருத்தப்பட்டுள்ள மின்கம்பங்களுக்கு இலக்கங்கள் இடப்படல் வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சன் வாய்மொழி மூலமான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். இதன்போது உரிய நடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்று தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## இன்றும் நாளையும் ப.நோ.கூ.ச. திறந்திருக்கும்

சித்திரைப் புத்தாண்டை யொட்டி யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்கள் இன்று சனிக் கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் முழுநாளும் திறக்கப்பட்டு விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-135)

## சமுர்த்தி அலுவலகங்களில் கணக்காய்வுக் குழ சல்லடை

வலி. வடக்கு, ஏப் .12
யாழ் .மாவட்டத்தில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்களின் மீது சமுர்த்தி கணக்காய்வு அலுவலர்களின் பார்வை கடுமையாக விழத் தொடங்கியுள்ளது. இதன் ஒரு கட்டமாகச் சமுர்த்தி அலுவலர்களின் பணப்பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் திடீர்ப் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது.

புத்தாண்டையொட்டி சமுர்த்தி அலுவலர்கள் பயனாளிகளிடம் இருந்து தகுந்தளவு சேமிப்பு ஒன்றைத் திரட்ட வேண்டும் என்பது தலைமையகத்தின் பணிப்பாகும். இதன் அடிப்படையில் சமுர்த்தி அலுவலர்கள் முன் பெறப்பட்ட பணத்துக்கு பின் திகதியிட்டு பற்றுச் சீட்டுக்களை வழங்க முற்படுவதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்த வகையில் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் தீவகம் பகுதியில் உள்ள பிரதேச சமுர்த்திஅலுவலர்ஒருவர்சேமிப்புப்பணத்தைபெற்றுக்கொண்டு எதிர்வரும் புத்தாண்டை

> சமுர்த்தி அலுவலர்கள் முன் பெறப்பட்ட பணத்துக்கு பின் திகதியிட்டு பற்றுச் சீட்டுக்களை வழங்க முற்படுவதாக குற்றச்சாட்டுகள்.

யொட்டிய திகதியை பற்றுச் சீட்டில் போட்டு வழங்கியுள்ளார்.

இது யாழ் .மாவட்ட சமுர்த்தி தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து சமுர்த்தி கணக்காய்வுக் குழுவினர் சமுர்த்தி அலுவலர்களின் பணப் பற்றுச் சீட்டுப் புத்தகங்களை பரவலாகச் சென்று திடீர் திடீரெனப் பரிசோதனைக்கு உள்ளாக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதாக சமுர்த்தி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். கடந்தாண்டும் இத்தகைய குழறுபடிகள் இடம்பெற்று பயனாளிகள் செயலக மட்டத்தில் முறையிட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)

## இலங்கை அணிக்கு பாராட்டு

### சாவகச்சேரி நகரசபையால்

தென்மராட்சி, ஏப்.12
20/20 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியினருக்கு நகர சபையால் பாராட்டுக் கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு நகர சபை உறுப்பினர் ந.திருக்குமரன் நேற்று முன்தினம் நடைபெற்ற சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தனிநபர் வாய்மொழி மூல பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார்.

இதற்குப் பதிலளித்த தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை ஒவ்வொரு வீரரும் தமது திறமைகளை அர்ப்பணிப்புடன் வெளிப்படுத்தி பெரு வெற்றி பெற்றுள்ளனர் என்று பாராட்டினர். (வ-9)

## நாளை குருத்தோலை ஞாயிறு தினம்

கொழும்புத்துறை, ஏப்.12
கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்கள் 'அனைவரும் நாளை ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறு தினத்தை அனுசரிக்கவுள்ளனர்.

இயேசு சிலுவைப்பாடுகளை ஏற்பதற்கு முன்னர் ஜெருசலேம் தேவாலயத்துக்கு வந்த போது விடுதலை வேந்தனாக மக்களால் வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டதை நினைவு கூரும் தினமாக இந்தத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அனைத்துக் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் நாளை காலை மக்கள் குருத்தோலைகளைக் கையில் ஏந்தியவண்ணம் குருவானவரை 'ஓசான்னா' ஆர்ப்பரிப்புடன் ஆலயத்துக்கு பவனியாக அழைத்துச் சென்று திருப்பலி நிகழ்வில் பங்கெடுப்பர். (ஒ-135)

## சமுர்த்தி அலுவலர் வீட்டின் மீது தாக்குதல்

வலி .வடக்கு, ஏப் .12
சமுர்த்தி அலுவலர் ஒருவரின் வீட்டின் மீது இனம் தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக வீட்டின் கண்ணாடிகள் சேதம் அடைந்துள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பகுதியில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலரின் வீட்டின் மீதே குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் புதன் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.


தாக்குதல் சம்பவத்துக்கு உரிய காரணம் தெரியவராத நிலையில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)

# தான் திருமணமானவன் என்பதை பகிரங்கமாக்கினார் நரேந்திர மோடி

## அவரது வெளித்தோற்றம் முகமூடியே என்று எதிர்க் கட்சிகள் விமர்சனம்

புதுடில்லி,ஏப். 12
பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி தான் ஏற்கெனவே திருமணமானவர் என்பதை முதல் முறையாக, வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டிடுவதற்காக அவர் தாக்கல் செய்த மனுவிலேயே தனது மனைவி தொடர்பான தகவல்களை முதல் முறையாக, அதிகாரபூர்வமாக, பகிரங்கமாகப் பதிவு செய்திருக்கிறார்.

குஜராத் முதல்வராக 13 ஆண்டுகளாகப் பதவியில் இருக்கும் நரேந்திர மோடி, இதுவரை தான் போட்டியிட்ட எந்தத் தேர்தலின் போதும் தனது குடும்பப் பின்னணி குறித்த விவரத்தை தெளிவுபடுத்தியது இல்லை. தற்போது நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்காக, குஜராத் மாநிலத்தில் உள்ள வதோர தொகுதியில் கடந்த வியாழக்கிழமை அவர் வேட்புமனுவை தாக்கல் செய்த போது தனக்கு திருமணமான விவரத்தை தெரிவித்துள்ளார். தனது வேட்புமனுவுடன் அவர் தாக்கல் செய்துள்ள படிவத்தில், அவரது மனைவின் பெயர் ஜசோதாபென் என்று குறிப்பிட்டு உறுதிச் சான்று அளித்துள்ளார். ஆனால் விதிமுறைப்படி இவ்வாறு மனைவியின் பெயரைக் குறிப்பிடும் போது அவர் சார்ந்த சொத்து விவரங்களையும் சேர்த்து அளிக்க வேண்டியது கட்டாயம் என்று சட்டம்கூறும்போதும், அதுகுறித்த விவரங்கள் தனக்கு தெரியாது என்று மோடி அந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.


நரேந்திர மோடி

மனைவி பற்றி இதுவரை மௌனம்காத்தமோடி, தொடர்ந்து மூன்று முறையாக குஜராத் மாநிலத்தின் முதல்வராக தற்போது வரை நீடிக்கும் மோடி, இதுவரை தேர்தலில் போட்டி யிடுவதற்காக ஒவ்வொரு முறையும் வேட்புமனுவை தாக்கல் செய்த போதும், தான் திருமணமானவர் என்கிற விவரத்தை அளிக்காமல் அதற்கான பகுதியை வெற்றிடமாகவே விட்டு வைத்துள்ளார்.

முன்னதாக நரேந்திர மோடியின் மனைவி ஜசோதாபென், குஜராத் மாநிலத்தில் வசித்து வருவதாக அவ்வப்போது சில செய்திகள் இந்திய ஊடகங்களில் வெளியானதை அடுத்து காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் தலைவர்கள், இந்த முறை நரேந்திர மோடி தேர்தலில்போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்யும் போது தனது மனைவி குறித்த விவரங்களை தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரி வந்தனர்.

இதனையடுத்து தற்போது நரேந்திர மோடி, தனது வேட்புமனுவை தாக்கல் செய்யும் போது அளித்துள்ள உறுதிமொழியில்தனக்கு ஏற்கெனவே திருமணமான விவரத்தை தெளிவுபடுத்தியுள்ள போதும், அவர் மனைவி சார்ந்த சொத்து விவகாரத்தை அவர் அளிக்காதது புதிய சர்ச்சையை உருவாக்க வாய்ப்பு உள்ளதாகச் சட்டவல்லுநர்கள்கருதுகின்றார்கள்.

இந்நிலையில் இது தொடர்பாக விளக்கம் அளித்துள்ள நரேந்திர மோடியின் சகோதரர் சோமாபாய் மோடி, 50 ஆண்டுகளுக்கு முன்பாக அவரது ஒப்புதல் இல்லாமல் நடைபெற்ற சம்பிரதாய ரீதியிலான திருமணம் அது என்று குறிப்பிட்டுள்ளார். அந்த திருமணம் நடந்த சில நாள்களிலேயே மோடி தனது வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகவும், அதற்குப் பிறகு மனைவி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் யாருடனும் மோடி தொடர்பு கொள்வது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தேசத்துக்காக சேவை செய்வது என்பதை மட்டுமே தனது குறிக்கோளாகக் கொண்டவர் மோடி என்று கூறியுள்ள அவரது சகோதரர், தங்களது பெற்றோர் படிக்காத ஏழைகள் என்பதாலும், 50 ஆண்டுகளுக்கு முந்தைய வாழ்க்கை முறையில், இது போன்று நிர்ப்பந்த நிகழ்வுகள் சம்பிரதாய வாழ்க்கையாக மட்டும் பார்க்கப்பட்டதாலும் இந்தத் திருமணம் நடத்தப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். திருமணம் முடிந்தஉடன் நரேந்திர மோடி தமது வீட்டை விட்டு வெளியேறி விட்டதால், ஜசோதாபென் அவரது பெற்றோர்களுடன் சென்று தங்கி தனது படிப்பை தொடர்ந்தார் என்ற தகவலையும் அவர் தெரிவித்திருக்கிறார்.

**பெண்ணியவாதிகள் விமர்சனம்**

பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி தனது மனைவியை நடத்தியிருக்கும் விதம், பா.ஜ.க. போற்றும் காவியநாயகன் ராமர் தன் நிறைமாதக்கர்ப்பிணி மனைவி சீதையை காட்டுக்கனுப்பிய செயலைப் போன்றது என்கிறார் மனித உரிமை செயற்பாட்டாளர் வழக்கறிஞர் சுதா ராமலிங்கம்.

(த)

"சானியா கேபல் கெயரின் கோடைகால ஸ்பெஷல்"
262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
ஆயுர்வேத வைத்தியசாலை

* கோடைகால விஷேட சருமபராமரிப்பு
* கருமை நிற நீக்கம் உட்பட அனைத்து சருமப் பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வு...
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்
* தலைமுடிசார்ந்த அனைத்து பிரச்சினைகள்
அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரை.
சிறப்புடன் திகழ 0777 351954 முற்பதிவு செய்யுங்கள்.
(46735)

## முதல்வர் பதவியை துறந்தது தவறுதான்

### ஒப்புக்கொண்டார் கெஜ்ரிவால்

புதுடில்லி,ஏப். 12
டில்லி முதல்வர் பதவியை திடீர் முடிவெடுத்து துறந்து தவறுதான் என்றும், தான் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்றும் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில, டில்லி முதல்வராகப் பதவியேற்று 49 நாள்களில் அப்பதவியில் இருந்து விலகினேன். ஜன் லோக் பால் பிரேரணை நிறைவேற்றப்படாததைக் கண்டித்து, அன்றையே தினமே பதவி விலகியது மிகப்பெரிய தவறு.

அதனால், காங்கிரஸ் கட்சியும், பா.ஜ.கவும், ஆம் ஆத்மி கட்சி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தப்பித்துக் கொண்டது என்பது போன்ற தவறான விடயங்களைப் பொதுமக்களிடம் பரப்பிவிட்டன.

பதவி விலகுவது குறித்து முடிவெடுத்த பிறகு, பொதுமக்கள் மத்தியில் கூட்டம் நடத்தி, அவர்களுக்குப் பதவி விலகுவதற்கு காரணம் என்ன என்பதை கூறிவிட்டுப் பிறகு அதைச் செய்திருக்க வேண்டும் என்று கூறினார் கெஜ்ரிவால்.

(த)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் இராசையா லோகநாதன்

(ஓய்வு நிலை கிராம அலுவலர் சுதுமலை வடக்கு ஜே/129)

கடந்த 13.03.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராசையா லோகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.04.2014) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசியூடாகவும் நேரிலும் ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி வழங்கியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (சி/13499) குடும்பத்தினர்

**Aache Hot Food**
இப்பொழுது சாவகச்சேரியிலும் !!!
எமது வாடிக்கையாளர்களின் நலன்கருதி ஆச்சி கொட் பூட் இப்பொழுது சாவகச்சேரியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டுவிழா, பொது வைபவங்களுக்கு ஓடருக்கு உணவு வழங்கப்படும்.
தொடர்பு - 021 205 7455 (சி/13498)
102, கண்டி வீதி,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி நாகலிங்கம் (மணி அக்கா)



புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் பரமேஸ்வரி 09.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - நாகலிங்கம் அவர்களின் மனைவியும், காலஞ் சென்ற வல்லிபுரம்-சிவபாக்கியம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னப்பு - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி இராசம்மா (தாய்மாமன்)தம்பதியரின் மருமகளும், வசந்தி (ஆஸ்திரேலியா), சுசீலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாளன் (ஆஸ்திரேலியா), விஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் காலஞ் சென்ற சிவக்கொழுந்து மற்றும் ஞானேஸ்வரி, இரத்தினசிங்கம், சண்முகநாதன், செல்வரட்ணம் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தர்மராஜன் மற்றும் தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான மனோகராணி, தர்மலிங்கம், நல்லம்மா மற்றும் சாந்தபவானி, ஜெயகுமாரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், திவ்யா (ஆஸ்திரேலியா), பவதாரணி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிள்ளையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'வசந்தி இல்லம்', பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன். (46732)

தகவல்:
குடும்பத்தினர்

# போர்க் குற்றவாளிகளுக்கு விரைவில் பொது மன்னிப்பு

## நேபாளத்தில் புதிய சட்டமூலம்

காத்மாண்டு,ஏப் 12
நேபாளத்தில் உள்நாட்டுப் போரின்போது போர்க்குற்றத்தில் ஈடுபட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்குப் பொது மன்னிப்பு அளிப்பதற் கான சட்டமூலம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. ஆனால் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட வகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேபாள காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் லெகாக் கூறுகையில்,

பாலியல் பலாத்காரம் தவிர ஏனைய குற்றங்களில் ஈடுபட்ட மாவோயிஸ்டுகள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்குப் பொது மன்னிப்பு வழங்க ஆணையம் அமைக்கப் படும். அது தீவிரமாக ஆராய்ந்து பொது மன்னிப்பு வழங்கும்- என்றார்.

நேபாளத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப்போரில் சுமார் 16,000 பேர் உயிரிழந்தனர் என்பது நினைவு கூரத்தக்கது. (த)



# கணவருடன் சண்டையிட்டுக்கொண்டு மகனின் 3 விரல்களை நறுக்கிய தாய்

## சீனாவின் ஷங்காய் நகரில் அதிர்ச்சிச் சம்பவம்

பீஜிங்,ஏப் 12
தமது கணவருடனான வாக்குவாதமொன்றின்போது கோபமடைந்து தனது மகனது 3 விரல்களை இறைச்சி வெட்டும் கத்தியால் வெட்டிய பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

ஷங்காய் நகரைச் சேர்ந்த மிங்மியி சண் (வயது-34) என்ற பெண்ணே தமது மகனது விரல்களை வெட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினம் தமது மகனது வீட்டுப் பாடங்களைச் செய்வதற்கு உதவக் கணவன் ரியு (வயது-38) உரிய நேரத்தில் வராதமையால் மிங்மியி சண் தனது 8 வயது மகனது வீட்டுப்பாடங்களைக் கவனிக்க நேர்ந்துள்ளது.

இந்நிலையில் ரியு வீடு திரும்பியதும் அவருக்கும் மிங்மியிக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது ரியு தனது படுக்கையறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொள்ளவும் மிங்மியி கோபமிகுதியால் தமது மகனின் 3 விரல்களை வெட்டியுள்ளார்.

இதனையடுத்து உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுவனுக்கு உடன் அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் வெட்டித் துண்டாக்கப்பட்ட விரல்களை மீண்டும் வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளனர்.

இது தொடர்பில் சிறுவனுக்கு சிகிச்சையளித்த மருத்துவரான மேயிலிங் (வயது-52) விவரிக்கையில்;

வலியால் கதறிக்கொண்டிருந்த சிறுவனை அவனது தந்தையே மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு வந்ததாகவும் தந்தை புத்திசாதுரியமான முறையில் செயற்பட்டுச் சிறுவனின் வெட்டப்பட்ட விரல்களை ஐஸ் கட்டியுடன் வைத்துத் துணியால் சுற்றி எடுத்து வந்ததாலேயே அவனது விரல்களை மீளப் பொருத்துவது சாத்தியமானதாகவும் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் வியாழக்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளன. (த)

# விமானத்தைத் தேடும் பரப்பு குறைக்கப்பட்டது

பேர்த்,ஏப் 12
காணாமல்போன மலேசியன் எயார்லைன்ஸ் விமானம் தேடப்படுகின்ற இடத்தின் பரப்பளவு இதுவரை இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது என ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட் கூறியுள்ளார்.

கடந்த சில நாள்களாகக் கடலுக்கடியில் இருந்து வந்த ஒலிச் சமிக்ஞைகள் விமானத்தின் பதிவுக் கருவியில் இருந்துதான் வந்திருக்கும் என்ற நம்பிக்கை தனக்கிருப் பதாக, சீனாவில் வர்த்தக நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற நேரத்தில் செய்தியாளர்களிடம் அபாட் கூறினார்.

இந்த விமானத்தின் சிதிலங்களை இப்போது மொத்தம் 47 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட, குறிப்பாக இரண்டு இடங்களில் மட்டுமே தேடி வருகின்றனர்.

இவ்விடங்கள் பேர்த் நகருக்கு வட மேற்காக சுமார் இரண்டாயிரம் கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றன.

கறுப்புப் பெட்டி பதிவுக் கருவியின் மின் கலங்கள் கிட்டத்தட்ட செயலிழந்துபோகும் அளவுக்கு வந்துவிட்ட நிலையில், அவை முழுதாக தீர்வதற்குமுன் கருவி இருக்கும் இடம் பற்றி கூடிய அளவு அதிகமான விவரங்களைச் சேகரிக்கத் தேடலில் ஈடுபட்டுள்ள அணிகள் விரும்புகின்றன. (த)



ஹிலாரி கிளின்டன்

# ஹிலாரி மீது செருப்பு வீச்சு

நியூயோர்க்,ஏப் 12
அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் மாண்டலே பே ஹோட்டல் ஒன்றில் ஹிலாரி கிளின்டன் உரையாற்றிக்கொண்டிருந்த போது அவர் மீது ஒரு பெண் தன் காலணியைத் தூக்கி வீசியுள்ளார்.

அந்தப் பெண்ணை உடனடியாகக் ஹோட்டல் பாதுகாவலர்கள் மற்றும் அமெரிக்க ரகசிய சேவை முகவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற்றினர். விசாரணையில் அவர் டென்வர் நகரை சேர்ந்த இலென் ரோசன் என தெரிய வந்தது. அவர் ஏன் ஹிலாரி மீது செருப்பு வீசினார் எனத் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்துக்கு பிறகும் கிளின்டன் தனது பேச்சைத் தொடர்ந்து நிகழ்த்தினார் என அமெரிக்க ரகசிய சேவை செய்தி தொடர்பாளர் ஜோர்ஜ் கூறியுள்ளார். (த)




அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இடம்பெற்ற மிக மோசமான வாகன விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். அமெரிக்க உயர்தரப் பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றுகொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்றும் பொதிகளை ஏற்றியிறக்கும் நிறுவனம் ஒன்றின் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்தப் பயங்கர விபத்து இடம்பெற்றது.

# மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு ஐ.நா. அமைதி காக்கும் படை

நியூயோர்க்,ஏப் 12
மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு அமைதி காக்கும் படையினரை அனுப்ப ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த நிலையில் அங்கு 12 ஆயிரம் துருப்பினர் அனுப்பி வைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் தற்போது திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அமைதி காக்கும் படையினருக்கு மேலதிகமாக 2 ஆயிரம் பிரான்ஸ் படையினரையும் அங்கு அனுப்பப் பாதுகாப்புச் சபை அனுமதித்துள்ளது.

**அமைதி காக்கும் படையினருக்கு மேலதிகமாக 2 ஆயிரம் பிரான்ஸ் படையினரையும் அங்கு அனுப்பப் பாதுகாப்புச் சபை அனுமதி அளித்துள்ளது.**

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்று வரும் கடும் வன்முறைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

மேலும் அங்குள்ள மக்களில் கால் பங்கு மக்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஜப்பானின் திமிங்கில வேட்டை வந்தது முடிவுக்கு

ரோக்கியோ,ஏப் 12
அந்தாட்டிக் பகுதியில் ஜப்பான் திமிங்கில வேட்டையில் ஈடுபடுவதற்கு ஹேக் நகரில் செயல்பட்டு வரும் சர்வதேச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதனால் கடந்த 3 மாதங்களில் 251 திமிங்கிலங்களைக் கொன்றொழித்த ஜப்பானின் திமிங்கில வேட்டை கடந்த புதன்கிழமை முடிவுக்கு வந்தது.

கடந்த 25 ஆண்டுகளாக, ஆராய்ச்சிப் பணிகளுக்கு என்ற பெயரில் அந்தாட்டிக், வடமேற்கு பசிபிக் கடல் பகுதிகளில் ஜப்பான் திமிங்கில வேட்டையில் ஈடுபட்டு வந்தது. ஆனால், அந்த வேட்டையில் கொல்லப்படும் பெரும்பாலான திமிங்கிலங்கள் ஆய்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

மாறாக, பெரிய உணவு விடுதிகளில் உணவாகப் பரிமாறப்படுகின்றன.

இந்த வருடம் ஜனவரி 3ஆம் திகதி முதல் மார்ச் 13ஆம் திகதி வரை நடந்த வேட்டையில் 251 திமிங்கிலங்கள் கொல்லப்பட்டுள்ளன. இதுகடந்தஆண்டை விட இரண்டு மடங்கு அதிகமாகும். கடந்த ஆண்டில் 103 திமிங்கிலங்கள் மட்டுமே கொல்லப்பட்டன.

'சர்வதேச திமிங்கில வேட்டை ஆணையகத்தில் உறுப்பினராக இருக்கும் ஜப்பான், தன்னுடைய இந்தத் திமிங்கில வேட்டை அறிவியல் ஆய்வுகளுக்காக நடத்தப்பட்டாலும், ஒரு பகுதி உணவுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மையை ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஆணையகத்தின் கீழ், ஜப்பானிய மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகக் குறைந்த அளவில் திமிங்கில வேட்டையை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜப்பானின் இந்தத் திமிங்கில வேட்டையைப் பல நாடுகளும் எதிர்த்து வந்தன. எனவே, நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரத்தில் உள்ள ஐக்கிய நாடுகளின் சர்வதேச நீதிமன்றம், அந்தாட்டிக் பகுதியில் திமிங்கில வேட்டையில் ஈடுபட ஜப்பானுக்குக் கடந்த வாரம் தடை விதித்தது. இதனால் சுமார் 25 ஆண்டுகளாக அந்தாட்டிக் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த திமிங்கில வேட்டையை முதன்முதலாக நிறுத்தியிருக்கிறது ஜப்பான்.

எனினும், சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு வடமேற்கு பசிபிக் பகுதியில் ஜப்பான் மேற்கொண்டிருக்கும் திமிங்கில வேட்டையை எவ்வகையிலும் பாதிக்காது. அங்கு கடலிலும், கரையோரத்திலும் கோடைக் காலம் தொடங்கி குளிர் காலம் வரை திமிங்கில வேட்டை நடைபெறும். கடந்த ஆண்டு 58 திமிங்கிலங்கள் ஆழ் கடலிலும், 132 திமிங்கிலங்கள் கரையோரத்திலும் வேட்டையாடப்பட்டன. (த)

## ஏழாம் வார வெற்றியாளர்கள் (06.04.2014)

# வாரம் 50 பரிசுகள்

பரிசு மழை
யில் நனையுங்கள்

உதயன் சூரியகாந்தி

வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

## MCS IT CAMPUS

34, Sir Pon Ramanathan Road,
Jaffna. 021 222 4070

**10,000/=** பெறுமதியான **10** பரிசு கூப்பன்கள்

**01. புவனேஸ்வரன் செல்வநாயகி,**
121, வள்ளுவர்புரம், விசுவமடு.
**02. குணராசா விஜிதன்,**
6 ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை.
**03. தர்சனா கணேசலிங்கம்,**
இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
**04. சிவகுமாரன் சயந்தன்,**
208, ஹொரவப்பொத்தானை வீதி, வவுனியா.
**05. கோபாலகிருஷ்ணன் புகழரசன்,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**06. திருமதி சுமதி இராசகுமார்,**
சிவநகர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**07. செல்வி பிறிற்ரிகா அன்ரனி ஞானறாஜ்,**
'பிரபை மஹால்' உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
**08. செல்லையா தம்பு,**
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
**09. கார்த்திகேயன் சசிதரன்,**
சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கு.
**10. மரியதாஸ் டெனிஸ்ரா,**
மூன்றாவது மைல்கல், சிலாவத்தை, முல்லைத்தீவு.

## E.com computer training center

**3,500/=** பெறுமதியான **10** பரிசு கூப்பன்கள்

**01. முத்தையா ஜெகறோம்,**
17/2 மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
**02. திருநாவுக்கரசு சிவானந்தன்,**
இல.01, கந்தப்பிள்ளை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
**03. அர்த்ததாஸ் கேஸ்வின்,**
இல. 113/2, மல்லாவி.
**04. டக்ளஸ் கிரிஜென்,**
இல.113/2 அனிஞ்சியன் குளம், மல்லாவி.
**05. தேவராசா கனுஜன்,**
4 ஆம் ஒழுங்கை, கோயில்குளம், வவுனியா.
**06. புண்ணியமூர்த்தி பார்த்தீபன்,**
கஸ்தூரி டெக்ஸ்டயில், முள்ளியவளை சந்தை, முள்ளியவளை.
**07. திருமதி மலர்விழி சுதாகர்,**
8 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
**08. திருமதி இராஜேஸ்வரி பால்ராஜா,**
பறாளை வீதி, சுழிபுரம்.
**09. துரைரெட்ணம் விதூசன்,**
பொலிஸ் வீதி, முதலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
**10. தாமோதரம்பிள்ளை செல்வநாதன்,**
மேதர்ஸ் லேன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

## NALIN Information Technologies Pvt Ltd.

**5,000/=** பெறுமதியான **02** பரிசு கூப்பன்கள்

பரமேஸ்வராச் சந்தி
யாழ்ப்பாணம்.

**01. அருள்நந்தி அபினா,**
சந்தை வீதி, உடுப்பிட்டி.
**02. சின்னத்தம்பி தவராஜா,**
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## GERMAN INSTITUTE

Mrs.Kajenthini
No.10 Palaly Road Jaffna.

**5,000/=** பெறுமதியான **5** பரிசு கூப்பன்கள்

**01.கோபாலகிருஷ்ணன் நேருகா,**
'அ'பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**02. அ.அக்னா,**
இல. 87, பழம் வீதி, வலி.தென்மேற்கு, ஆனைக்கோட்டை.
**03. திருமதி அகலதீபன் வசந்தகுமாரி,**
சரசாலை தெற்கு, தும்பு தொழிற்சாலை வீதி, சாவகச்சேரி.
**04. ஞானசம்பந்தன் செந்தமிழ்செல்வன்,**
குப்பிளான் தெற்கு, ஏழாலை.
**05. தங்கராஜா ரதிகலா,**
இன்னாவத்தை , கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.

# வெற்றி நிச்சயம்

**200/=** பெறுமதியான **12** பரிசு கூப்பன்கள்

மோகன் ஸ்ரோர்ஸ்
ஏ-9 வீதி, பளை.

கனன் போட்டோ
பருத்தித்துறை

பொதிகை மல்ரி சென்ரர்
புதுக்குடியிருப்பு

**01. சிதம்பரம் அன்னலிங்கம்,**
நெல்லியான் வீதி, கல்விளான், சுழிபுரம்.
**02. டீன் அஸ்வின்,**
58, செபஸ்ரியன் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
**03. கந்தையா சிவகுமார்,**
எல்லை ஒழுங்கை, கற்கோவளம், பருத்தித்துறை.
**04. வரதா வரதன்,** உப்புக்குளம், மன்னார்.
**05. திருமதி கமலாவதி வன்னியசிங்கம்,**
இல.5/11, A.V 3.ஆம் ஒழுங்கை, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.
**06. ஜீவிதா கணேசன்,**
39/ 26, புவனேஸ்வரி வீதி, அரியாலை கிழக்கு, நல்லூர், யாழ்ப்பாணம்.
**07. நாகேஸ்வரன் கல்யாணி,**
இல.18/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்,
**08. வெர்ஜின் ஐஸ்வர்யா றெஜினோல்ட் கிறிஸ்ரோபர்,**
மூன்றாம் ஒழுங்கை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
**09. ம.டிசாந்தினி,** 14/55 உப்புக்குளம், மன்னார்.
**10. திருச்செல்வம் திரிஜா,**
55/17 உப்புக்குளம் தெற்கு, மன்னார்.
**11. திருநாவுக்கரசு அருளினி,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**12.இரவீந்திரன் சுயதாயினி,**
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

உதயனுடன் இணைந்திருக்க
மறவாதீர்கள்

## THABESHAN AGRO STORE

Palaly Rd, Kondavil Junction.
0776244858

NALIN Information Technologies Pvt Ltd.
பரமேஸ்வராச் சந்தி
யாழ்ப்பாணம்.

அபி பேபி மாட்ஸ்
55. கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம்.

வணிகா சேர்ஜிகல்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**500/=** பெறுமதியான **11** பரிசு கூப்பன்கள்

**01. திருமதி சுந்தரலிங்கம் ரஞ்சினி,**
தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.
**02. பாலசுந்தரம் சுவர்ணகுமார்,**
மாவடிப்பிள்ளையார் கோயிலடி, மீசாலை கிழக்கு, மீசாலை.
**03. ஜெயரத்தினம் சசீலா,**
தச்சன்தோப்பு, கைதடி.
**04. வித்தியசாளினி ஸ்ரீகாந்தன்,**
இல.30, குளப்பிட்டி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
**05. ரவீந்திரன் அச்சயன்,**
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
**06. அம்பலவாணர் திருஞானசம்பந்தமூர்த்தி**
'அ' பகுதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு.
**07. ர.ரமில்டன்,**
மன்குழி வீதி, ஊர்காவற்றுறை.
**08. கனகரத்தினம் மேதிலி,**
80/08 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
**09. சுந்தரலிங்கம் சுவாநந்தினி,**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**10. இரத்தினசபாபதி குலசிங்கம்,**
5 ஆம் வட்டாரம், நயினாதீவு.
**11. யோசேப் யோகராசா,**
367, 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

# சிறு தானிய, ஊடு பயிர்ச் செய்கையில் விவசாயிகள் அக்கறை காட்ட வேண்டும்

## வவுனியா விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை

வவுனியா, ஏப்.12

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான சூழ்நிலை நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதற்கு மாற்றீடாக சிறு தானிய பயிர்ச் செய்கை, ஊடு பயிர்ச் செய்கை போன்றவற்றில் விவசாயிகள் அக்கறை செலுத்த வேண்டும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வவுனியாமாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகீலாபானு.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



தென்னம் கன்றுகளுக்கு இடையே ஊடு பயிராக அன்னாசி செய்கை



மஞ்சள் பயிர்

இம்முறை ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே அவற்றை ஈடு செய்ய சிறு தானிய, ஊடு பயிர்ச் செய்கையே ஏதுவானதாக இருக்கும். வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத் திணைக்களத்தினராகிய நாம் பல்வேறு நுட்பங்களை அறிமுகப்படுத்தி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படாத வகையில் பயிர்ச் செய்கை முறைகளை அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக ஊடு பயிர்ச் செய்கை முறை இதில் முக்கியமானது. வவுனியா மாவட்டத்தில் உள்ள முருகனூர் விவசாயப் பண்ணையில் தென்னங்கன்றுகளுக்கு இடையே ஊடு பயிராக மேற்கொள்ளப்பட்ட அன்னாசிச் செய்கை வெற்றி கண்டுள்ளது.

இதனைப் போல வவுனியா புளிதறித்த புளியங்குளம் பகுதியில் மஞ்சள் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு சிறந்த விளைச்சல் பெறப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள், விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளைப் பெற்று இழப்புக்களிலிருந்து விடுபட முடியும் - என்றார். (ஐ-421)



கோப்புப்படம்

## சந்தன மரக் கன்றுகள் அன்பளிப்பு

கிளிநொச்சி, ஏப்.12

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கும் "எதிர் காலத்தின் பசுமை உலகம்" அமைப்பினரால் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு சந்தன மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி கிளிநொச்சி வலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விசேட தேவையுடைய 16 மாணவர்களுக்கு சந்தன மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

இவை ஒவ்வொன்றும் 1,200 ரூபா பெறுமதியானவை எனவும் தொடர்ச்சியாகப் பாடசாலைகள் தோறும் சந்தன மரக் கன்றுகள் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-18)

## காணிகளுக்கு உறுதிகளை வழங்குமாறு கோரிக்கை

வவுனியா, ஏப்.12

வவுனியாவில் காணிகளுக்கு உறுதிகளை வழங்கும் நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் அக் கறை செலுத்துவதில்லையெனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெயர்ந்து வவுனியாவில் வசித்து வரும் குடும்பங்கள் பலவற்றுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 23 வருடங்கள் ஆகியும் இதுவரை அதற்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காணிகளில் பலவற்றை தற்போது இராணுவத்தினர் கையகப்படுத்தி வருவதாகவும், தனியாரும் அபகரித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த நிலையில் தமக்குக் காணிக் கச்சேரி நடத்தி உரிய வகையில் அதற்கான உறுதிப் பத்திரங்களை வழங்க வேண்டுமென மக்கள் கோரி வருகின்றனர்.

ஓமந்தை, செட்டிகுளம், பம்பைமடு, நேரியகுளம், பூவரசங்குளம், மகாறம்பைக்குளம், கற்பகபுரம் போன்ற கிராமங்களிலேயே இவ்வாறான நெருக் கடிகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-402)



வாழ்வின் எழுச்சி விற்பனைச் சந்தையை அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர பார்வையிடுகின்றார்.

## ஒட்டுசுட்டானில் யானைகளின் தொல்லை

கிளிநொச்சி, ஏப்.12

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் யானைகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முத்தையன்கட்டு, புளியங்குளம், கனகரத்தினபுரம், மேழிவளம், கரிப்பட்ட முறிப்பு ஆகிய கிராமங்களில் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடம் மேற்படி கிராம மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இரவு பகல் வேறுபாடின்றி குடியிருப்புகளுக்குள் பிரவேசிக்கும் யானைகள் பயன் தரும் மரங்களை முறித்தும், பயிர்களை அழித்தும் அட்டகாசம் புரிவதாகத் தெரிய வருகின்றது. (ஐ-18)

## புது வருடச் சந்தை

வவுனியா, ஏப்.12

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் சமுர்த்தி அதிகார சபையினால் புது வருடத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வாழ்வின் எழுச்சி விற்பனைச் சந்தை கடந்த வியாழக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலாளர் க.உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர மற்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டு சந்தை நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த சந்தை தொடர்ந்து இரண்டு தினங்கள் நடைபெற்றது. (ஐ-421)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, ஏப்.12

வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை கைத்தொழில் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு வழங்கி உள்ளது.

கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தில், மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.எம். சிசிர சௌவிரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ-421)

## புலமைப் பரிசில் கொடுப்பனவு

வவுனியா, ஏப்.12

வவுனியா மாவட்டத்தில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் பல்லைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 117 மாணவர்கள் தமக்கான புலமைப் பரிசிலை பெற்றுக் கொண்டனர்.

மஹாபொல கொடுப்பனவை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவும் கலந்துகொண்டார். (ஐ-402)

## வவுனியாப் பிரதேச செயலகத்தின் சேவைக்கு அமைச்சர் பாராட்டு

வவுனியா, ஏப்.12

வவுனியாப் பிரதேச செயலகம் சிறப்பாக செயற்படுவதால் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாப் பிரதேசத்தில் வாழ்வின் எழுச்சி விற்பனை சந்தை நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாப் பிரதேச வளர்ச்சிக்கும் மக்களது தேவைகளுக்கும் ஏற்ற வகையில் பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது. இதில் பிரதேச செயலர் க.உதயராசாவின் பங்கு காத்திரமானது.

எனவே அவருடன் சக உத்தியோகத்தர்களும், சமூக அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதன் மூலம் அரசால் வழங்கப்படுகின்ற உதவிகள் மற்றும் திட்டங்களை உரிய முறையில் மக்களுக்குச் சென்றடைய வைப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ-421)

## வற்றி வரும் கிணறுகள் விவசாயிகள் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஏப்.12

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் நிலத்தடி நீரை நம்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கிணறுகளில் தண்ணீர் வற்றியமையால் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

பருவ கால மழை பெய்யாமையினால் கிணறுகளின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

இதனால் கிணறுகளை நம்பி விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர். மேட்டு நிலப் பயிர்கள் கூடுதலாகச் செய்கை மேற்கொள்ளப்படும் ஒட்டுசுட்டான், நெடுங்கேணிப் பகுதி விவசாயிகளே இவ்வாறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-18)

## பூநகரியில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க பிரதேச சபை துரித நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப்.12

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச சபையின் ஊடாக குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைக்கான எரிபொருள் செலவுக்காக இந்த வருடத்தில் 10 லட்சத்து முப்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பூநகரிப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி மேரி மெற்றலீன் சிவகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் தொடர்ந்தும் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இது குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசம் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிறைந்த பகுதியாகும். இங்குள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலை நிலவி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசம் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிறைந்த பகுதியாகும். இங்குள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டிய நிலை நிலவி வருகின்றது.

குறிப்பாக இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை சுமார் எழுபதாயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டியுள்ளது. குடிதண்ணீர் விநியோகத்துக்கான பவுஸர்களின் எரிபொருள் செலவு போதாமையால் கடந்த காலங்களில் நெருக்கடிகள் ஏற்பட்டன. எனவே இம்முறை இதற்கென திட்டமிடப்பட்டு எரிபொருள் செலவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ-55)



அழிக்கப்பட்ட உணவுப் பொருள்கள்

## உணவகங்களில் சோதனை; பொருள்கள் எரியூட்டி அழிப்பு

கல்முனை.ஏப்.12

கல்முனை, கடற்கரைப் பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள ஹோட்டல்கள், உணவகங்கள், விற்பனை நிலையங்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திடீர் பரிசோதனை கல்முனை மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி எம்.சி.எம்.மாஹிர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனையில் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு, பொது மக்களின் நுகர்வுக்கு உதவாத உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதுடன் அவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உணவுப்பொருள்கள் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக வளாகத்தில் வைத்து எரியூட்டி அழிக்கப்பட்டன. தற்போது கல்முனை கடற் கரைப்பள்ளிவாசல் திருவிழா இடம்பெற்று வருவதால் நாளாந்தம் பல்லாயிரக் கணக்கான மக்கள் அதில் கலந்து கொள்கின்றனர். (ச)

## துப்பாக்கி சூட்டில் இளைஞன் சாவு

கொழும்பு.ஏப்.12

கதிர்காமம் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் கதிர்காமம் நகரத்தில் அமைந்துள்ள தொடர்பாடல் மத்திய நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச)

# தமிழ் மக்கள் புறக்கணிப்பு

### மின்குமிழ்கள் கூடக் கிடைப்பதில்லை என்கிறார் கல்முனை மாநகரசபை எதிரணித் தலைவர்

எருவில்.ஏப்.12

அம்பாறை, கல்முனையில் உள்ள தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். கல்முனை மாநகர சபை பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களில் மின்விளக்குகளுக்கு பொருத்துவதற்காக ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு தொகை மின்குமிழ்கள் வழங்கப்படுவது வழமை.

ஆனால் இதுவரைக்கும் எனக்கு வழங்கப்படவேண்டிய மின்குமிழ்கள் வழங்கப்படவில்லை.

இவ்வாறு கல்முனை மாநகர சபையின் எதிரணித் தலைவர் அ.அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

கல்முனை மாநகர சபையினால் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய தேவைகள் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> "தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவையை என்னால் முழுமையாக செய்ய முடியாமல் உள்ளது.

எனக்கு வழங்கப்பட வேண்டிய மின்குமிழ்களை இந்த வருட ஆரம்பத்தில் இருந்து கல்முனை மாநகர முதல்வரிடம் நான் கேட்டு வந்துள்ளேன்.

அதனைத் தருவதாக உறுதி அளித்திருந்தும் இதுவரைக்கும் எனக்கான எந்தவொரு மின்குமிழ்களும் வழங்கப்படவில்லை.

நேற்றுமுன்தினம் மின்குமிழ்களைப் பெறுவதற்காக நான் கல்முனை மாநகரசபைக்கு சென்று கேட்டபோது முதல்வரின் பிரத்தியேக செயலர் எனக்குரிய மின்குமிழ்கள் வழங்கப்பட்டு விட்டதாகக் கூறினார்.

இதுதொடர்பாக நான் அவரிடம் விளக்கம் கேட்டபோது எனக்குத் தரவேண்டிய மின்குமிழ்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

இதனால் எனது பிரதேசத்துக்குட்பட்ட தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவையை என்னால்முழுமையாக செய்ய முடியாமல் உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு முதல்வரின் திட்டமிட்ட செயற்பாடுகள் தான் காரணமா? அல்லது அங்கு பணியாற்றும் உயர் அதிகாரிகளின் செயற்பாடுகள் தான் காரணமா? என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது- என்றார். (ச-31)

## உலக வங்கி பிரதிநிதிகள் குழு கிண்ணியா வருகை

திருகோணமலை.ஏப்.12

வாழ்வெழுச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கிண்ணியா நகர சபைக்குட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வு சம்பந்தமாக பார்வையிட்டு அறிக்கை தயாரிப்பதற்காக உலக வங்கி பிரதிநிதிகள் குழு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கிண்ணியாவுக்கு வருகை தந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டையாறு பூங்கா, சின்னக் கிண்ணியா மரக்கறிச் சந்தை, துறையடியில் அமைக்கப்பட்டு வரும் விருந்தினர் விடுதி, றஹ்மானியா சிறுவர் பூங்கா ஆகிய அபிவிருத்தித்திட்டங்களை குழுவினர் பார்வையிட்டதோடு அவற்றை மிக விரைவாக நிறைவு செய்ய வேண்டிய தேவை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் குழுவினர் குறித்த திட்டங்களின் குறை, நிறைகள் தொடர்பான கருத்துக்களை பொதுமக்களிடமும் கேட்டறிந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கிண்ணியா நகர சபை உதவியாளர் எம்.எம். ஹில்மி, திருமலை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உட்படபலர் கலந்துகொண்டனர். (ச)

## டெங்கைக் கட்டுப்படுத்த மூடப்பட்டன பாடசாலைகள்

### காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவல்கம் அறிவிப்பு

காத்தான்குடி.ஏப்.12

காத்தான்குடியில் டெங்கு நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு காத்தான்குடியின் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அரச மற்றும் தனியார் பாடசாலைகள் மற்றும் பிரத்தியேக கல்வி நிலையங்கள் என்பவற்றை மறுஅறிவித்தல் வரை மூடுமாறு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் துண்டுப் பிரசுரம் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நசிர்தீனினால் கையொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மைக்காலமாக காத்தான்குடிப் பிரசேத்தில் டெங்கு நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், அதிகளவில் மாணவர்கள் பாதிக்கப்பட்டமை இனங்காணப்பட்டது.

டெங்கு நோயால் பல மாணவர்கள் வைத்திய சாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரை காத்தான்குடிப் பிரதேசத்தில் 25 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் புதியகாத்தான்குடிப் பிரதேசத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்த அறிவித்தல் காத்தான்குடியிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாசல்கள் மற்றும் பள்ளிவாசல்களின் ஒலி பெருக்கிகளில் அறிவிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**வாடகைக்கு**

கொழும்பில் சகல வசதிகளுடன் கூடிய இடம் தங்குவதற்கு உண்டு. புகையிரத நிலையம், கொழும்பு மத்திய பஸ்நிலையம் போன்ற சகல போக்குவரத்து வசதிகளுடன் கூடிய இடம்.

★ தனிநபர் தங்குவதற்கு - 300/= வீதம்
★ இரண்டு பேர் - 600/= வீதம்
★ மூன்று பேர் - 900/= வீதம்
★ நான்கு பேர் - 1200/= வீதம்

(46710) (45.6.3)

என அறவிடப்படும். இன்றே விஜயம் செய்து பார்க்கவும்

தொடர்பு: 176, சென்றல் றோட், ஐந்துலாம்பு சந்தி அருகில்.

**வேலைத்தள மேற்பார்வையாளர்களுக்கான இலவச பயிற்சிநெறி**

மேற்படி பயிற்சி நெறியானது. இலங்கை பொறியியலாளர் சங்கம் வடமாகாண கிளையும் யாழ் முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து Holcim Lanka (Pvt) Ltd. நிறுவன அனுசரணையுடன் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. தகுதியான விண்ணப்பதாரிகள் 01.05.2014ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பயிற்சி நெறிக்கான அடிப்படைத் தகைமை:
நிர்மாணசார் கற்கைநெறி ஒன்றைப் பூர்த்தி செய்தவராகவோ அல்லது கற்றுக் கொண்டிருப்பவராகவோ இருப்பதுடன் அரச நிறுவனங்களில் அல்லது ICTAD அனுமதிபெற்ற தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவராக இருத்தல் வேண்டும்.

* பயிற்சி நெறி முடிவில் தகுதியானவர்களுக்கு தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
* விரிவுரைகள் - அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களினால் வழங்கப்படும்.

பயிற்சி நெறிக்கான காலம் : 40 மணித்தியாலங்கள்
நேரம் : 2.00 மணி - 6.00 மணி வரை (10 தொடர்ச்சியான சனிக்கிழமைகள்)
இடம் : யூரோவில் மகாநாட்டு மண்டபம்,
#17, கமத்தொழில் சேவைகள் வீதி, நல்லூர்.
தொலைபேசி : 021 222 7012

சுயவிவரக்கோவையை அனுப்ப வேண்டிய முகவரி:
யூரோவில் மகாநாட்டு மண்டபம்,
#17, கமத்தொழில் சேவைகள் வீதி, நல்லூர்.

மேலதிக விபரங்களுக்கு:
பொறியியலாளர் என்.நந்தருபன்
செயலாளர் - இலங்கை பொறியியலாளர் சங்கம் (வடமாகாணம்) 077 388 0590
(46708)(7.6.3)

**இலவச வகுப்புகள்**

யாழ் நகரில் (North Lead இல்) வலைப்பூ (Google, Wordpress Blogs) வடிவமைப்பு வகுப்புகள் 19.04.2014 3.00p.m தொடங்குகிறது. மாணவர்கள் முற்பதிவு செய்ய வேண்டும். (46641) (7.6.3)

பார்வையிட:
http://wp.me/pTOfc-9V
தொடர்பு: 077 656 4693

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 18ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற
செல்வி யாழினி சிவராசா
அவர்கள் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் நலமாக வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி.ஞானச்சந்திரன்.
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
(47669)(12.6.3)

**பழைய மாணவர் சங்கம்**
**யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

மேற்படி பழைய மாணவர் சங்ககூட்டம் தலைவர் அ. குமாரசிவம் அவர்களின் தலைமையில் நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

காலம்: 2014.04.19 சனிக்கிழமை
நேரம்: பி.ப. 2.00 மணி
இடம்: பாடசாலை மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| 01. இறைவணக்கம் | 02.தலைமை உரை |
| 03.செயலாளர் அறிக்கை | 04.செயற்பாட்டு அறிக்கை |
| 05.பொருளாளர் கணக்கறிக்கை | 06.புதிய வருட நிர்வாகிகள் தெரிவு |
| 07.வேறு விடயங்கள் | 08.நன்றி உரை |

குறிப்பு: புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் பொதுக்கூட்ட தினத்தன்று அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

அ.குமாரசிவம்
தலைவர்.

க.மாலினி
செயலாளர்.
(46642) (3.6.4)

# காலவரையறை இன்றி பகிஷ்கரிப்பு நடத்தப்படும்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.12

காலவரையறையின்றி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கோரி இவ்வாறு அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவர்களின் சேவை தொடர்பிலான முன்மொழிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

இந்த முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள இடமாற்றம், சம்பள உயர்வு, விடுமுறை போன்ற பல்வேறு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் எனவும், தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் காலவரையறையின்றிப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட நேரிடும் என்றும் அரச மருத்துவர் பேரவை அறிவித்துள்ளது. (ச)

> " மருத்துவர்களின் சேவை தொடர்பிலான முன்மொழிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.



அபுதாபியிலிருந்து வந்த ரொடானா ஜெற் விமானம் அம்பாந்தோட்டை மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போது ரொடானாஜெற் நிறுவனத் தலைவர் ஷேக் அஹமட் பின் ஸைப் அல் நஹயான் வரவேற்று அழைத்து வரப்படுகின்றார். அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், பிரியங்கர ஜயரத்ன,ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதர் அப்துல் ஹமீட் அப்துல் பதாஹ் காதிம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# 300 மாணவர்களின் பெறுபேறு நிறுத்தம்

கொழும்பு,ஏப்.12

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய 300 மாணவர்களின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படாமல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இவ்வாறு பெறுபேறுகள் வெளியிடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்காமை, மாணவர்கள் தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் செய்த முறைப்பாடுகள் போன்ற காரணங்களால் இவ்வாறு பெறுபேறுகளை வெளியிடுவது இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்வதற்கான விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

விசாரணைகளின் பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக தீர்மானிக்கப்படும்

இன்னமும் இரண்டு வாரங்களில் இந்தப் பெறுபேறுகளை வெளியிட முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச)


# நாடாளுமன்ற அமர்வுகள் மே முதல் நேரடி ஒளிபரப்பு

## சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.12

நாடாளுமன்ற அமர்வுகள், எதிர்வரும் மே மாதம் முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி விவாதங்கள் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன.



சமல் ராஜபக்ஷ

இந்த விவாதத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரியாதையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் நடத்தைகள் காரணமாக நேரடி ஒளிபரப்புக்குத் தடை விதிக்கப்பட்டது.

எனினும் தற்போது இவ்வாறான தவறான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் தவறான நடத்தைகள் இடம்பெறுமாயின் சபாநாயகர், தனது மேசையிலுள்ள பொத்தானை அழுத்தினால் அந்த நடத்தையின் நேரடி ஒளிபரப்பு தணிக்கை செய்யப்படும்.

என்னிடம் விசேட பொத்தான் உள்ளது. எவரேனும் தேவையற்றதைப் பேசினால் நான் அந்தப் பொத்தானை அழுத்தி ஒளிபரப்பில் தணிக்கை ஏற்படுத்துவேன் என்று சபாநாயகர் தெரிவித்தார். (ச)

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்ற நபர் கைது

கொழும்பு,ஏப்.12

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைவஸ்துப் பாவனையை ஊக்குவித்து அவர்களுக்கு ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த 21 வயது இளைஞர் ஒருவரை வாரியபொல பொலிஸார் கைது செய்துள்ளனர்.



கோப்புப்படம்

சந்தேகநபரிடமிருந்து 30,000 ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் வாரியபொல நகரில் இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் மறைந்திருந்து குறிப்பிட்ட சந்தேக நபரைக் கைது செய்து சோதனை செய்தபோது, அந்த நபர் மறைத்து வைத்திருந்த ஹெரோயினைக் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் கொழும்பு, பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் பிரபலமான ஹெரோயின் விற்பனையாளர் என்று தெரியவந்துள்ளதுடன், வாரியப்பொலவில் இவரிடம் ஹெரோயின் கொள்வனவு செய்யும் இரு பாடசாலை மாணவர்கள் குறித்தும் சந்தேகநபர் பொலிஸாரிடம் தகவல் தெரிவித்துள்ளார். (ச)

# அதிகளவில் மதுபானம் அருந்தும் நாடுகளில் இலங்கை 4 ஆம் இடம்

## ஆய்வில் தகவல்

கொழும்பு.ஏப்.12

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்துவோரைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நபர்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் செக்குடியரசு முதலாம் இடத்தை வகிக்கின்றது.

இலங்கையில் மதுபானம் அருந்துவோரின் தொகை அதிகம் என்று கூறப்படுகிறது.

இந்த தகவல்கள் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளன. அண்மைக் காலமாக இலங்கையில் மதுபான உற்பத்தியின் அளவும் உயர்வடைந்துள்ளது.

போதைப் பொருளுக்கு முற்றுப்புள்ளி என்ற அரசின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் நாட்டில் அண்மைக் காலமாக மதுபான பயன்பாடு அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

> உலகில் அதிகளவில் மதுபானம் அருந்தும் நபர்களைக் கொண்ட நாடுகளில் முதலிடம் செக்குடியரசு.

# அதி வேகப் பாதைகளில் சலுகைக் கட்டணங்கள்

## புத்தாண்டை முன்னிட்டு

தமிழ் - சிங்களப் புத்தாண்டில் பொது மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் சகல அதிவேகப் பாதைகளிலும் சலுகைக் கட்டணம் அறவிடுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தெற்கு அதிவேகப்பாதை, கொழும்பு - நீர்கொழும்பு அதிவேகப்பாதை மற்றும் அதிவேக சுற்றுவட்டப்பாதை ஆகியவற்றில் பயணிகளிடம் தற்போது அறவிடப்படும் கட்டணம் குறைக்கப்படும்.

இந்தச் சலுகைக் கட்டணம் இன்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இரு வார காலத்துக்கு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பண்டிகைக் கால பாதுகாப்புகளில் 35,000 பொலிஸார் கடமையில்

## அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.12

பண்டிகைக் காலத்தில் தத்தமது வீடுகளுக்குச் செல்வதற்காக நகரங்களுக்கு வருகை தரும் மக்களின் பாதுகாப்பு கருதி 35,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிவில் உடையில் ஆயுதம் ஏந்திய பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.



அஜித் ரோஹண

பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதிகளவில் பணப் பரிமாற்றம் இடம்பெறுகின்ற அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

# உலக இளைஞர்கள் மாநாட்டில் சகல நாடுகளும் பங்கேற்பது அவசியம்

## வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.12

இலங்கையில் நடைபெறவுள்ள 2014 உலக இளைஞர் மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மாநாடு இலங்கையில் எதிர்வரும் மே மாதத்தில் நடைபெறவிருப்பது குறித்து நாட்டில் உள்ள இராஜதந்திரிகளுக்கு அறிவுறுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர், இந்த இளைஞர் மாநாட்டை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நிறைவேற்றிய இரண்டு தீர்மானங்கள் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்காக இலங்கை அரசு பரந்த அடிப்படையிலான ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு இந்த மாநாடு வழிவகுக்கும். பொதுநலவாய இளைஞர் மன்றத்துக்குத் தலைமை தாங்கும் நாடு என்ற முறையில் இளைஞர் தொடர்பான விவகாரங்களுக்கு இலங்கை முக்கியத்துவம் அளிக்கிறது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இளைஞர் விவகாரங்களில் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றங்களுக்கு இந்த வருடம் நடைபெறும் மாநாட்டில் தொனிப் பொருள் தயாரிக்கப்படும்.

இளைஞர் உலக மாநாட்டை சிறப்பிப்பதற்கும், சமூகங்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது- என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வட- கிழக்கில் ராணுவத்தை இனியாவது குறையுங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயன்றார்கள் என்று கூறப்படும் மூவரைத் தாம் சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்று இலங்கை இராணுவத்தினர் நேற்று அறிவித்துள்ளனர். உள்ளூர் மக்களின் தகவலின்படி வவுனியா மாவட்டம் நெடுங்கேணிக்கு அருகே – வெடிவைத்த கல் மற்றும் சேம மடுவுக்கு இடைப்பட்ட – ஊற்றுப்புலவு அடர் காட்டுக்குள், இராணுவம் இதனை பதவியா காடு என்கிறது இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 25 ஆவது அமர்வு ஆரம்பமாவதற்குச் சற்று முன்னான காலத்தில் ஆரம்பித்த இந்த விவகாரம் அமர்வு நடந்து முடிந்ததற்குச் சற்றுப் பின்னான காலத்தில் முடிவுக்கு வந்திருப்பது போல் தோன்றுகிறது.

பளையில் பறிமுதல் செய்யப்பட்ட துண்டுப் பிரசுரங்களின் அடிப்படையில்தான், விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையில் மீளுருவாக்கம் செய்கிறார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டு தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த விசாரணைகளில் 65 பேர் கைது செய்யப்பட்டு, 10 பெண்கள் உட்பட 60 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தகவல் தெரிவித்து முழுமையாக 24 மணி நேரம் கடப்பதற்குள், இந்த விசாரணைகளுக்கான சூத்திரதாரிகள் என்று சொல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தேடப்பட்டு வந்த கோபி எனப்படும் செல்வநாயகம் கஜீபன், தேவிகன் எனப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் ஆகியோர் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதை உடனடியாக உறுதிப்படுத்தியிருக்கும் இராணுவத்தினர் மூன்றாவது நபர் அப்பன் என அழைக்கப்படும் நவரத்தினம் நவநீதனான இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்த வேண்டியிருப்பதாக நேற்றுத் தெரிவித்திருந்தனர்.

தலைக்குப் 10 லட்சம் ரூபா பரிசு அறிவிக்கப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் இவர்கள் மூவருமே ஆவர். ஒன்றாக ஒரே காட்டுக்குள் இவர்கள் பதுங்கியிருந்த சமயம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டனர் என்பதுதான் இராணுவத்தினரால் உடனடியாகத் தெரிவிக்கப்பட்ட உத்தியோகபூர்வத் தகவல். அதற்கும் மேலான தகவல்கள், உண்மைகள் தெரியவருவதற்கு இன்னும் காலம் எடுக்கலாம். சிலவேளைகளில் மேற்கொண்டு எவையும் தெரியவராமலேயேயும் போகலாம்.

புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்வதற்கான உள்ளூர் தலைவர்களாக இவர்கள் இருந்தார்கள் என்றும் வெளிநாடுகளிலே இருக்கின்ற புலிகள் இயக்க முக்கிய புள்ளிகளான நெடியவன் மற்றும் விநாயகத்திடம் இருந்து இவர்களுக்கான நிதி உதவிகள் கிடைத்தன என்றும் இராணுவம் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

அதில் உண்மை இருக்குமானால், இந்த மூவரையும் உயிருடன் பிடித்து நீதியின் முன்னால் நிறுத்தி, இலங்கை நாட்டில் மீண்டும் வன்முறையைத் தூண்ட முயன்றவர்கள் பற்றிய உண்மையை உலகறியச் செய்வதற்கு அரச படைகளுக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. எனினும் அவர்கள் மூவரையும் உயிருடன் பிடிப்பதற்கு எத்தனங்கள் எடுக்கப்பட்டதான தகவல்கள் எதனையும் இராணுவத்தினரின் உத்தியோகபூர்வ அறிக்கையில் காணக் கிடைக்கவில்லை.

எனவே இனிமேல் உண்மை உறங்கு நிலைக்குச் சென்றுவிடக்கூடும். இருப்பினும் இப்போது, இவர்கள் மூவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பதன் மூலம் – அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் தலையெடுக்க வைக்க முயன்ற தலைவர்கள் மூவரும் (இது அரசின் அறிவிப்புப்படி) கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதால் – அந்த இயக்கத்தை மீண்டும் ஒரு தடவை இலங்கை அரசு களத்தில் அழித்தொழித்து விட்டது என்று கொள்ளலாம்.

அப்படியெனில் இந்தத் தேடுதல்கள், கைதுகள், இராணுவக் கெடுபிடிகள் எல்லாம் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம். இரண்டாவது தடவையாகவும் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது என்கிற அரசின் எடுகோளின்படி, இனி மீண்டும் அந்த இயக்கம் துளிர்ப்பதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு எனவும் கொள்ளலாம். இத்தகைய நிலையில் வடக்கு – கிழக்கில் இனி அரசுக்கு அதிகளவிலான இராணுவத்தினரின் தேவையும் இருக்காது. எனவே பொது மக்கள் வாழ்வுக்கு இடைஞ்சலாக இருக்கும் இராணுவத்தின் பிரசன்னத்தை அரசு இனியாவது அகற்றி, இயல்பு வாழ்வு ஏற்பட வழிசமைக்க வேண்டும்.

## துன்புறுத்தல்களுக்குள்ளாகி வரும்

# அப்பாவித் தமிழ்ப் பெண்கள்

புதினப் பலகைக்காக –
நித்தியபாரதி



தமிழ்ப் புலிகளுடன் தொடர்பைப் பேணியதாகச் சந்தேகிக்கப்படுபவர்களின் பெண் உறவினர்கள் எந்தவித குற்றமும் இழைக்கப்படாத நிலையில் இலங்கை அரசால் கைது செய்யப்படுவதாக இலங்கையில் செயற்படும் பெண்கள் மனித உரிமை அமைப்பொன்று உறுதிப்படுத்தியுள்ளது.


இவ்வாறு கைதுசெய்யப்படும் அப்பாவிப் பெண்கள் இலங்கை அரசால் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் இந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையின் முன்னாள் போர் வலயமான வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஆறு பெண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களது துணைவர்கள் அல்லது இவர்களது குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் தமிழ்ப் புலிகளுடன் தொடர்பைப் பேணியதாகக் குற்றம் சுமத்தப்பட்டே இலங்கை அரசால் கைதுசெய்யப்படுவதாக பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு விபரித்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள பெண்கள் தற்போது மனிதாபிமானமின்றி இலங்கையின் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் சிலர் வயது முதிர்ந்தவர்களாகவும், மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சை வழங்கப்பட வேண்டிய நிலையிலுள்ள போதிலும் இவர்கள் தொடர்ந்தும் எவ்வித வசதிகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழ்ப் புலிகள் மீளவும் ஒன்றுசேர முயற்சிப்பதாகவும், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளைத் தாம் எடுத்துள்ளதாகவும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

எது எவ்வாறிருப்பினும், இலங்கை



அரசின் இந்தக் குற்றச்சாட்டைத் தமிழ் அரசியல்வாதிகள் மறுத்துள்ளதுடன், இலங்கை அரசு தொடர்ந்தும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக உயர் இராணுவப் பிரசன்னத்தைத் தொடர்ந்தும் பேணுவதாகவும், இதனை நியாயப்படுத்துவதற்காக இவ்வாறான கருத்தை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதான சந்தேகத்தின்பேரில் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்தப் பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாகவும், இவர்களுக்கான மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லை என் கின்ற முறைப்பாட்டைத்தான் விசா ரணை செய்யவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப் புலிகளின் புதிய தலைவர் எனக் கூறப்படும் கோபி என்பவரைக் கைது செய்யும் நோக்குடன் இலங்கைப் பொலிஸாரும் இலங்கை இராணுவத்தினரும் தமிழ் மக்கள் வாழிடங்களில் போர்க் காலங்களில் மேற்கொண்டதைப் போன்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கோபியுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஐந்து தமிழ்ப் பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பெண்கள் வலையமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேடப்பட்டு வரும் கோபியின் மனைவி எனக் கூறி 26 வயதான கர்ப்பிணியாக இருந்த சர்மிளா கஜீபன் என்பவரை இலங்கை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். ஆனால் தான் கோபியின் மனைவியல்ல என இந்தப் பெண் தெரிவித்துள்ளார். தற்போது தனக்குக் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கான மருத்துவ சிகிச்சைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவருக்கு கருச்சிதைவு இடம்பெற்ற அன்றைய இரவு இந்தப் பெண் 60 மைல்கள் தொலைவிலுள்ள தடுப்பு நிலையம் ஒன்றுக்கு ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டதாகவும் பெண்கள் வலையமைப்பின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 63 வயதான இவரது மாமியாரையும் இவருக்கு உதவியாக இருந்த வயது முதிர்ந்த பெண் ஒருவரையும் இலங்கைப் பொலிஸார் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின்போது காணாமற் போன உறவுகளுக்காகக் குரல்கொடுக்கும் பாலேந்திரன் ஜெயக்குமாரி இலங்கை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் இவரது வீட்டில் கோபிக்கு புகலிடம் வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். ஜெயக்குமாரியின் 13 வயது மகளும் இவருடன் கைது செய்யப்பட்டு தற்போது சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜெயக்குமாரியின் கைதானது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் குரல்களை நசுக்குவதற்கான முயற்சியாகும் என மனித உரிமைக் குழுக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. ஜெயக்குமாரியின் 13 வயது மகள் இலங்கை இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட ஒளிப்படம் ஒன்று அரசின் புத்தகம் ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட போதிலும் இவர் தொடர்பாகத் தமக்கு எவ்வித தகவலும் தெரியாது என இலங்கை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

பிறிதொரு பெண்ணொருவர் கோபியின் காதலி எனக் குற்றம் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். வெளிநாடொன்றில் பணிபுரியும் மகன் ஒருவரின் 61 வயதான தாயார் இலங்கை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்,

**போரின் போது காணாமற் போன உறவுகளுக்காகக் குரல்கொடுக்கும் பாலேந்திரன் ஜெயக்குமாரி இலங்கை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் இவரது வீட்டில் கோபிக்கு புகலிடம் வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். ஜெயக்குமாரியின் 13 வயது மகளும் இவருடன் கைது செய்யப்பட்டு தற்போது சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஜெயக்குமாரியின் கைதானது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் குரல்களை நசுக்குவதற்கான முயற்சியாகும் என மனித உரிமைக் குழுக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.**

பெண்கள் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது மகன் இவரது செலவுக்காக ஒழுங்குமுறையாக பணம் அனுப்பி வருகின்ற போதிலும், புலம்பெயர் சமூகத்தால் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்காக பணம் அனுப்பப்படுவதாக இலங்கை அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தப் பெண்களை இலங்கை அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நடத்தவில்லை. கருச்சிதைவு ஏற்பட்ட பெண்ணொருவர் எந்தவித மருத்துவ சிகிச்சையும் இன்றி அன்றிரவே நீண்ட தூரம் ரயிலில் பயணிக்க வைக்கப்பட்டுள்ளார். இது உண்மையில் மன உளைச்சலை ஏற்படுத்துகின்ற ஒன்றாகும் எனப் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளிலும், மகளிர் தினங்களிலும் தனது நாட்டில் வாழும் பெண்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக அரசு புகழுரைத்து வருகிறது. ஆனால் இவ்வாறு பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களை வைத்துப் பார்க்கும்போது இலங்கை அரசின் இந்தப் பரப்புரையை ஏற்றுக்கொள்ள முடியாது எனப் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# தமிழ்மொழியை பேணிடுவீர் ...

உடுவிலூர் கலா

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்” எம் தமிழ், எம் இனிய தமிழ் அழகானது, தொன்மையானது. அறு சுவையுணவை அகிலத்துக்குச் சுவைக்கத் தந்தது, விருந்தோம்பும் பண்பைக் கொண்டது. நன்றி கூறும் பண்பைக் கொண்டது.அழகிய பண்பாட்டைக் கொண்டது, உலகுக்கு நாகரிகத்தை கற்றுக் கொடுத்தது, அழகிய சிறந்த உச்சரிப்பைக் கொண்டது. இப்படியான பல சிறப்புக்களைக் கொண்ட தமிழின் இன்றைய நிலை என்ன? தமிழன் நிலை என்ன? ஆசியாக் கண்டத்தை கட்டி ஆண்டவன் இன்று அங்குல நிலமின்றி சொந்த நாட்டிலும், வேற்று நாடுகளிலும் அகதிகளாக அலைந்து வாழ்வதும், புலம் பெயர்ந்து வாழ்வதற்காகக் கடல் நீருக்குள் தம் உயிரைத் தியாகம் செய்வதும் இன்றைய தமிழனின் நிலையாகிவிட்டது.


மனித இனத்தின் அடிப்படையும், ஆதாரமும் தமிழ் மொழி என்பதற்கு லெமூரியாக் கண்டத்தில் தோன்றிய மனித இனம் சான்று பகர்கின்றது. மனித இன வரலாற்றைப் புரட்டினால் தமிழின் தொன்மையும், சிறப்பும் நன்கு புலப்படும். அதைவிட தமிழர் அழகாக வாழ்ந்தவர்கள் என்பதற்கு சிந்து வெளிக்கால புதை பொருள்களின் ஆராய்ச்சியில் பெண்கள் மஞ்சள்பூசி அழகாக வாழ்ந்தார்கள் என்கின்ற உண்மை புலப்படுகிறது. உலகுக்கு நாகரிகம் போதித்த தமிழனின் மரபில் வந்த இன்றைய எம்மவர்கள் வேற்று நாகரிகத்தை உள்வாங்கி தமிழ் நாகரிகத்தை ஆழப் புதைக்கிறார்கள். எம் இனிய அழகுத் தமிழை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இறுக்கமான எமது பண்பாட்டை சிதறடிக்கிறார்கள். தமிழ் மொழியை உச்சரிக்கத் தயங்குகிறார்கள். தமிழராகிய நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். தமிழ்க் கருவில் உருவாகிய தமிழ்க் குழந்தைகளுக்கு ஏதேதோ மொழிகளில் பெயர்கள் வைக்கிறார்கள். பெயர் ஒரு மனிதனைச் சாகும் வரை மட்டுமல்ல, சாவின் பின்னரும் கூட சுட்டிக்காட்டும் சுட்டுவிரல். நாகரிக மோகம், அறிவியல் வளர்ச்சி, சினிமாத் திரைப்படங்களின் கவர்ச்சி காரணமாக எமது தாய் மொழியை மறந்து பல்லுக் கொழுவுகின்ற , வாயின் தாடை என்புகள் மல்லுக்கட்டுகின்ற பெயர்களை எம் பெற்றோர் பிள்ளைகளுக்கு சூட்டி மகிழ்கின்றனர். பெயர் வைக்கும்போது பெயரின் அர்த்தத்தைப் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். எந்த மொழிக்குச் சொந்தமானது என்பதையும் புரிந்து கொண்டுதான் பெயர் வைக்க வேண்டும். தமிழில் அழகான, கருத்துச் சுவை பொதிந்த நிறையப் பெயர்கள் உள்ளன. எதற்காக வேற்று மொழியில் பெயர் வைக்கிறார்கள்? சிலர் சினிமா நடிகர் நடிகைகளின் பெயரைச் சூட்டி மகிழ்கிறார்கள். தற்போதைய சினிமா நடிக நடிகையர் தமிழ் மொழியின் சொந்தக்காரரா? அவர்கள் பற்பல மொழி பேசும் இனங்களில் இருந்து தமிழ்த் திரையுலகில் பிரவேசித்தவர்கள். சிலர் புனை பெயரை உடையவர்கள். நடிகரின் பெயர்களை வைப்பதால் எதிர்காலத்தில் பிள்ளைகள் நடிகர்களாக வரவேண்டும் என்ற ஆசையா பெற்றோருக்கு? புரியவில்லை. நாம் எம் பிள்ளைகளுக்குச் சூட்டும் பெயரோடு அவர்கள் சமுதாயத்தில் சிறந்து நிற்க வேண்டும் என்ற உண்மையை ஏன் பெற்றோர் உணர்வதில்லை? “ஜமேலா” என்ற பெண்ணின் பெயர் பிரபல்யமாக சர்வதேசத்தில் பேசப்பட்ட வேளை பிறந்த பெண் பிள்ளைகளுக்கு “ஜமேலா” எனப் பெயர் இட்டுள்ளனர். ஆனால் இன்று அவர்கள் வளர்ந்து பெயரின் பொருளை முன்னை நாளில் இந்தப் பெயரைக் கொண்ட பெண்ணின் சரிதத்தைப் பார்த்தால் ஜமேலா ஒரு பெயர் பெற்ற “விபசாரப் பெண்” என்பது தெரிந்து வெட்கப்பட்டு நிற்பதைக் காண முடிகிறது.

தமிழர் பரந்து வாழும் எம் யாழ்.மண்ணின் வீதிகளின் பெயர்ப் பலகையில் வீதியின் பெயர்களில் தமிழ் கொலை செய்யப்பட்டுள்ளதை காண முடிகிறது. அவை யாவும் பிரதேச சபையினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும். பாணர் யாழை மீட்டியதால் யாழ்ப்பாணம் என்பது போல எமது பிரதேசத்தின் ஊர்கள், வீதிகள் அனைத்துக்கும் சுவையான காரணப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவை எழுத்து வழுவின்றி பெயர்ப் பலகைகளில் பொறிக்கப்பட வேண்டும். இந்தச் சினிமாவைக் கைகொட்டி வரவேற்கின்றனர். பாலாபிஷேகம் செய்கின்றனர். சினிமாவுக்குள் நிறையத் தமிழ் மொழிச் சிதைவுகள் காணப்படுகின்றன. பாடல்களிலும் சரி, பேசப்படும் மொழிகளிலும் சரி தமிழ்மொழி பங்கம் அடைவதை அவதானிக்க முடிகிறது. தற்போதைய சினிமா ரசிகர்களின் வாயின் முணுமுணுப்பான நையாண்டித் திரைப்படத்தின் பெயரே பிழையாக உள்ளது. நையாண்டி என்பது கேலியைக் குறிக்கும் சொல். ஆனால் நையாண்டி என்ற பெயரையே நய்யாண்டி என பிழையாக எழுதி மதிலுக்கு மதில் ஒட்டியுள்ளார்கள். இதை எம்மவர்களும் வரவேற்கிறார்கள்.

இன்று பரவலாக எம்மவர்கள் பயன்படுத்தும் சில ஆங்கிலப் பதங்கள் Thanks, Thankyou, Sorry,Ok, Excuse me போன்றனவாகும். Ok என்பது கைத்தொலைபேசிப் பாவனையால் மிக முன்னணியில் உள்ளது. அதேபோல் ஒருவர் செய்த நற் செயலுக்கு நன்றி சொல்ல Thanks என்ற ஆங்கிலச் சொல்லை நாகரிகமாகச் சொல்கிறார்கள். “நன்றி” என்ற இதயத்தின் வெகுமதியான சொல் தமிழனுக்குரியது. அதனைத் தமிழிலேயே கூறலாமே. ஆங்கிலம் பொது மொழி. அத்தியாவசிய கரும மொழி. தமிழ் எம் தாய் மொழி. வேற்று மொழியில் எம்மவர்க்கு நன்றி கூறுவதா? தமிழ் மொழியின் சொந்தக்காரர் என்பதில் மார்பு தட்டிப் பெருமை கொள்கிறோம். தமிழ் மொழியைச் சரளமாக பேச மட்டும் தயங்குகின்றோம். காரணம் புரியவில்லை. தமிழிலேயே நன்றி கூறப் பழகிக் கொள்ளுங்கள். வெளி நாட்டுப் பணப் புழக்கத்தால் பல பெற்றோர் தமது குழந்தைகளை ஆங்கிலப் பாடசாலை யைத் தேடிக் கொண்டு சென்று ஆரம்பக் கல்விக்கு வித்திடுகின்றனர். ஆங்கிலப் பாடசாலையில் சேர்க்காவிட்டால் கௌரவக் குறைவாகப் பெற்றோர் நினைக்கின்றனர். இதனால் பிள்ளைக்கு சரியான தமிழ் உச்சரிப்பும் தெரிவதில்லை. ஏன்? இன்று சாதாரண தரப் பரீட்சை என்ற கல்வியின் முதல் தடவையில் தமிழில் எல்லா மாணவர் களும் விசேட சித்தி பெறுகிறார்களா? தமிழ் மொழி சித்தியடையாமலே சில மாணவர்கள் விடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் போது பஸ்ஸில் கிளிநொச்சிவரை தமிழ்ப் பாடலை ஒளிபரப்புவார்கள். கிளிநொச்சியைக் கடந்ததும் சிங்களப்பாடல் ஒலிக்கத் தொடங்கும். சிலவேளை வவுனியாவிலும் சிங்களப் பாடல் ஒலிக்கும். ஏன் இந்த மாறுவேடம்? நாம் தமிழர். இலங்கையில் தமிழர் ஓர் இனமாக வாழ்கிறார்கள். எந்த மூலை முடுக்கிலும் தமிழ்ப் பாடலை தமிழர் ஒலிபரப்பலாம். குறிப்பிட்ட இடத்துக்கு அப்பால் சிங்கள மக்கள் பஸ்ஸில் பயணிகளாக ஏறுவதால் அவர்கள் பயணத்தில் பாடலை ரசித்தபடி பயணிப்பதற்காக எம் தமிழ் பஸ்களில் இப்படி நிகழ்கிறது. இங்கே ஒரு விடயத்தை இந்த பஸ் சொந்தக்காரர்கள் நினைவில் கொள்ள வேண்டும். தமிழர் பயணிக்கிறார்கள் என நினைத்து சிங்களப் பிரதேசத்தில் எந்த ஒரு பஸ்ஸிலும் தமிழ்ப்பாடல் ஒலிபரப்புவதில்லை. எனவே தமிழராகிய நாம் யாருக்காகவும் பயந்து வாழாமல் எம் இனிய தமிழ் மொழியை சிதைக்காமல் பாதுகாக்க வேண்டும். “என்னை நன்கு இறைவன் படைத்தனன் உன்னை நன்கு தமிழ் செய்யுமாறே” என்ற வரிகளுக்கிணங்க அழகான தமிழால் வாய் நிறைய உச்சரித்துப் பேசி மென்மேலும் தமிழை வளர்த்திடுவோம்; பாதுகாத்திடுவோம்.




**“ பாணர் யாழை மீட்டியதால் யாழ்ப்பாணம் என்பது போல எமது பிரதேசத் தின் ஊர்கள், வீதிகள் அனைத்துக்கும் சுவை யான காரணப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவை எழுத்து வழுவின்றி பெயர்ப் பலகைகளில் போடப்பட வேண்டும். இந்தச் சினிமாவைக் கைகொட்டி வரவேற்கின்றனர். பாலாபி ஷேகம் செய்கின்றனர். சினிமாவுக்குள் நிறையத் தமிழ் மொழிச் சிதைவுகள் காணப் படுகின்றன. பாடல்களிலும் சரி, பேசப்படும் மொழிகளிலும் சரி தமிழ்மொழி பங்கம் அடைவதை அவதானிக்க முடிகிறது.**

---

## தவக்காலச் சிந்தனை



## இலட்சியங்கள் சாவதில்லை

இயேசுவின் அற்புதங்கள், வளமூட்டும் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மக்கள் கூட்டம் அவர் பின்னே அணி திரண்டது.

இதைக் கண்ணுற்ற தலைமைக் குருக்களும், பரிசயரும் தமது பதவி, அதிகார ஆட்சிக்கு வேட்டு வைக்கப்படப்போவதாக அஞ்சினர். தலைமைச் சங்கத்தைக் கூட்டி மந்திர ஆலோசனைகள், சதித் திட்டங்களை நிறைவேற்றி உண்மைக்காக குரல் கொடுக்கும் மக்கள் தலைவனை, வழிகாட்டியை ஒழித்துவிடக் கங்கணம் கட்டினர்.

“இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது” (யோவா.11:50) என்று தலைமைக் குருவான கயபா தம்மை அறியாமலே மீட்புத் திட்டத்தின் கருப்பொருளை எடுத்துரைத்தான். அன்றுமுதல் இயேசுவைக் கொல்வதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எமது சுயநல குறுக்கு வழி இலட்சியங்கள் பதவிகளுக்குத் தடையாக உள்ளவர்களை அழித்தொழிக்க சமயம் தேடும் துரோகத்தனங்கள் எம்மில் இல்லையா? தான் சார்ந்த சமூகமும், மக்களும், அமைதியும், சுபீட்சமும் பெற்று விடுதலை வாழ்வை சுவைக்க உழைப்பது தப்பா? அதற்குரிய தண்டனை மரணமா? இயேசுவின் காலத்தில் தொடங்கிய குரோதம் இன்றுவரை தொடர்கிறது.

*எஸ்.யேசுதாஸ் கொழும்புத்துறை*

---

## ஜய புதுவருட கருமங்கள்

மலரும் புத்தாண்டு திருக்கணிதப்படி , 14.04.2014 திங்கட்கிழமை காலை 7.36 இற்கு 'ஜய' எனும் நாமம் தாங்கி அத்த நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் பூர்வ பட்ச சதுர்த்தசியில் சித்த யோகத்தில் நட்சத்திரப் பட்சியாகிய காகம் நடைத்தொழில் செய்யும் காலத்தில் புது வருடம் பிறக்கின்றது. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14.04.2014 திங்கட்கிழமை முற்பகல் 6.11 இற்கு அத்த நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் பூர்வ பட்ச சதுர்த்தசியில் வியாகாத நாம யோகத்தில் சாத்வீக குண வேளையில் நட்சத்திரப் பட்சியாகிய காகம் நடைத்தொழில் செய்யும் காலத்தில் புதுவருடம் பிறக்கின்றது.

**கைவிசேட நேரங்கள் :**

வாக்கியப்படி, வருடப்பிறப்பன்று காலை 6.11 தொடக்கம் 7.31 வரை, 10.04 தொடக்கம் 12.03 வரை, பிற்பகல் 2.22 தொடக்கம் 4.27 வரை, இரவு 6.21 தொடக்கம் 7.21 வரை , 9.15 தொடக்கம் 10.23 வரையுமாகும்.

திருக்கணிதப்படி, வருடப்பிறப்பன்று காலை 6.02 தொடக்கம் 7.30 வரையும், 10.00 தொடக்கம் 12.05 வரையுமாகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கடுமையான சூழ்நிலைகளில் கூட முன்னேற்றம் காண்பீர்கள். கடினமான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உடன் பணி செய்வோரால் இருந்து வந்த காரியத் தடை நீங்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும்.

**இடபம்**: பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்குவன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பது நல்லது.

**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள்.

**கடகம்**: குழந்தைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சி தரும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் நிலவி வந்த போட்டிகள் நீங்கும்.

**சிங்கம்**: மனக்குழப்பம் நீங்கும். காரிய வெற்றி கிடைக்கும். எந்தச் சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். தடைப்பட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி**: உழைக்கும் திறமையை அதிகரிப்பீர்கள். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும்.

**துலாம்**: உத்தியோகத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் கௌரவம் அந்தஸ்து உயரும். துக்கமும், துன்பமும் நீங்கும்.

**விருச்சிகம்**: சுப காரியங்களில் இருந்த தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். எதிர்காலத் தேவைகளுக்கு சேமித்து வைக்க ஆர்வம் உண்டாகும். எதிர்காலக் கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். திறமை வெளிப்படும். மனக் கவலை அகலும்.

**தனுசு**: எப்போதும் எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டே இருப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், சுகமும் அதிகமாகும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**: தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற் கும்போது மிகவும் கவனமாக இருப்பது. வீண்பழி ஏற்படாமல் தடுக்க உதவும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கூடும்.

**கும்பம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். மற்றவர்கள் உதவி கிடைப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.

**மீனம்**: உத்தியோகத்தில் முன்னேற்றம் காண அனுபவபூர்வமான அறிவு கைகொடுக்கும். காரியத் தடை நீங்கும். மற்றவர்கள் கூறும் குறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் உங்களுடைய காரியத்தை செய்வது நல்லது.

## நாளை

**பங்குனி-30 ஞாயிற்றுக்கிழமை | 13.04.2014**

திதி: திரயோதசி பி.ப.01.01 வரை
நட்சத்திரம்: உத்தரம்
மு.இ.10.04 வரை

சுபநேரம்: 09.06-10.36 வரை
இராகுகாலம்:.04.36-06.06 வரை


# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## இந்து சமயம்

'பிராமணத்துவம்' பழைய உண்மைக் கொள்கைகளின்படி உருவாகியிருப்பதால், ஆழ்ந்த கவர்ச்சி உடையது. இந்த விடயம் நேற்று மாலை ஸ்பஸ்ட் யூனிடேரியன் சர்ச்சில் [மின்னியாபோலிஸ்] சுவாமி விவேகானந்தர் இந்து சமயக் கருத்துக்களை விளக்கும் போது, கேட்டவர்களை மிகவும் ஆழ்ந்து கவனிக்கச் செய்தது. 'பெரிபேடிக்ஸ் (Peripatetics)' சொற்பொழிவாளரை அழைத்திருந்ததால் கூட்டத்தில் சிந்தனைத்திறன் மிக்க ஆண்களும், பெண்களும் நிரம்பியிருந்தனர். அவர்களில் வெவ்வேறு சமயப் பிரிவுகளின் தலைவர்களும் மாணவர்களும் அறிஞர்களும் இருந்தனர். விவேகானந்தர் பிராமணத் துறவி. தலைப்பாகையுடனும், காவித் துணியால் மார்பில் இணைக்கப்பட்ட செம்மஞ்சள் நிற அங்கியுடனும், கீழே காவி வேட்டி உடுத்தி, தாய் நாட்டு உடையில் அவர் மேடை மீது தோன்றினார். அவர் தமது கொள்கைகளை உறுதியுடன் மெதுவாகவும் தெளிவாகவும் பேசி விளக்கினார். நடிப்புகள் எதுவும் இன்றி , பேச்சின் அமைதியால், கேட்பவர்கள் தமது கருத்தை ஏற்குமாறு செய்தார். கவனத்துடன் சொற்களை அளந்து பேசினார். சொற்கள் ஒவ்வொன்றும் வெளிப்படையாகப் பொருள் விளங்கும்படி அமைந்திருந்தன. அவர் இந்து சமயத்தின் எளிய உண்மைகளை நமக்கு அளித்தபோது, கிறிஸ்தவ சமயம் பற்றிக் கடுமையாக ஒன்றும் கூறவில்லை. எல்லோருக்கும் கடவுள் நம்பிக்கை ஏற்படும் விதத்தில் பேசினார். இந்து சமயத்தின் கொள்கை, ஆன்மாவின் இயல்பு தெய்வீகம் என்பதே; மனிதனுள் ஏற்கெனவே இருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்தச் செய்வதே சமயமாகும். நிகழ்காலம் என்பது இறந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையில் உள்ள எல்லைக் கோடே. மனிதனிடமுள்ள இரு இயல்புகளில் நல்லியல்பு மேலோங்கினால், அவன் மேல்நிலை அடைகிறான்; தீய இயல்பு மேலோங்கும்போது அவன் இழிநிலை அடைகிறான். இவ்விரு இயல்புகளும் எப்போதும் அவனிடம் உள்ளன. நற்குணம் அவனை உன்னதமாக்குகின்றது; தீய குணம் அவனை இழிவாக்குகின்றது.

# உலகின் முதல் முப்பரிமாண அச்சாக்கத்தில் உருவாகும் வீடு



முப்பரிமாண அச்சாக்கம் மூலம் உலகின் முதல் வீடு ஆம்ஸ்டர்டாமில் கட்டப்பட்டு வருகிறது. முப்பரிமாண அச்சாக்கம் (3D printing) என்பது பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் ஆகும்.

கணினியில் எப்படி நாம் வடிவமைத்த ஆவணங்களை அச்சுப்பதித்துப் பெற முடியுமோ அப்படியே ஒரு பொருளின் கூறுகளை மென்பொருளில் வரையறை செய்து, மூலப் பொருள்களை இட்டு முப்பரிமாண அச்சாக்கத்தின் மூலம் எளிமையாக உற்பத்தி செய்ய முடியும்.

இந்தத் தொழில்நுட்பம் தற்போது வளர்ச்சி பெற்றுவரும் நிலையில் ஆம்ஸ்டர்டாமைச் சேர்ந்த தஸ் கட்டுமான நிறுவனம், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் முப்பரிமாண வீடு கட்டும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

தஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஹெட்விக் இது குறித்து கூறுகையில், கட்டுமானத் தொழிலானது மிகவும் மாசு ஏற்படுத்தும் துறை மட்டுமல்லாமல் அதிக திறனற்ற தொழிலாகவும் இருந்து வருகிறது.

இந்தநிலையில் முப்பரிமாண அச்சாக்கத்தால் கழிவுகள் வீணாவது குறைவதோடு, போக்குவரத்துச் செலவுகளும் மிகவும் குறைகின்றன. மேலும் எல்லாவித பொருள்களையும் உருக்கி பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மறுசுழற்சியும் செய்யப்படுகிறது.

இந்தப் புதிய முறையானது கட்டுமானத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார். இதுவரை 3வாரம் நடந்துள்ள கட்டுமான பணியில் கணினி மென்பொருளின் உதவியோடு வீட்டின் ஒரு பகுதியாக 180கிலோ எடையுள்ள 3மீற்றர் உயரச் சுவரைக் கட்டியுள்ளனர்.

இந்தச் செயலில் கேமர் மேக்கர் என்றழைக்கப்படும் முக்கிய கருவி கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் ஹெட்விக், "இது ஒரு சோதனை முயற்சிதான். நாங்கள் இன்னும் இத்தொழில்நுட்பத்தை மெருகேற்றி வருகிறோம், தற்போது 757 தாவர எண்ணெய் மற்றும் மைக்ரோ ஃபைபர்கள் அடங்கிய பிளாஸ்ரிக் கலவையைப் பயன்படுத்தி வருகிறோம். நாம் தொடர்ந்து 3ஆண்டுகள் இத்தொழில் நுட்பத்தை சோதனை முறையில் செய்யவுள்ளோம். மேலும் இது வெறும் ஆரம்பம் தான். வருங்காலத்தில் இத்துறை பலமடங்கு முடிவற்ற வளர்ச்சியை அடையும்" என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோதத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 9 | | | | |
| 8 | | | 6 | | 5 | | | |
| | 3 | 5 | 1 | 2 | 7 | | | |
| | 4 | 6 | | | | | | 7 |
| 5 | 8 | | 7 | 6 | 3 | | 1 | 2 |
| 3 | | | | | | 8 | 9 | |
| | | | 2 | 5 | 6 | 3 | 4 | |
| | | | 4 | | 9 | | | 1 |
| | | | | 7 | | | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 1 | 9 | 3 | 7 | 6 | 5 | 2 |
| 3 | 2 | 6 | 8 | 5 | 4 | 7 | 1 | 9 |
| 5 | 9 | 7 | 1 | 2 | 6 | 3 | 4 | 8 |
| 8 | 1 | 4 | 7 | 6 | 2 | 9 | 3 | 5 |
| 9 | 6 | 5 | 3 | 8 | 1 | 2 | 7 | 4 |
| 2 | 7 | 3 | 5 | 4 | 9 | 8 | 6 | 1 |
| 7 | 3 | 9 | 2 | 1 | 5 | 4 | 8 | 6 |
| 6 | 5 | 8 | 4 | 9 | 3 | 1 | 2 | 7 |
| 1 | 4 | 2 | 6 | 7 | 8 | 5 | 9 | 3 |

12.04.2014





# பற்களில் காணப்படும் கறையை நீக்க...

பற்களில் கறை படிந்துள்ளதா? எதைத்தான் உபயோகித்து ஒரு முறைக்கு 2 முறை பல் தேய்த்தாலும் நமது பற்களில் கறை கொஞ்சம், கொஞ்சமாக படிந்து விடுகிறது. பல் மருத்துவக்கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு முதலில் சொல்லித் தருவதே, அவர்களின் பற்களை சுத்தம் செய்து கொண்டு வரச் சொல்வது தான். நீண்ட நாள்களாக இருக்கும் கறைப் படிவங்களைச் சுத்தம் செய்வது மிகவும் எளிது.

பொட்டாசியம் பரமாங்கனேட் (கொண்டிஸ்) என்ற வேதிப்பொருள் பெரும்பாலான மருந்துக்கடைகளில் கிடைக்கும். அதனை வாங்கி வெது வெதுப்பான நீரில் மிகச்சிறிய அளவில் கலந்து (தண்ணீரில் போட்டவுடன் ஊதா நிறமாக மாறும்) அந்த தண்ணீரை வாயில் ஊற்றி நன்றாக கொப்பளிக்கவேண்டும். இந்தவேதிப்பொருளை அதிக அளவில் நீரில் போடக் கூடாது. அப்படி செய்தால் நீர் கருஊதாநிறமாக மாறும். துவர்ப்புத் தன்மை அதிகரித்து விடும். கொஞ்சம் கொஞ்சமாக கொப்பளித்த பின்னர் பிரஷ் கொண்டு சுத்தம் செய்யும் போது பல வருடங்களாக இருந்த கறைகள் பெயர்ந்து வெளியே றும். பற்கள் பளிச்சென்று ஆகிவிடும். வருத்துக்கொருமுறை அனை வரும் இதனைச் செய்து கொள்வது நல்லது.





# கண்ணீர் விட்டு அழுவதும் ஆரோக்கியம்

வாய்விட்டுச் சிரிப்பது உடல் நலத்துக்கு நல்லது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதேபோல் கண்ணீர் விட்டு அழுவதும் மிகவும் ஆரோக்கியமானதுதான் என்கின்றனர் விஞ்ஞானிகள். அழுவதன் மூலம் மனதில் உள்ள அழுத்தம் கண்ணீர் மூலம் வெளியேறி விடுகிறது. கண்களில் உள்ள அழுக்குகளும் நீங்குகின்றன. உடலுடன் உள்ளமும் ஆறுதலடைகிறது என்று தெரிவிக்கின்றனர் மருத்துவர்கள்.



அழுகைவகைகள் சோகத்தில் அழுவது, சந்தோஷத்தில் அழுவது, எரிச்சலில் அழுவது, உணர்ச்சி வசப்பட்டு அழுவது என்று பல வகைப்படும். மனிதர்களைப் போல விலங்குகளும் கண்ணீர் விட்டு அழுகின்றன.

எனவே அழுவதற்காக வெட்கப் படத்தேவையில்லை. அழுகை என்பது ஆரோக்கியமானதே என்கின்றனர் மருத்துவர்கள்.

கண்ணீர் உருவாகக் காரணமான லாக்ரிமல் சுரப்பி காய்ந்து போனால் கண் உலர்ந்து விடும். கண்ணீரின் அளவு குறைந்து விடுவதால் கண்ணில் எரிச்சல் உணர்வு உண்டாகிறது. மண் விழுந்தது போன்ற கடுமையான எரிச்சலாகவும் இதுஇருக்கக் கூடும். வலி அதிகமாகும்.

கவனித்துச் சரி செய்து கொள்ளாமல் நீண்ட காலம் அலட்சியப்படுத்தினால் விழித்திரையில் பாதிப்பு உண்டாகி பார்வையை இழக்க வேண்டி வரலாம். அதனால் அடிக்கடி அழுவது கூட நல்லது தான். கண்ணீர் உண்டாகவில்லையென்றால் அதற்கேற்ப மருத்துவரை நாடவேண்டும். உலர் கண்களைத் தடுக்க கண்ணில் உள்ள மூன்று வெவ்வேறு படலங்களின் கூட்டு முயற்சிதான் கண்ணீர். இவற்றில் வெளிப்புறமாக உள்ள மெல்லிய படலம் அங்கு சுரக்கும் நீர் ஆவியாக மாறுவதைத் தடுக்கிறது. நடுப்படலமான லாக்ரிமல் சுரப்பிகளில் நீர் சுரக்கிறது. கண்ணீரில் உள்ள உப்பும் அமிலமும் ஓர் அளவுக்குள் இருப்பதையும் இது உறுதி செய்து கொள்கிறது. கண் தொற்றுகளுக்கு எதிராகச் செயற்படும் சக்தியும் கண்ணீருக்கு உண்டு. உள்ளே இருக்கும் படலம் கண்ணீரை விழித்திரையோடு ஒட்டிக் கொள்ள வைக்கிறது. அதாவது கண்ணீர் சட்டெனவெளியேறி விடுவதில்லை. இந்த மூன்று படலங்களில் எது செயற்படாவிட்டாலும் விழித்திரை உலர்ந்து விடும். மனப்பாரம் குறையும். வயதாக ஆக இந்தப் படலங்களில் இயல்பாக உள்ள எண்ணெய்ச்சுரப்பியின் செயற்பாடு குறைந்து விடுகிறது. இதன் காரணமாக கண்ணீர் விரைவில் ஆவியாகி விடுகிறது. சிலவகை அண்டிபயாடிக் மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்ளும் போதும் இப்படி நேரலாம். எனவே உலர்கண் கொண்டவர்கள் கான்டாக்ட் லென்ஸ் அணியக்கூடாது என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

சந்தோசமென்றால் மகிழ்ச்சியை சிரிப்பாக வெளிப்படுத்துவதைப்போல துக்கமென்றால் அழுது வெளிப்படுத்துங்கள்.

இதன் மூலம் மனப்பாரம் குறையும், ஆரோக்கியம் அதிகரிக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

# கர்ப்பத்தில் இருக்கும் போதே குழந்தை தாயின் பேச்சை கவனிக்கும்



கர்ப்பத்தில் இருக்கும் போதே குழந்தை தாயின் பேச்சை உற்றுக் கவனிக்க ஆரம்பித்து விடுகிறது என்று சமீபத்திய ஆய்வொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றினால் கர்ப்பிணிகள் மற்றும் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தைகள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், கருவில் இருக்கும் குழந்தை தாயின் குரலை சரியாக இனங்கண்டு கொள்கிறது என்று தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் 74 கர்ப்பிணிப் பெண்களிடம் மேற்கொண்ட ஆய்வு மூலம் இதனை நிரூபித்துள்ளனர்.

36 வார வளர்ச்சியுடனிருந்த குழந்தைகளை வயிற்றில் சுமந்திருந்த கர்ப்பிணிகளிடம் ஒரு கதைப் புத்தகத்தைக் கொடுத்து சத்தம் போட்டுப் படிக்கச் சொன்னார்கள் ஆராய்ச்சியாளர்கள். அப்போது வயிற்றில் கர்ப்பப்பையில் வளரும் குழந்தைகளின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.

ஆச்சரியமாக, தாய் கதைப் புத்தகம் படிக்கும் போது வயிற்றில் உள்ள குழந்தையின் இதயத்துடிப்பின் வேகம் சிறிதளவு குறைந்து. அதன் அசைவும் அடங்கி இருந்தது. தாய் சொல்லும் கதையைக் கேட்பதாலேயே, இந்த மாற்றம் குழந்தையிடம் நிகழ்ந்தது என்று இதன் மூலம் உறுதியாகியுள்ளது என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



# மாணவர்கள் நன்றாகப் படிக்க...

கல்வி என்பது ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரு முக்கிய அங்கமாகிவிட்டது. சமுதாயத்தில் ஒரு உயர்ந்த மதிப்பை பெறவும், பொருளாதார அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும், சிறப்பான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளவும் கல்வி அவசியம். வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட காலத்தை படிப்பதற்காகவே ஒதுக்க வேண்டியுள்ளது. மாணவர்கள் சிறப்பான முறையில் படிக்க முக்கிய ஆலோசனைகள்:

**படிப்பின் அவசியத்தை உணருங்கள்**

மகிழ்ச்சியான இளமைக் காலம் கடந்த பிறகும், வாழ்க்கையில் உங்களை மகிழ்வுடன் இருக்கச் செய்யக் கல்வி உதவுகிறது. கல்லூரி வாழ்க்கையில், படிப்பையும் கடந்து, சில கூடுதல் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. அவை உங்களது தகுதியை மேலும் உயர்த்துவதாக இருக்க வேண்டும். பாடசாலைக் காலத்தில் எப்போதும் விளையாட்டுத்தனத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தால் பிற்காலத்தில் வரும் நெருக்கடியான தருணங்களில் வருந்த வேண்டியிருக்கும்.

**திட்டமிடுங்கள்**

ஒவ்வொரு பாடத்தையும் படிக்க ஆகும் நேரத்தை, திட்டமிட்டு அதற்கேற்ப செயற்படுங்கள். சிறப்பான திட்டமிடுதலும், அதன் அடிப்படையிலான சரியான செயல்பாடும் கடைசி நேர அவதிப் படிப்புக்கான வாய்ப்பை முற்றிலும் தவிர்க்கும். திட்டமிட்ட சீரான உழைப்பு பதற்றத்தை குறைத்து, அமைதியான, ஆழ்ந்த செயற்பாட்டுக்கு அருமையாக வழிவகுக்கும்.

**படிப்பதற்கான இடத்தை தேர்வு செய்யுங்கள்**

திட்டமிட்டபடி படிப்பதற்கு, சாதகமான இடத்தைத் தேர்வு செய்வது மிக அவசியம். புற்றரை, பூங்கா, கல்லூரி வளாகம், மைதானம் என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இடத்தில் அமர்ந்து படிப்பதற்கு விருப்பமிருக்கும். தேவையான பல்வேறு புத்தகங்கள் கிடைப்பதாலும், அமைதியான சூழலாலும் சிலர் நூலகத்தில் படிக்க விரும்புவர். படிப்பில் முழுக் கவனம் செலுத்தவும், நேரத்தை மிகச் சரியாக பயன்படுத்தவும். உங்களுக்கு உகந்த இடத்தைத் தேர்வு செய்யுங்கள்.

கவனக் குறைவு என்பது இராட்சத பூதம். நீங்கள் புதியதாகக் கற்கவும், கற்றதைத் திரும்ப வெளிக்கொணரவும் கவனக் குறைவு மிகப் பெரிய தடங்கலாக இருக்கும். எனவே, எப்போதுமே இது தவிர்க்கப்பட வேண்டும். எந்த ஒரு கற்றலும், புரிதலும் உங்களது முழு விருப்பத்தால் நிகழவேண்டுமே தவிர, யாருடைய கட்டாயத்தாலும் அல்ல. படிக்கும் போது, அவற்றில் முக்கியமான கருத்துக்களை குறித்துக்கொள்ளுங்கள். திரும்பப் படிக்கும் போது அவை உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

மாணவப் பருவத்திலேயே படிப்புக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்படுங்கள்; உங்களது கனவு நனவாகும்.



# யாழ். பல்கலையில் மின்னுற்பத்தி குறித்த சூரியகல ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இலங்கையில் சூரியகலத் தொழில்நுட்பமும் அதனோடு இணைந்த தொழில் முயற்சிகளும் என்ற தலைப்பிலான ஆய்வுப் பட்டறையில் அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் கலந்துகொண்டு ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை ஏற்பாடு செய்துள்ள இந்த ஆய்வுப் பட்டறையில் சிக்காக்கோவில் அமைந்துள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழரான பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் தலைமையில், விஞ்ஞானிகளான றிம் கூட்ஸ், றிம் கெசற், ரமேஸ் தேரே, மௌபாஃக் அல் ஜசீம் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமெரிக்க ஆய்வு நிறுவனமான சிவானந்தன் ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து பேராதனை, களனி, றுகுணு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களில் வருடாந்தம் தொடர் ஆய்வுப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் மூன்றாவது கருத்தரங்கு எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகத் தில் நடத்தப்படவுள்ளது. ஆய்வுப் பட்டறையின் இறுதி நாளன்று பல்கலைக்கழக பௌதிகத்துறையினரால் சூரியக் கலத் தொழில் நுட்பம் தொடர்பான செயல்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

ஆண்டுதோறும் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங் களுக்கு வருடாந்தம் வளவாளர்களை அனுப்பி ஆய்வுப் பட்டறைகளை நடத்துவதோடு, சுமார் அறுபது ஆய்வு மாண வர்களை அமெரிக்காவுக்கு அழைத்துப் பயிற்சிகளையும் வழங்கவிருக்கின்றது சிவானந்தன் ஆய்வு நிறுவனம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்துக்கான சாதனையாளன் விருதைக் கடந்த ஆண்டு பெற்றிருந்தார். (ற)

## மறதிநோய் நூல் வெளியீடு

வடமராட்சி, ஏப்.12

பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் எழுதிய மறதி நோய் என்னும் தலைப்பிலான புத்தகம் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இராஜா இராணி சேவை நிலையத்தில் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக அருட்பணி எஸ். டேமியன் கலந்து கொள்வார். (க)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஏப்.12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் புத்தாண்டுப் பூசை நாளை மறுதினம் திங்கட் கிழமை அதிகாலை 5.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். பூசையின் பின்னர் சுவாமி உள் வீதி உலாவருவார். உள் வீதிஉலாவரும்போது வடக்கு வீதியில் சங்கிராந்தி தீர்த்தம் நடைபெறும். இதனையடுத்து சுவாமி வசந்த மண்டப இருப் பிடம் வந்து சேர்ந்ததும், காலை 9 மணிக்கு பக்தர்களுக்கு கைவி சேடம் வழங்கப்படும். (க-173)

◆◆◆

சண்டிலிப்பாய் அருள் மிகுசீரணிநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற் சவ தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங் கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும். பிற்பகல் 2 மணிக்கு இரத அவ ரோகணமும் நடை பெறும்.

மறுநாள் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு வசந்தமண் டபத் தீபாராதனை யைத் தொடர்ந்து முற் பகல் 10.30 மணிக்கு தீர்த் தோற்சவம் இடம் பெற்று மாலை 5 மணிக்கு கொடியிறக் கம் நடைபெறும். (க)

◆◆◆

வவுனியா, ஏப்.12

வவுனியா ஆதி விநா யகர் ஆலய தேர் உற் சவம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திரு விழாவில் எதிர்வரும் 14 ஆம் திகதி புது வரு டத் தினத்தன்று தேர்த் திருவிழாவும், மறு நாள் தீர்த்த உற்சவ மும் நடைபெறவுள் ளன. (ஜ-402)


## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை நாகரத்தினம்

(சின்ராசு அண்ணை)



இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நாகரத்தினம் 09.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர்- சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், கலாநாயகி, காலஞ்சென்ற தேவிகா மற்றும் பவளசீலன் (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்), வரதலட்சுமணன் (குஞ்சன்), கலாரஞ்சினி (சி.க.கூ.சங்க சமாச முன்னாள் பணியாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோதிலிங்கம், பத்மாவதி, அருள்ஞானசோதி, விஜேந்திரன் (விஜி - மாநகரசபை நல்லூர்) ஆகியோரின் மாமனாரும், பிரமவாணி, சர்மிகன், பிரவீனா, சுகன்ஜன், சசிதரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.04.2014 புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் கீரிமலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை. (46714)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராமசாமி நவரட்ணம்

(ஸ்ரீபன் போதகர் - கல்வாரி பூரண சுவிஷேச சபை, காரைநகர்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட **இராமசாமி நவரட் ணம்** 09.04.2014 புதன்கிழமை இந்தியாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி மற்றும் நாகேஸ்வரி (ருக்மணி) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அழகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கயசித்தாவின் அன்புக் கணவரும், விஜியரட் ணம், தவநிதி, செல்வரட்ணம், விஜியரூபன், தவராணி, தயாழினி, காலஞ்சென்றவர்களான விஜியபாலன், விஜியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பகீதரன், மதிதரன், காலஞ்சென்றவர்களான சிறிதரன், ரதிதரன், சுரேஸ்தரன், றமேஸ்தரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (46707) (45.3.6)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கிருஸ்ணபிள்ளை



கொக்குவில் மேற்கு காரைக் காட்டைப் பிறப்பிடமாகவும், 34/6, இராமநாதன் வீதியை (கலட்டி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஸ்ண பிள்ளை நேற்று (11.04.2014) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகரட்ணம் (சின்னக்கிளி, டென்மார்க்) அவர்களின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற நாகரத்தினம் (பேபி) மற்றும் இராசமணி, இராசமலர் ஆகியோரின் சகலனும், செல்வரத்தினம், தேவி (டென்மார்க்), வசந்தி (டென்மார்க்), லக்ஸ்மணன் (போதகர்-கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம், மானிப்பாய்), பாஸ்கரன் (லண்டன்), ஜெனி(சுவிஸ்), சசி (இத்தாலி), றமிலா (டென்மார்க்), காலஞ்சென்ற சைலஜா ஆகியோரின் அன்பு தகப்பனாரும் நாகேஸ்வரி, தவநாயகி, பாலசுப்பிரமணியம் (டென்மார்க்), சண்முகராஜா, புஸ்பகலா, ஸ்ரெலா (லண்டன்), தவுசலா (சுவிஸ்), வதனி (இத்தாலி), குகன் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனோ (போதகர்-கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்-மானிப்பாய்), ஜெஸ்ரின் (ஜேர்மனி), ஜெகா ஆகியோரின் சிறிய தகப்பனாரும், அனோஜன், ஜெரோன், ஜெரினா, ஜெனிஸ்ரா, சாரோன், அழகோவியம் (டீனு), ஏஞ்சலா, சாரா, சாம், ஜெரோமி, டனில், மியூரி, எஸ்லி, றொயிஷன், றொஷானா, றொக்ஷன், டனுஷன், தஸ்மிலா, சாரோன், அபிஷா, ஷாருஜா, பிராங்கிலின், மரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், செகீனாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.04.2014) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் தாவடியிலுள்ள கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/6, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். (46720)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் புகழ்பூத்த கணித ஆசான்

### தம்பு அப்பலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி. (46715) (45.3.6)

## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
### கோணேஸ்வரி துரைராஜா



அன்னை மடியில்
01.01.1939
ஆண்டவன் அடியில்
12.04.1991
திதி: - திரயோதசி

எமது உள்ளத்தில் நிலைபெற்ற தெய்வமே
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்றாயோ
இப்பூவுலகில் எம்மைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றாயோ
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு எங்களை விட்டு
என்றுமே அழியாது அம்மா
நெஞ்சம் நெக்குருக நினைந்து வாழ்கின்றோம்

கண்ணீருடன்
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

95,சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (45884)(2.6.3)

## 82 ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
### மகேஸ்வரி அரியகுட்டி

மண்ணில்
12.04.1932

விண்ணில்
13.03.2014

கடந்த 13.03.2014 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவி திருமதி மகேஸ்வரி அரியகுட்டி அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு,

இன்று (12.04.2014) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
077 663 7640

வல்லைறோட்,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (46718)(12.3.6)

## விளையாட்டு விழா

திருநெல்வேலி 'சிமாட் கிட்ஸ்' முன்பள்ளியின் கனிஷ்ட பிரிவினருக்கான விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினர்களாக வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனும் அவரது பாரியாரும் கலந்து கொள்வார்கள். (க)

## பௌர்ணமி உற்சவம்

மாங்குளம் அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த சித்திரை மாத பௌர்ணமி உற்சவம் இந்த மாதம் 14 ஆம் திகதிக்குப் பதிலாக அடுத்த மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. ஏற்கனவே புதுவருடப் பிறப்புத் தினத்தன்று பௌர்ணமி உற்சவம் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் மேற்படி உற்சவம் இடம்பெற மாட்டாதென ஆலயத் தலைவர் மு.நாகரெட்ணம் தெரிவித்துள்ளார். (க-421)

### நகராட்சிமன்றம், சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 28.04.2014ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதே தினம் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு தாங்கள் கேள்வி கோர விரும்பினால் அதற்கான கட்டணத்தை செலுத்தி கேள்விப்படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT) |
|---|---|---|---|
| 01 | நகரமண்டபத்தின் முன்பக்கம் கொங்கிறீற் கற்கள் பதித்தல் | 22,000.00 | 1140.00 (நகராட்சிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தகாரர்கள் இக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்) |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தில் 25.04.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதி செயலாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு. நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம். சிவன் பண்ணை வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28.04.2014 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்றம்
சாவகச்சேரி.
11.04.2014 (C/7670)(2.3.6)

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

## வேலணை பிரதேச செயலர் பிரிவில் பயனாளிகளுக்கு உதவிப் பொருள்

யாழ்ப்பாணம், ஏப்.12

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள். மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுவெள்ளிக்கிழமை வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வேலணைப் பிரதேச செயலர் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசநாயகம், மீன்பிடி பரிசோதகர், கால்நடை வைத்தியர் ஆகியோர் உதவிப் பொருள்களை வழங்கினர்.



வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி பயனாளி ஒருவருக்கு மீன்பிடி வலைகளை வழங்குகிறார்.

20 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் 28 பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டன. (வ-7)

## வங்கியின் ஏற்பாட்டில் சிறார்களுக்கான நிகழ்வு இன்று

வடமராட்சி, ஏப்.12

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையினர் நடத்தும் மழலைகளுடன் மக்கள் வங்கி என்னும் சிறார்களுக்கான நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளை முகாமையாளர் சதானந்தன் சர்வானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், உதவிப் பிராந்திய முகாமையாளர் ரா.ரவிகர்ன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினராக உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கௌரி சேதுராஜா கலந்து கொள்வார். மழலைகளின் கலை நிகழ்வு, மழலைகள் கௌரவிப்பு, சிறுவர்களுக்கான கல்வி மென்பொருள் தொகுப்பு அறிமுகம் ஆகியன சிறப்பு அம்சங்களாக நிகழ்வில் இடம்பெறவுள்ளன. (ஒ-173)







## பொது மண்டபம் இன்று திறப்பு

கைதடி, ஏப்.12

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினரால் கைதடி கிழக்கு இராஜபுரியில் அமைக்கப்பட்ட வளர்மதி பொது மண்டபத்தின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி தர்சினி தியாகராசா வும் சிறப்பு விருந்தினர்களாக கைதடி வளர்மதி சன சமூக நிலையத்தின் ஸ்தாபகர் சி.திரவியம், கைதடி கிழக்கு கிராம சேவகர் சி.இரவீந்திரன், வளர்மதி சன சமூக நிலையத் தின் லண்டன் கிளை செயற்பாட்டாளர் திருமதி இராசேந்திரம் ஆனந்த ராணி ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஒ-288)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது பொன் வருட குருபூசையை முன்னிட்டு ஜய வருடம் முழுவதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் பன்னிரு திருமுறை முழுவதையும் முற்றோத உள்ளனர்.

எதிர்வரும் ஜய வருடம் சித்திரைத் திங்கள் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தினமும் காலை 7 மணி முதல் 8 மணி வரையும் மாலை 5 மணி முதல் 6 மணி வரையும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரண்டு மாதங்களும் பன்னிரு திருமுறைகள் முற்றோதப்படவுள்ளன. விருப்பமுள்ள அடியார்கள் இதில் பங்குபற்றிப் பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார். (க)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ் கச்சேரி நல்லூர் வீதிக்கு அண்மையாக சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 470 5540 (46706) (7.6.3)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**

Congratulations

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற
க.பொ.த. (சா/த) பரீட்சையில் நெல்லியடி
மகாத்மா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த

செல்வி சம்யா ரஞ்சன் (7A, B, C)
செல்வி ஜெனனி நேமிநாதன் (3A, 3B, 2C,S)
செல்வன் யோகராசா யாழவன் (2A, 3B, 3C)
செல்வி துஷாந்தி ஜெகதீஸ்வரன் (A, 2C, 5S)
செல்வன் கந்தவனம் திவ்யநாத்

ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.
அவர்களைப் பாராட்டுவதில்
பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

Congratulations
Best Wishes

**மகாத்மா விளையாட்டுக்கழகம்**
**ஐயனார் கோயிலடி, நெல்லியடி.**

(C/13490)(7.6.3)

**வீடு வளவு விற்பனைக்கு**

அச்சுவேலி வடக்கு இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்திற்குப் பின்புறமாக சகலவசதியும் கொண்ட 2½ பரப்புக் கணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 114 6326 (46715) (12.3.6)

**கடை வாடகைக்கு**

இல.164, ஸ்ரான்லி வீதியில் (Dialog இற்கு முன்பாக) அமைந்துள்ள 100 அடி நீளமும் 19அடி அகலமும் கொண்ட கீழ்க்கடையும், முதலாம் மாடியும், சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. (46711) (45.6.3)
தொடர்பு: 077 196 2465, 021 222 2850

**விற்பனைக்கு கட்டா ஊர்க்கருவாடு**

தலை, முள்ளு அகற்றப்பட்டு சுகாதார முறைப்படி உப்புக் குறைத்து காய விடப்பட்ட வெளிநாட்டுக்கான கட்டா ஊர்க்கருவாடு விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:077 256 7072/077 452 7454

**மணமகள் தேவை**

* 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 28 பாவமுடைய AAT முடித்து லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 1இல் சூரியனும் , செவ்வாயும் 45¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற எலற்ரிக்கல் இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 81 இல் பிறந்த 4 இல் சூரியனும், செவ்வாயும் 24 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற Bsc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த 7இல் சூரியனும், செவ்வாயும் 25½ பாவமுடைய ஜேர்மனி பிரஜாவுரிமை பெற்ற Phd இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. மணமகன் வந்துள்ளார். (விவாகரத்துப் பெற்றவர்)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.077 607 0862 (46713) (7.6.3)

## வலி.கிழக்கு பிரதேசசபை,புத்தூர்.
## மீள் கேள்வி அறிவித்தல் -2014

கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடையினை 2014 ஆம் ஆண்டிற்கு (01.05.2014 - 31.12.2014) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 16.04.2014– 25.04.2014
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 25.04.2014 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 25.04.2014 பி.ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு.மூலப்பிரதியை "செயலாளர். வலி கிழக்கு பிரதேசசபை,தலைமை அலுவலகம்,புத்தூர்"எனும் முகவரிக்கும். இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும். எதிர்வரும் 25.04.2014 ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ.அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ( வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை ( வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 213,170 | 500.00 |

01. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வலி கிழக்கு பிரதேசசபை,**
**தலைமை அலுவலகம்,**
**புத்தூர்.**
**12.04.2014**

(C/13493)(2.6.3)

**நாகராஜா குமணன்**
**செயலாளர்,**
**வலி கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்**

**ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான**
**நாட்டிய சாஸ்திர பட்டறை**
**நடத்துபவர்கள்**



கலாநிதி
**பப்பு வேணுகோபால றாஒ**



கலாநிதி
**யசோதா தாகூர்**

இடம் : இராமநாதன் நுண்கலை கல்லூரி
மருதனார் மடம்.

காலம் : **18 - 20 April 2014**

**நிகழ்ச்சி நிரல்:**

காலை: 6.30 - 8.00 பரதநாட்டிய கலைஞர்களுக்கான யோகாசனம்
9.30 - 12.30 பட்டறை
மாலை: 4.00 - 6.00 செயல்முறை பயிலரங்கு

மேலதிக விவரங்களுக்கு: S. நிறஞ்சன்
carnaticradio@gmail.com
006 596 182 105

(c13491) (45.6.3)

**பொதிகள் சேவையின்**
**புத்தாண்டு பரிசுகள்**

பொதிகள் சேவையில் முத்திரை பதித்துள்ள
**G.T.V Enterprises (Pvt) Ltd, Maharaja Food Products, Vijeya Enterprises**
ஆகிய நிறுவனங்கள் கடந்த தை மாதம் முதல் பங்குனி மாத இறுதி வரையில் யாழ்.நகரில் எமது நிறுவனத்துடன் பொதிகள் சேவையினை மேற்கொண்டுள்ள நிறுவனங்களிலிருந்தும் எமது யாழ்.கிளையில் நேரடியாக பொதிகள் அனுப்பிய வாடிக்கையாளர்களிலிருந்தும் குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்பட்டு

பரிசில்களை பெறும் அதிஷ்டசாலிகள்

| பரிசு இல | தொடர் இல | நிறுவனம்/வாடிக்கையாளர் பெயர் | பரிசுப் பொருள் |
|---|---|---|---|
| 04 | 92682 | சிவநாதன் | GRINDER |
| 05 | 92802 | ஆன்டன் அலொய்சியன் | SAREE |
| 06 | 89383 | ரோமதாஸ் | HEATER |
| 07 | 89433 | கனகசபாபதி | HEATER |
| 08 | 98255 | பாரதி.கொம் | GRINDER |
| 09 | 97422 | மணி நெற்.கொம் | HEATER |
| 10 | 97374 | அன்ரன் ஜெயராஜன் | SAREE |
| 11 | 97295 | கனகரத்னம் | HEATER |
| 12 | 97272 | ராஜேந்திரன் | SAREE |
| 13 | 93203 | சிவபாலன் | SAREE |
| 14 | 93184 | கல்பன் | SAREE |
| 15 | 93441 | கணேசன் | HEATER |
| 16 | 93448 | தவமணிதேவி | SAREE |
| 17 | 93473 | ஆனிக் கொமினிகேஷன் | SAREE |
| 18 | 93576 | தைவேத்ரம் | SAREE |
| 19 | 93591 | பரம்சோதி நடராஜன் | SAREE |
| 20 | 93598 | ரதீபன் | SAREE |
| 21 | 97841 | லேன்ட்மார்க் | SAREE |

(C/13340)(2.6.3)

# போரால் தமிழர் சொல்லொணா கஷ்டங்களை எதிர்கொண்டனர்

## கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

தென்மராட்சி ஏப்.12

30 வருடங்களுக்கு முன்னர் சகோதரர்களாக ஒன்றுபட்டு நாட்டில் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்த தமிழ் சிங்கள, முஸ்லிம் குடும்பங்கள் கொடிய போரால் பிரிந்ததுடன் இன ரீதியாகப் பிரிக்கப்பட்டோம். போரில் எவரும் வெல்லவில்லை. மாறாக நாட்டில் வாழ்ந்த அனைத்து மக்களும் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டோம்.

போரால் இரு தரப்பிலும் பலர் தமது இன்னுயிரை இழந்துள்ளனர். தமிழ் மக்களாகிய நீங்கள் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்துள்ளீர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே. எதிரிசிங்க. போரால் பலன் கண்டவர்கள் வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்களே. நாட்டில் இன்றும் போரை அவர்களே விரும்புகின்றனர். தாங்கள் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காக இங்குள்ள அப்பாவி இளைஞர், யுவதிகளைப் பலிக்கடாவாக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறானவர்களின் தவறான நடவடிக்கைகளில் உங்கள் பிள்ளைகளை ஈடுபட அனுமதிக்க வேண்டாம்.

நேற்று முன்தினம் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவு சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது-

தற்போது ஒவ்வொரு பிரிவிலும் சட்டவிரோத செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய பொதுமக்களின் பங்களிப்பு பொலிஸாருக்கு அவசியமாகியுள்ளது. கசிப்பு உற்பத்தி உட்பட்ட சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் வீடுகளுக்குள் புகுந்து திருடுதல், சில இடங்களில் குழு மோதல்கள் என பல்வேறு குற்றச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் தயார் நிலையில் உள்ள போதிலும் பொதுமக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்காததால், எம்மால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் தெரியப்படுத்தக் கூடிய வகையில் ஒவ்வொரு பிரிவிலும் உதவிப் பொலிஸ் பரிசோதகரின் மேற்பார்வையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொரு பிரிவிலும் 25 பேர் கொண்ட சிவில் பாதுகாப்பு குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் பொலிஸாருக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்குவதற்காக கிராம அலுவலர் சமுர்த்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், அலுவலகங்களிலும் அந்தந்தப் பிரிவுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் உதவிப் பரிசோதகரினதும் தொலைபேசி இலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உங்கள் பகுதிகளில் முன்னர் அறிமுகமில்லாத புதியவர்கள் எவராவது காணப்பட்டால் அல்லது குற்றச் செயல்கள் இடம்பெற்றால் தயங்காமல் பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது தங்கள் பிரிவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கோ அறிவித்து உங்கள் பிரிவில் குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (வ-9)

# தமிழ் மக்கள் மீது போரைத் திணிக்கிறது இராணுவம்

## சாடுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம், ஏப்.12

வடக்கின் இராணுவ மயத்தை நியாயப்படுத்தவே பாதுகாப்புச் செயலர் போர் ஒன்று உருவாகாமல் தடுக்கவே பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் போரை மக்கள் எப்போதும் தொடங்குவதில்லை என்பதும் இராணுவத்தினரின் ஆயுத ஒடுக்குமுறை மக்கள் மீது திணிக்கப்படும் போது மக்கள் எடுக்கும் தற்காப்பு நடவடிக்கைகளே போராக வெடிக்கின்றன என்பதே உலகம் முழுவதிலும் உள்ள வரலாறு.

உண்மையில் போர் விரிவதைத் தடுக்கவேண்டுமானால் வடக்குக் கிழக்கில் இருந்து படையினர் வெளியேற்றப்பட்டு இங்கு ஒரு சிவில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதே ஒரே வழி என்பதை ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்று தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். குடாநாட்டில் அண்மைக்காலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இராணுவக் கெடுபிடிகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாபிலவுப் பகுதியில் படையினரால் கட்டி அமைக்கப்பட்ட வீடுகளை பொது மக்களுக்கு வழங்கும் வைபவத்தின் போது உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் வெளியிட்ட ஒரு முக்கியமான கருத்தை நாம் கவனத்துக்கு எடுக்காமல் விடமுடியாது. அவர் மட்டுமன்றி பல்வேறு அரச தரப்பினரும்மே வடக்குக் கிழக்கில் பெருந்தொகையான படையினர் நிலைகொண்டு இருப்பதற்குப் பல்வேறு காரணங்களை முன்வைத்து வருகின்றனர். இவற்றில் படையினர் நிலைகொண்டு இருப்பதற்குப் பல்வேறு காரணங்களை முன்வைத்து வருகின்றனர். இவற்றில் பல ஒன்றையொன்று சார்ந்தனவாகவும் இன்னும் சில ஒன்றுடன் ஒன்று முரண்பட்டனவாகவும் அமைந்திருந்தமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆனால் பாதுகாப்புச் செயலாளர் முன்வைத்த காரணம் ஏற்கெனவே வெளிவந்தவைகளைவிட தாக்கமானதாகவும் வடபகுதி மக்கள் மேலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதை பூடகமாக உணர்ந்து வருவதாகவும் அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் திடீர் இராணுவச் சுற்றிவளைப்புகள், சோதனை நடவடிக்கைகள், கைதுகள் என்பவற்றை நியாயப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளமையை நாம் அவதானிக்க முடியும்.

அதாவது மீண்டும் ஒரு போர் வராமல் தடுப்பதற்காகவே வடக்கில் அதிகளவான படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்துக்கள் மேலும் மேலும் கெடுபிடிகள் தமிழ் மக்கள் மீது அதிகரிப்பதற்கான முன் அறிவித்தலாகவே தென்படுகின்றது.

மீண்டும் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க அணிதிரண்டு வருகின்றனர் எனக் கூறப்பட்டே இராணுவச் சுற்றிவளைப்புகளும் வீதிச் சோதனைகளும் கைது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 50 இற்கும் மேற்பட்டோர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கென கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புச் செயலரின் கருத்துப்படி இந்தக் கைதுகளும் போர் வராமல் தடுக்கும் முயற்சிகளில் ஒரு பகுதியே.

எனவே அதிகளவு இராணுவத்தினர் வடக்கில் குவிக்கப்படுவது மீண்டும் சுற்றிவளைப்புகளும், கைதுகளும் நிறைந்த ஒரு அச்சமூட்டும் நிம்மதியற்ற ஒரு வாழ்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கே என்பதை மிகவும் தெளிவாகப்புரியும்படி பாதுகாப்புச் செயலாளர் கருத்துக்கள் மூலம் வெளியிட்டுள்ளார்.

ஆனால் இப்படியான நடவடிக்கைகள் மூலம் போர் உருவாகுவதைத் தடுக்க முடியாது என்பதும் இல்லாத போர்களையே உருவாக்கிவிடும் என்பதையும் உலக வரலாறு மீண்டும் மீண்டும் கற்பித்து வந்துள்ளது. ஆனால் ஆட்சி அதிகாரமும் அதிகாரப் பலமும் கொண்டவர்கள் எப்பொழுதுமே ஆயுத பலத்தால் போர் உருவாவதைத் தடுத்து விட முடியும் என நம்புகின்றனர். ஆனால் இந்த வழிமுறை மூலம் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்த முடியுமே ஒழிய போரை நிறுத்திவிட முடியாது. போர் உருவாவதற்கான மூல காரணம் களையப்படுவதன் மூலமே போரை நிரந்தரமாக இல்லாமற் செய்யமுடியும். அதை உதாசீனம் செய்து ஆயுத பலத்தால் போரை இல்லாமல் செய்யும் முயற்சிகள் காலம் காலமாக தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளன.

1983 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சில வருடங்களில் வடபகுதியில் இராணுவம், பொலிஸ் என்பவற்றின் சுற்றி வளைப்புகள், தேடுதல் வேட்டைகள், கைதுகள் என ஒரு அச்சம் நிறைந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டது. எந்தவொரு இளைஞனும் எந்த வொரு காரணமுமின்றி கைது செய்யப்பட்டு சித்தரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு சிறையிடப்படலாம் என்ற நிலை நிலவியது. ஆயுதம் ஏந்திப் போராடினால் தான் தப்பமுடியும் என்ற நிலை உருவானது.

எனவே, ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ ஒடுக்குமுறை த்மிழ் மக்கள் மத்தியில் பல ஆயுதப் போராட்ட முறைகளை உருவாக்கின. ஆயுதப் போராட்டம் முனைப்புடன் வீறுகொண்டெழுந்தது. காலப்போக்கில் ஏனைய அமைப்புக்கள் செயலிழந்து போக விடுதலைப் புலிகள் தனிப் பெரும் சக்தியாக எழுச்சி பெற்றனர். அவர்கள் பல பிரதேசங்களைத் தம்வசம் வைத்திருக்கும் அளவுக்கும் தனியான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் வகையிலும் பலம் பெற்றனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் இராணுவ ஒடுக்குமுறை வழிமுறை இலங்கைத்தீவே பெரும் பேரழிவுகளைச் சந்தித்த ஒரு பெரிய போரையே உருவாக்கியது.

ஏற்கெனவே இலங்கை பெற்ற இந்தக் கொடிய கசப்பான அனுபவத்தை இன்றைய ஆட்சியாளர்கள் நன்றே புரிந்து வைத்துள்ளனர். எனி னும் இவர்களும் கூடப் போரின் மூல காரணத்தை களைந்து ஒரு நிரந்தர சமாதானத்தை உருவாக்கத் தயாரில்லை. மாறாக போர் உருவாகுவதற்கு முன்பே ஒடுக்குமுறைகளை மேலும் மேலும் அதிகரிப்பதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களைச் செயலற்ற நிலைக் குத் தள்ளி அடிமைகளாக்கி அமைதியை நிலைநாட்ட விரும்புகின்றனர். இனத் தனித்துவத்தை அடக்கி பெரும்பான்மை இனத்துக்குள் கரைத்து விடும் ஒரு நீண்ட கால நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதை ஆயுத முனையில் நிறைவேற்றிவிட முடியும் என நம்பும் நபர்களில் பாதுகாப்புச் செயலரும் ஒருவர். எனவே தான் அவர் போர் உருவாகாமல் இருக்க இராணுவ ஒடுக்குமுறைகளை வலுப்படுத்துவது என்ற வழிமுறையைத் தெரிவுசெய்துள்ளார்.

அதேவேளையில், சர்வதேச அழுத்தங்களைக் குறைக்கும் வகையில் அரச தரப்பினர் வடக்கில் நிலைகொண்டுள்ள படையினரின் தொகையைக் குறைத்து காட்டி வருகின்றனர். எனினும் ஒவ்வொருவரும் வெளியிடும் கருத்துக்கள் ஒன்றில் இருந்து ஒன்று முரண்படுவதில் இருந்தே அவற்றின் உண்மைக்குப் புறம்பான தன்மையை நாம் புரிந்துகொள்ள முடியும்.

17.06.2012 இல் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வடக்கில் படையினரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைக்கப்பட்டு விட்டதாகவும் தற்சமயம் 15, 600 படையினரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் 9.7.2012 இல் யாழ். பாதுகாப்பு தலைமையகத்தின் இணையத்தளம் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கிறது. அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை ஒன்றின்போதே 2009 இல் வடக்கில் 70 ஆயிரம் படையினர் இருந்ததாகவும் தற்சமயம் 12 ஆயிரம் பேரே இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

எப்படி இருப்பினும் வடக்கில் வாழும் 5 பொதுமக்களுக்கு ஒருவர் என்ற விகிதா சாரத்தில் படையினர் குவிக்கப்பட்டிருப்பதாக உத்தியோக பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜெனிவா மாநாட்டை அண்மித்த காலப் பகுதியில் சில சிறுபடை முகாம்கள் மூடப்பட்டது உண்மை. ஆனால், அவர்கள் பெரிய முகாம்களில் நிலை நிறுத்தப்பட்டுள்ளனரேயொழிய வடக்கை விட்டு வெளியேற்றப்படவில்லை.

அதேவேளையில் சிவில் நிர்வாகமும் இராணுவத் தலையீடும் நிறுத்தப்படவில்லை. மேலும் மிருசுவில், இயக்கச்சி ஆகிய பகுதிகளில் முகாம்களை விஸ்தரிக்கும் நோக்குடன் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படி இராணுவம் வடக்கில் குறைக்கப்பட்டு விட்டது எனக் கூறப்படும் ஏமாற்று வார்த்தைகள் பலவிதத்திலும் அம்பலப்படுத்தப்பட்டு, வடக்கில் இராணுவம் நிலைகொண்டிருப்பதை நியாயப்படுத்திப் புதிய போர்ப் பூச்சாண்டி காட்டப்படுகின்றது. அந்த நோக்கத்துக்காகவே புலி வேட்டை என்ற பெயரில் சுற்றி வளைப்புகளும் சோதனை நடவடிகைகளும் கைதுகளும் கட்டவிழ்த்து விடப்ப்ட்டுள்ளன.




### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம் பாள் திருக்கோயிலின் வளர்ச்சிக்காக மேற்படி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு புதுவருடப் பிறப்பான 14 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆலயமுன்றிலில் நடைபெறும் சீட்டிழுப்பில் பரிசில் பெறுவோருக்கான பரிசில்களும் அன்றைய தினமே வழங்கப்படும்.

(சி/4218) பரிபாலனசபை.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



C.A. மோகன்றாஸ் ஜெக்குலின் தம்பதியரின் ஏக புதல்வி

**அன்ரனிற்ரா சுபேஸ்கா**

(யா/வேம்படி மகளிர் உயர் கல்லூரி) அவர்கள் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் 9 ஏ (தமிழ்மொழிமூலம்) பெற்றுச் சித்தியடைந்தமையை அக மகிழ்ந்து அவரைப் பாராட்டி மேலும் பல சித்திகளைப் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

V.செல்வநாதன் குடும்பத்தினர், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (46734)

வாழ்த்துவோர்: பெரியப்பா, பெரியம்மா, (அண்ணாப்பா, அண்ணாம்மா, அண்ணாக்கள், தங்கை)

# அனைவருக்கும் பொதுவானதே இந்திய வீட்டுத்திட்டம்

## இந்தியத் தூதர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.12
மலையகத்தில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள இந்திய வீடமைப்புத் திட்டமானது அரசியல், தொழிற்சங்க பேதமின்றி பொதுவாகவே நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று இந்தியத் தூதர் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி இராதா கிருஸ்ணன் தெரிவித்தார்.
மலையகத்தில் இந்திய அரசின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள 4000 வீடுகள் தொடர்பான பேச்சு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள இந்திய தூத ரகத்தில் தூதர் வை.கே.சின்ஹா தலைமை யில் நடைபெற்றது.

> கடந்த சில நாள்களாக இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பாக பல்வேறு கருத்து முரண்பாடுகளும் எதிர்ப்புகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்தப் பேச்சில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுச்சாமி இராதாகிருஸ்ணன், பழனி திகாம்பரம், பீ.ராஜதுரை, மாகாண சபை உறுப்பினர் மனோகணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.
கடந்த சில நாள்களாக இந்திய வீடமைப் புத் திட்டம் தொடர்பாகப் பல்வேறு கருத்து முரண்பாடுகளும் எதிர்ப்புகளும் வெளி வந்த வண்ணம் உள்ளன. இதன் ஒரு கட்டமாகவே இந்தப் பேச்சு நடைபெற்ற தாக நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி இராதா கிருஸ்ணன் குறிப் பிட்டார். (ச)

# கடும் காற்றால் குடியிருப்புக்கள் சேதம்

கொழும்பு,ஏப்.12
அவிசாவளை, கொஸ்கம பகுதியை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் 30 தொழிலாளர் குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் குறித்த பகுதியை ஊடறுத்து கடும் காற்று வீசியதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.
காற்றினால் சேதமடைந்த வீடுகளில் வசித்தவர்கள் தற்காலிகமாகப் பாதுகாப்பான இடமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச)


**சித்திரைக் கதைப்படிப்பும் ஏலவிற்பனையும்**

எமது ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறுகின்ற சித்திரைக் கதைப் படிப்பும் ஏலவிற்பனையும் எதிர்வரும்
**15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 09.00** மணியளவில் நடைபெறவுள்ளது. அன்று பி.ப.03.00 மணியளவில் நடைபெறவுள்ள ஏலவிற்பனையில் அடியார்கள் கலந்துகொண்டு விநாயகப் பெருமானினதும் காளியம்பாளினதும் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்
(காளிகோயில்) பரிபாலன சபை.
(46721) (12.3.6)


## மரண அறிவித்தல்

### டாக்டர் V. நாகமணி (R.M.P)



கொல்லங்கலட்டியில் நீண்ட காலம் வசித்தவரும், பொன்னாலை மூளாயை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது APT, 60750 Tuxido Court, Scabarogh, canada வில் வசித்தவருமான டாக்டர் V.நாகமணி கடந்த 08.04.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் அருள்சோதியின் (பெரியராசு), அன்புக் கணவரும், நிர்மலகாந்தன் (பொறியியலாளர், அமெரிக்கா), கலைவாணி (அமெரிகா), விஜயகாந்தன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), தயாளகாந்தன் (அமெரிக்கா) ஆகியோரின அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அப்போதிக்கரி செல்லப்பாவின் அன்பு மருமகனும், தொல்புரம் பஸ் முதலாளி காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மகன் டாக்டர் கதிர்காமநாதன் மற்றும் காலஞ்சென்ற டாக்டர் பாலகிருஸ்ணனின் மகள் சியாமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (10.04.2014) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பனை,
தொ.பே.: 0212059633 (46725)

தகவல்:
செ.அருணாசலம் (ஆசிரியர்)

# மதுபானத்துடன் பயணித்த ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.12
மதுபானத்துடன் பயணித்த ஒருவர் திஸ்ஸமஹாராம, அதுருகொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
தெபரவெவ பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைதாகியுள்ளார்.
இந்த நபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் மதுபானம் அடங்கிய 96 போத்தல்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக திஸ்ஸமஹாராம பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளார். (ச)


**தமிழ் புத்தாண்டு**

**சிறப்பு மலிவு விற்பனை**

உங்கள் நெஞ்சங்களை மனம்மகிழ வைக்கும்
மிகக் குறைந்த விலைக்கு... தரமுயர்ந்த புத்தாடைகள்
எங்கும் தேட முடியாத அற்புத தெரிவுகள் எவராலும் தரமுடியாத குறைந்த விலைகளில்
அலையென திரண்டுவந்து அள்ளிச் செல்ல வாருங்கள்

கனடா ஜெயசாஜி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Phone : 021 221 9393

(2500 ரூபாவிற்கு மேற்பட்ட சாறிகள், சல்வார்களுக்கு நெக்லஸ் மற்றும் காப்பு இலவசம்)
09.04.2014 தொடக்கம் 13.04.2014 வரை மட்டுமே...
காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
(46724) (7.6.3)



**அறிவித்தல்**

மாங்குளம், அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திரைப் பௌர்ணமி உற்சவம் 14.04.2014 ஆம் திகதி சித்திரை வருடப்பிறப்பு அன்று நடைபெறமாட்டாது என்பதையும் வழமை போல் 14.05.2014ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்பதையும் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயம், மாங்குளம்.
(432522)(5.6.3)


## மரண அறிவித்தல்

### சரவணை கனகேஸ்வரன் (வவா)



யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு, நாச்சிமார் கோயிலடி யைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (Luenen) வதிவிடமாகவும் கொண்ட சரவணை கனகேஸ்வரன் 08.04.2014 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை- பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் பாசமிகு கணவரும், விதூஷன், ஜெனித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா, கோமளாதேவி, மகேந்திரன், சிவநேசன், இராஜேஸ்வரன், வனிதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரமோகன், ரவிமோகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(13.04.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00-12.00 Bestattung shaus Kirchhof Merten Altstadtstr.19-21, Luenen 44534, Germany இல் நடைபெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் கரந்தன், நீர்வேலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகேந்திரன் (சகோதரன்-077 3111066)
மோகன் (மைத்துனர் 077 4550 773)
நீர்வேலி.
(46727)(5.6.3)

# வெதுப்பகத்தை நடத்திவரும் ஆனைவிழுந்தான் குளம் மக்கள்

கிளிநொச்சி, ஏப்.12
கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தில் வெதுப்பகம் ஒன்றைப் பொதுமக்கள் நடத்தி வருகின்றனர்.
கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வெதுப்பகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கெயார் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் எஸ்.சிறிகாந் வெதுப்பகக் கட்டடத்தைத் திறந்து வைத்திருந்தார்.
இந்த வெதுப்பகம் மூலம் கிடைக்கும் வருமானத்தை குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ள மக்கள் சுழற்சி முறையில் கடனாகப் பெற்றுப் பயன் பெற்று வருகின்றனர்.
இந்தத் திட்டத்தை கெயார் நிறுவனமே ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)


**வேலை ஆள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியி ருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப் படும். ஆரம்ப வேதனம் ரூபா 10,000 விலிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும் வயது 18 - 22 வரை.

11 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3857
(46730)



**KINGS ELECTRONICS**
11A, Stanley Road, Jaffna,
T.P:- 021 222 3857

LED Bulbs
SALES SALES
for PLASTIC METRAL

| PLASTIC | METRAL |
|---|---|
| 5 W 230 /= | 5 W 300 /= |
| 7 W 280 /= | 7 W 400 /= |
| 9 W 360 /= | 9 W 600 /= |

4` LED Tube Light
16 W 1300 /=
SALES
(46184)(2.45.6.3)


## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு கைலாயநாதன்



கரம்பொன் கிழக்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், யாழ். ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கைலாயநாதன் நேற்று (11.04.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-பராசக்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், உருத்திராணியின் அன்புக் கணவரும், சிவநாதனின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 95/10, ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(46729)

தகவல்:
குடும்பத்தினர்


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
**இளவரசி சேலைச் சோலை ஸ்தாபனம்**
வழங்கும்
**மாபெரும் மலிவு விற்பனை**

| | |
|---|---|
| கொட்டன் சாறி | 500/= |
| வேக் சாறி | 1,000/= |
| சூரக் சாறி W/B | 750/= |
| சேட் | 500/= |
| 44" கொட்டன் சீத்தைகள் 1M | 150/= |
| 36" கொட்டன் சீத்தைகள் 1M | 100/= |

மேலும் பல விலைக்கழிவுகள்

மாபெரும் மலிவு விற்பனைக் களஞ்சியம்
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/13463)(7.6.3)

## தவக்காலத்தின் இறுதி வாரத்தில் யாழ்.பேராலயத்தில் வழிபாடுகள்

கொழும்புத்துறை, ஏப்.12

தவக் காலத்தின் இறுதி வாரமாகிய புனித வாரத்தில் யாழ். பேராலயத்தில் இடம்பெறவுள்ள இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, நினைவுத் திருவழிபாட்டு விவரங்கள் பேராலயப் பங்குத் தந்தையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை குருத்தோலை ஞாயிறு தின திருப்பலிகள் முதல் திருப்பலி காலை 6 மணிக்கும், 2 ஆம் திருப்பலிகாலை7.30மணிக்கும் மாலைத்திருப்பலி 4.30 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருத்தைலம் மந்திரிக்கும் சடங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும். புனித வியாழன் திருப்பலி, கால் கழுவும் சடங்கு என்பன மாலை 5 மணிக்கும், பொது ஆராதனை நிகழ்வு இரவு 9.30 மணிக்கும் இடம்பெறும்.



புனித வெள்ளிக்கிழமையன்று சிலுவைப் பாதைத் தியானம் காலை 6.30 மணிக்கும், புனித வழிபாடுகள் மாலை 4 மணிக்கும் நடைபெறும். சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஏழு வார்த்தைத் தியானமும் இடம்பெறும். திருவிழிப்பு வழிபாடுகள் சனி இரவு 10.30 மணிக்கு இடம்பெறும்.

உயிர்ப்பு ஞாயிறு திருப்பலிகள் காலை 6.30 மணிக்கும் காலை, 7.15 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும். (ஒ-135)

## சித்திரை புதுவருடத்தில் மது அருந்தி குற்றச்செயல்களில் ஈடுபட வேண்டாம்

### சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்து

தென்மராட்சி, ஏப்.12

சித்திரைப் புத்தாண்டை மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் கொண்டாட அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மகிழ்ச்சிகரமான நாளில் மது போதை பாவனையால் குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாம்.

இவ்வாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பின்யூ.எம்.எஸ்.தென்னக்கோன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையப் பிரிவுக்கான ஆலோசனைக் குழுவின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஆலோசனைக் குழுவின் தலைவர் மருத்துவர் த.குகதாஸன் கருத்துத் தெரிவிக்கையில்:

கடந்த வருடம் வீதி விபத்துக்களில் சிக்கி 84 பேர் காயமடைந்துள்ளனர், அவர்களில் 15 பேர் பெரிய காயங்களுக்கு உள்ளாகினர்.

தாக்குதல் சம்பவங்களில் 124 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் 8 பேருக்கு பெரிய காயங்கள் ஏற்பட்டதாகவும் 3 பேருக்கு எலும்பு முறிவும் 6 பேருக்கு தலையில் காயங்களும் ஏற்பட்டதாகவும் புள்ளி விவரங்களுடன் தெரிவித்ததுடன் அவர்களில் பெரும்பாலானோர் மதுபோதையில் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வாகன விபத்துக்களில் சிக்கிய சாரதிகளும் பாதசாரிகளும் மதுபாவித்த நிலையில் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

புதுவருட காலத்தில் தமது சிறு பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் மதுவை வழங்குவதால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படலாம் என்றும் கருத்து முன்வைக்கப்பட்டது.

புத்தாண்டையொட்டி பல்வேறு நிறுவனங்கள் விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளன.

எனவே போட்டிகளைப் பார்வையிட வருவோர் மது போதையில் நின்று முரண்பாடுகளை ஏற்படுத்துவதால் ,பிணக்குகள் ஏற்படுகின்றது. அவ்விதம் மது போதையில் காணப் படுபவர்களை அங்கிருந்து வெளியேற்ற பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் கருத்து முன்வைக்கப்பட்டது. (வ-9)

## சாராயம் கொண்டு சென்றோர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான சாராயத்தைக் கொண்டுசென்றவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பஸ் ஒன்றில் சாராயத்தை எடுத்துச் சென்ற ஐந்து பேரை கடந்த 9 ஆம் திகதி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

ஏனைய நான்கு பேரும் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதை அடுத்து அவர்கள் தலா ஒரு லட்சம்ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்லுமாறு நீதிமன்றில் உத்தர விடப்பட்டது. (க-55)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரணைமடு

யும் செய்வார்கள்' என்று கூறியுள்ளார் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஆலோசகர் பேராசிரியர் நந்தகுமாரன்.

இரணைமடுக் குடிதண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவது தொடர்பில் சர்ச்சை நிலவிவருகின்றது. இந்த நிலையில் இந்தத் திட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் இரணைமடுக் குடி தண்ணீர் திட்டம் ஏன் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரில் நைட்ரைஜன் அளவு அதிகரித்துள்ளது. இந்தக் குடி தண்ணீரைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. நைட்ரஜனை சுத்திகரிப்பதற்கான பொறிமுறைகள் அதிகூடிய செலவுடையது.

எனவே எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்வதற்கு, தண்ணீர் மூலம் எதுவென்பது தொடர்பில் ஆராய வேண்டியுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் இரணைமடுவே பொருத்தமாக உள்ளது. இதனை விடுத்துப் பொருத்தமான நீர் மூலம் கண்டறியப்பட்டால் அதனை பயன்படுத்த முடியும். வேறு நீர் மூலம் இல்லாமையாலேயே இரணைமடு தேர்ந்தெடுக்கப்பட்டது.

இரணைமடுத் திட்டம் மூன்று கட்டங்களாக நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பலவீனமான நிலையிலுள்ள இரணைமடுக் குளத்தைப் புனரமைத்து அணைக்கட்டை உயர்த்துதல், யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகம், யாழ்ப்பாணத்தின் கழிவகற்றல் என்கின்ற பொறிமுறைகளினூடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று அறிய வடக்கு மாகாண முதலமைச்சரினால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருந்தது. நிபுணர் குழுவின் அறிக்கையில், திட்டத்தை மூன்று திட்டங்களாகப் பிரித்து நடைமுறைப் படுத்துமாறு தெரிவித்திருந்தது. குறித்த நிபுணர் குழுவிற்கு தமது ஆலோசனைகளும் வழங்கப்பட்டதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்திருந்தனர்.

நிபுணர்குழுவின் அறிக்கையோ, திட்டத்தை நடைமுறைப் படுத்துவதை இடைநிறுத்துமாறோ வடக்கு மாகாண சபை இதுவரையில் உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்க வில்லை. இவ்வாறானதொரு நிலையில் தொடர்ந்தும் திட்டம் நடைமுறைப் படுத்தப் படும்." என்று கூறப்பட்டது.

மாகாணசபைத் திட்டத்தை நிறுத்துமாறு பணித்தாலும், மத்திய அரசு அதனை செயற்படுத்துமா என்று ஊடகவியலாளர்களால் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு நேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்த்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், "இலங்கையின் தற்போதைய அரசியலில் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்துள்ளன. அவர்கள் எதுவும் செய்வார் என்று பதிலளித்தனர். (ற-5)

### கோபி

கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலையில் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல் நடத்தினர் என்றும், அப்போது உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகள் வைக்கப்பட்ட - பின்புறம் கொழுவும் - மூன்று பைகள் மீட்கப்பட்டன என்றும், அந்த இடத்தில் படையினர் தேடுதலைத் தீவிரமாக்கியபோது அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற மூவரும் படையினருடன் சண்டையிட்டனர் என்றும் இதில் அவர்கள் மூவரும் கொல்லப்பட்டனர் என்றும் அறிக்கை கூறுகின்றது.

இதற்கிடையே நெடுங்கேணி வெடிவச்சகுளத்திற்கும் வவுனியா சேமமடுவுக்கும் இடையிலான பகுதியில் உள்ள ஊற்றுப்புலவு என்ற பகுதியிலேயே சம்பவம் இடம்பெற்றிருப்பதாக உள்ளூர் மக்கள் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இரவு வாகனங்களில் வந்திறங்கிய இராணுவத்தினர் காடுகளைச் சுற்றிவளைத்திருந் தனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நடவடிக்கையில் சுமார் 2.000 இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர் என்று தெரிகிறது.

இதற்கிடையே உயரிழந்த மூவரதும் சடலங்கள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நேற்று மாலையில் எடுத்துச் செல்லப்பட்டன.

இன்று காலையில் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ள கோபியின் மாமனார் மற்றும் மனைவி ஆகியோர் அவரது சடலத்தை அடையாளம் காட்டுமாறு கேட்கப்படுவார்கள் என்று தெரிகிறது. அடையாளத்தை அவர்கள் உறுதிப்படுத்தினால், இறுதிச் சடங்குகளை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அதிகாரிகளிடம் இருந்து தெரியவந்தது. (உ-5-4)

### ரூ.35 லட்சம்

டுள்ளார். அங்கு அவர் மேலும் கூறும்போது;

"நல்லூர் சங்கிலியன் வீதியில் வீடு புகுந்த திருடர் 7 லட்சத்து, 42 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். கொக்குவில் மேற்கில் வீடு புகுந்த திருடர் 12 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். மானிப்பாயில் வீடு புகுந்த திருடர் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் 10 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

உடுவிலில் உள்ள வீடு ஒன்றில் 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், அரியாலையில் ஒருவரது 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்றும் திருடப்பட்டுள்ளன. மானிப்பாயில் ஒருவரது 22 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டுள்ளது.

சித்தங்கேணி மேற்கில் வீடு புகுந்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. வேறொரு வீட்டில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சுன்னாகத்தில் 9 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கொடிகாமத்தில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. தெல்லிப்பழையில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டுள்ளது. அச்சுவேலியில் வீடு புகுந்து ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சிறுப்பிட்டியில் 24 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இவை தொடர்பில் இதுவரை எந்தவொரு சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை" - என்று தெரிவித்தார். (ற-4 -86)

### பிரி. நாடாளு

பக்ஷவையும் சந்திக்க திட்டமிட்டிருந்தனர்.

இருப்பினும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரிட்டனிலுள்ள இலங்கைக்கான அனைத்து நாடாளுமன்ற குழுவிடம் இந்தப் பயணத் திட்டம் குறித்து எதுவுமே தெரிவித்திருக்கவில்லை. இந்த நிலையில் பயணம் செய்யத் திட்டமிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ளும் இறுதி நேரத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் பயணம்செய்வதற்கு11மணிநேரத்துக்கு முன்னதாகத் திட்டத்தை அவர்கள் ரத்துச் செய்துள்ளனர்.இந்தப் பயணத்துக்கான நிதி உதவிகள் யாவும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனால் உருவாக்கப்பட்ட தொண்டு நிறுவனம் ஒன்றினாலே வழங்கப்பட்டிருந்தது என்றும், முத்தையா முரளிதரன் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படுவதால் விமர்சனங்களுக்குள் உள்ளான ஒருவர் என்றும் சனல் -4 தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (ற-5)

### வடபகுதியில்

கள அமைச்சர் அலன்டன்கன் இலங்கையில் வாழும் தமிழர்களின் வறுமை நிலை தொடர்பான மதிப்பீடுகள் தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்;

"இலங்கை மிலேனியம் அபிவிருத்தியை நோக்கி முன்னேறுகின்றது. அதில் முதலாவது நடவடிக்கையாக வறுமையை ஒழிப்பது தொடர்பில் இலங்கை முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்துள்ளது. இருப்பினும் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் இன்னமும் வறுமை நிலவுகின்றது. இனப் பாகுபாடு இல்லாமல் இது நிலவுகின்றது" என்று தெரிவித்தார். (ற-5)

### உறுப்பினர்

ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

"வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு வட மாகாண சபை அவைத் தலைவரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவர் அவ்வாறு கோரிக்கை விடுத்தாலும் பாதுகாப்புத் தேவைப்படும் உறுப்பினர்கள் நேரடியாகத் தனித்தனியாக அது தொடர் பில் விண்ணப்பித்தால் மாத்திரமே பாதுகாப்பு வழங்க முடியும்" - என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத் தல் உள்ளது. அதனால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரி வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே சிவஞானம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரியிருந்தார். அது தொடர்பில் கேட்டபோதே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவ்வாறு பதிலளித்தார். (ற-4)

### தவறுதலான

இதுதொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, நெடுங்கேணிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் குழுவொன்றுடன் நடந்த மோதலிலேயே இவர் கொல்லப்பட்டதாக ஊடகங்களில் தகவல் வெளியானது. பின்னர் அதனை இராணுவம் மறுத்தது. எனினும், கோபி, தேவிகன் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட நெடுங் கேணியை அண்டிய வவுனியா வடக்கிலேயே படை அதிகாரியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அதேவேளை, குறித்த இராணுவ அதிகாரி புலிகளை மீளுருவாக்க முயற்சிக்கின்றார்கள் என்று தேடப்பட்டு வந்த கோபி, தேவிகன் ஆகியோர் தொடர்பான விசாரணைகளில் பங்குபற்றியிருந்தவராவார். இந்த தமிழ் இராணுவ அதிகாரியே இது தொடர்பான விசாரணைகளின் போது மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது. (ற-5)

### நிலத்தடி

விவசாய இரசாயனங்கள் உணவுடன் உடலைச் சென்றடைவதால் மனிதர்களின் தேக ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டு வருகிறது.

யாழ்.குடாநாட்டின் நீர் வளத்தைக் காப்பாற்றுவதோடு ஆரோக்கியமான வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும் விவசாய இரசாயனங்களைப் பயன்படுத்தாத, இயற்கை விவசாயமான சேதன விவசாயத்துக்கு திரும்புவதன் அவசியத்தை வலியுறுத்தி வரும் அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு எனும் அரசசார்பற்ற நிறுவனம் சேதன விவசாயத்தை ஊக்குவித்து வருகிறது. அந்த நிறுவனத்தின் உதவியுடன் நீர்வேலியில் அமைத்திருக்கும் மாதிரி சேதன விவசாயப் பண்ணை திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடமாகாண அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சொண்ட் நிறுவனத்தின் தலைவர் ச. செந்துராஜா ஆகியோர் திறந்து வைத்தனர். (ற-5)

## சரஸ்வதி பச்சை அணி வெற்றி



யாழ்ப்பாணம், ஏப். 12
95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு உள்ளூர் அணிகளுக்கு இடையில் நடை பெற்ற 'ஒவர் கேம்' கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை அரியாலை அருணோதயா சனசமூக நிலைய முன்றிலில் இடம் பெற்றது .

இதில் சரஸ்வதி சனசமூக நிலையப் பச்சை அணியை எதிர்த்து சரஸ்வதி சனசமூக நிலைய மஞ்சள் அணி மோதிக் கொண்டது.

இதன்போது சரஸ்வதி சனசமூக நிலையப் பச்சை அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)



இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரி அணி. (த-86)

## சில்லாலை றோ.க.த.க. கபடியில் சம்பியனானது

யாழ்ப்பாணம் ஏப்12
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை வீழ்த்தி சில்லாலை றோ.க.த.க. பாடசாலை அணி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து சில்லாலை றோ.க.த.க. பாடசாலை அணி மோதிக்கொண்டது. இதில் சில்லாலை றோ.க.த.க. பாடசாலை அணி 32:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

## சைக்கிள் ஓட்டம் நாளை

கொழும்புத்துறை,ஏப்.12
95 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவையொட்டி சைக்கிள் ஓட்டப் போட்டி, வீதியோட்டப் போட்டி என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண ரீதியிலான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி, உள்ளூர் ரீதியிலான 10 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி (பெண்கள்), 10 கிலோ மீற்றர் வீதி யோட்டப் போட்டி (ஆண்கள்), 5 கிலோ மீற்றர் வீதியோட்டப் போட்டி (பெண்கள்) என்பன இடம் பெறவுள்ளன. போட்டிகள் யாவும் அரியாலை நெடுங்குளம் சந்தியிலுள்ள மத்திய விளையாட்டுக்கழக மைதான முன்றிலில் ஆரம்பமாகும். (த-135)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் வி.க. நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித்தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பிப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவந் துறை நீக்கிலஸ் வி.க. அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மனோகர வி.க. அணியை எதிர்த்து மன்னார் கில்லறி வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

* *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கம்முனை வி.க. மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுத்துறை பாரதி வி.க. அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் வி.க. 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றெஞ்சஸ் வி.க. அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் வி.க. 'ஏ' அணி மேதவுள்ளது. (த-23)

* *

வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை வி.க. மைதா னத்தில் இடம் பெற்று வருகின் றன.

அதில் இன்று சனிக்கிழமை மாலை 4 .30 மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் 786 வி.க. அணியை எதிர்த்து வடதாரகை வி.க. அணி மோதவுள்ளது. (த-23)

* *

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சாவகச்சேரி பொலிஸாருக்கும் சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும். (த-9)

## உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தில் சம்பியன்

வலி.வடக்கு, ஏப். 12
யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கமும் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஏற்கெனவே இரு அணிகளும் ஒரு குழுவில் இடம்பெற்று மோதிக்கொண்ட நிலையில் இறுதிச் சுற்றில் இரு அணிகளும் மீண்டும் மோதிக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டமையால் இரு அணிகளினதும் ரசிகர்களின் பலத்த எதிர் பார்ப்பின் மத்தியில் போட்டி இடம் பெற்றது.



சம்பியனான உடுவில் மகளிர் அணி

ஆனாலும் போட்டி எதிர்பார்த்தளவுக்கு சோபிக்காத நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி முதல் பாதி ஆட்டத்தில் 15:03 புள்ளிகள் என்ற முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் உடுவில் மகளிர் கல்லூரி பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கிய போதிலும் அந்த நிலைமைக்கு இடம் கொடாது இராமநாதன் கல்லூரி வீராங்கனைகள் தடுத்து ஆடிய நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் 7:1 புள்ளி என்ற நிலையில் முடிவடைந் தது.

ஆட்ட நிறைவில் 22:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (த-86)

## இன்றிரவு இரு தாச்சிப் போட்டிகள்

கைதடி, ஏப். 12
யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடாத்தி வரும் 'லீக்' முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக் கிழமை இரவு மோதும் கழகங்கள்:

**இரவு 7 மணி**
பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழகம் எதிர் இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**இரவு 8 மணி**
தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ஓ-288)

## சென்.பற்றிக்ஸ், சென்.ஜேம்ஸ் யாழ். வலயத்தில் வாகை சூடின

யாழ்ப்பாணம்,ஏப்.12
யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு 17வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் யாழ். மத்தியகல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

17வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிமோதிக் கொண்டன.

இதில் இரு அணியினரும் ஆட்டநேரமுடிவில் எதுவித கோல்களையும் பெறாமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ் மத்தியகல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)



## வலிகாமம் வலய உதைபந்தாட்டம் 15 வயதுப் பிரிவில் ஸ்ரீ முருகன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.12
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் சம்பியனாகியது.



கடந்த புதன்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயஅணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# இந்திய வீரர்களைக் குறி வைக்கும் இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி




இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் டேனியல் யாட், கோஹ்லிக்கு விட்ட காதல் தூதைத் தொடர்ந்து சக வீராங்கனையான சாரா டெய்லர், ரவீந்திர ஜடேஜாக்கு டுவிட் செய்துள்ளார். 20/20 உலகக்கிண்ணம் தொடங்கியதில் இருந்தே ஆடவர் இந்திய அணியினருக்கும், மகளிர் இங்கிலாந்து அணியினருக்கும் ஏதோ இன்னை பிரியாத தொடர்பு நிலவி வருகிறது.
விராட் கோஹ்லியின் அதிரடி ஆட்டத்தால் கவரப்பட்ட இங்கிலாந்து மகளிர் அணியின் டேனியல் யாட் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வெளிப்படையாகத் தெரிவித்து ரசிகர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தினார்.
கோஹ்லி எந்த பதிலும் அளிக்காத நிலையில், கோஹ்லியின் தாயார் மறைமுகமாக தனது எதிர்ப்பை டேனியல் யாட்டுக்கு தெரிவித்திருந்தார்.
அந்த சலசலப்பு சற்றே ஓய்ந்திருந்த நிலையில், மறுபடியும் இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் சாரா டெய்லரிடம் இருந்து இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாக்கு டுவிட் வந்துள்ளது.
மகளிர் உலகக் கிண்ணப்போட்டியில் இங்கிலாந்து அணியும், ஆடவர் உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவும் இறுதிப் போட்டியில் விளையாடின. ஆனால் இரண்டு அணிகளும் தங்கள் கிண்ணத்தை தவறவிட்டன. அன்றிரவு தான் டுவிட்டரில் இருவரும் தங்கள் கருத்துகளை பகிர்ந்துள்ளனர். (த)



# யுவராஜுக்கு பீற்றர்சன் ஆதரவு

விமர்சனங்களுக்கு மத்தியில் சிக்கித் தவிக்கும் யுவராஜுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், பீற்றர்சனும் ஆதரவளித்துள்ளார்.
20/20 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கையிடம் தோற்றதற்கு யுவராஜ் சிங்கின் மோசமான துடுப்பாட்டமே காரணம் என்று வெகுவாக விமர்சனங்கள் எழுந்தன.
இந்நிலையில் சச்சின் டெண்டுல்கர், ஹர்பஜன் சிங்கைத் தொடர்ந்து, இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சனும் யுவராஜ் சிங்குக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.
இந்த ஐ.பி.எல். தொடரின் டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கெவின் பீற்றர்சன் டில்லியில் கூறியதாவது,
டுவிட்டர் பக்கத்தில் யுவராஜ் சிங் குறித்து விமர்சிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இது தேவையற்ற ஒன்றாகவே நான் கருதுகிறேன். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. கிரிக்கெட்டில் எப்போதும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்க முடியும் என்ற எண்ணம் தவறானது.
கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் வெளியில் இருந்து விமர்சிப்பது மிக மிக எளிது. ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் ஆடாத வீரர்கள் கூட விமர்சித்துப் பேசிக் கொண்டிருப்பதை நரன் இப்போது பார்க்கிறேன் என்று கூறியுள்ளார். (த)

# கவாஸ்கருக்கு நெருக்கடி


கவாஸ்கர்

இந்தியக் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவரான கவாஸ்கருக்குப் புது நெருக்கடி வந்துள்ளது.
ஐ.பி.எல். விவகாரம் மற்றும் சூதாட்டம் தொடர்பான வழக்கில் இந்திய கிரிக்கெட் சபைக்கு இரு இடைக்காலத் தலைவர்களை உயர் நீதிமன்றம் நியமித்தது.
இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் பிறீமியர் தொடர்பான பணிகளை கவனிக்கிறார். மற்ற பணிகளுக்கு ஷிவ்லால் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.
இது தவிர இந்தியா சிமென்ட்ஸ் ஊழியர்களை, இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் இருந்து நீக்கவும், தலைமை அதிகாரியாக உள்ள சுந்தர் ராமனை நீக்குவது குறித்தும் கவாஸ்கர் முடிவு செய்யலாம் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.
இருப்பினும் சுந்தர் ராமன் குறித்து கவாஸ்கர் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதனால் பீகார் கிரிக்கெட் சங்க செயலர் ஆதித்ய வர்மா, பிறீமியர் தொடர் தலைமை அதிகாரி சுந்தர் ராமனை நீக்க வேண்டும் என கவாஸ்கருக்கு நெருக்கடி கொடுத்துள்ளார். இது குறித்து பீகார் கிரிக்கெட் சங்க செயலர் ஆதித்ய வர்மா, கவாஸ்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.
அந்த கடிதத்தில் கடந்த தொடரில் நடந்த சூதாட்டத்தில் சுந்தர் ராமன் பங்கு குறித்து மும்பை பொலிஸார் அளித்த அறிக்கையில் ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும், இன்னும் அவர் இப்பதவியில் தொடர்வது, பிறீமியர் தொடருக்கு நல்லதல்ல என்றும், அதனால் விரைந்து செயற்பட்டு சுந்தர் ராமனை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (த)

# ஐ.சி.சியின் முப்பெரும் நாடுகளை கடுமையாக சாடுகிறது விஸ்டன்

WISDEN
CRICKETERS' ALMANACK


ஐ.சி.சியின் முப்பெரும் நாடுகள் குறித்த முறைமையானது சர்வதேச கிரிக்கெட்டின் மூச்சை நிறுத்திவிடும் எனப் பிரிட்டனின் 2014ஆம் ஆண்டின் விஸ்டன் கிரிக்கெட் சஞ்சிகையின் 151 ஆவது பதிப்பில் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.
கடந்த பெப்ரவரி மாதம் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) அதிகாரம் மற்றும் வருமானம் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
இத்திட்டம் இந்தியாவின் அதிகாரத்தினால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
இந்த முப்பெரும் நாடுகள் குறித்து கடந்த புதன்கிழமை வெளியான கிரிக்கெட்டின் பைபிள் என வர்ணிக்கப்படும் விஸ்டன் சஞ்சிகையின் 151ஆவது பதிப்பில் இந்தியாவின் ஆதிக்கத்தில் உருவான 'காலனித்துவ பாணியிலான பிரிப்பு மற்றும் விதிமுறை' என லோரன்ஸ் பூத் எழுதியுள்ளார்.
மத்திய தலைமைப் பொறுப்பை இந்தியா எடுக்க தயாராவதனால் சர்வதேச கிரிக்கெட் தனது மூச்சை நிறுத்துகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# 20/20 உலகக் கிண்ண சம்பியன்களை கூட்டமைப்பு பாராட்டவில்லையாம்



20/20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியினரை நாடாளுமன்றத்தில் வரவேற்றுப் பாராட்டும் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளாது அந்த நிகழ்ச்சியைப் புறக்கணித்து விட்டனர் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று சுட்டிக் காட்டியிருக்கின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றவில்லை. ஏனைய அனைத்துக் கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகள் மூலம் அந்தத் தேசிய வெற்றியின் மகிழ்வில் கலந்துகொண்டன. அனைத்துக் கட்சிகளுமே உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியைப் பாராட்டினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே அது குறித்து மூச்சே விடவில்லை என்று அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# அசாபா பவலுக்கு 18 மாதங்கள் தடை



அசாபா பவல்

உலகின் மிக வேகமான மனிதர் என முன்னர் அறியப்பட்டிருந்த தடகள வீரர் அசாபா பவலுக்கு 18 மாதங்கள் போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.
தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை அவர் பயன்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டதை அடுத்து அவர் மீதான இந்தத் தடையை ஜமைக்கா நாட்டு அதிகாரிகள் விதித்துள்ளனர்.
31 வயதான பவல் ஜமைக்கா தேசியத் தடகளப் போட்டிகளின் போது தடை செய்யப்பட்டுள்ள இந்த மருந்தைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.
இந்நிலையில் தம்மீது விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து அசாபா பவல் விளையாட்டுத் துறைக்கான உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யத் திட்டமிட்டுள்ளார்.
இதேவேளை தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமை நிரூபணமாகியுள்ளதால் ஜமைக்கா வீரரான ஷெரோன் சிம்ஸனுக்கும் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

12 APR 2014


## பதவி வெற்றிடம்

1. முகாமையாளர்: (ஆண்/பெண்)
ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சியும் (G.C.E.A/L) சித்தி சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் பயணிக்கக் கூடிய வல்லமை
சனி, ஞாயிறு வேலை நாளாகும்.
வார நாள்களில் ஒரு நாள் ஓய்வாகும்.
(பட்டதாரிகளுக்கு முன்னுரிமை)
2. Clerk - (பெண்) ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி (A/L) சித்தி
சனி, ஞாயிறு வேலை நாளாகும்.
கிழமை நாள்களில் ஒரு நாள் ஓய்வு.

நேர்முகத்தேர்வு: 13.04.2014 மு.ப. 10 மணி

Ms.V.இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


# சங்காவுக்கும் மஹேலவுக்கும் அர்ஜுன ரணதுங்க ஆதரவு

சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் ஓய்வு விவகாரத்தில், அர்ஜுன ரணதுங்க தனது ஆதரவை இருவருக்கும் தெரிவித்துள்ளார்.

20/20 உலகக்கிண்ணப் போட்டி வெற்றியுடன் இலங்கைக் கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களான சங்கக்காரவும், மஹேல ஜெயவர்த்தனவும் சர்வதேச 20/20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றனர்.

இலங்கை அணியின் அடையாள வீரர்களான இருவரும் உலகக் கிண்ணம் முன்பாகத் தங்களது ஓய்வு பற்றிய அறிவிப்பை வெளியிட்டனர்.

இது குறித்து தங்களுக்கு முன்கூட்டியே முறைப்படி தகவல் தெரிவிக்கவில்லை என்று இலங்கை கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இதனால் வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பல சர்ச்சைகள் எழுந்தன.



இந்த விவகாரத்தில் இலங்கை அணி முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க கருத்து தெரிவிக் கும் போது, மற்றவர்களை விட வீரர்களுக்குத் தான் ஓய்வு பற்றிச் சரியான முடிவை எடுக்கத் தெரியும்.

20/20 கிரிக்கெட் என்பது இளைஞர்களுக்கான விளை யாட்டு என்பதைக் கடந்த காலங்களில் பார்த்து இருக் கிறோம். எனவே அவர்கள் இருவரும் எடுத்த முடிவு சரியானது தான். (த)


கணனி உலகில் நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

northern PC PARK

புத்தாண்டை முன்னிட்டு
விசேட விலைக் கழிவுகள்
BEST WAY BUY
BEST COMPUTER
0777 570 124
hp invent உலகத் தரம் உங்கள் கைகளில்

| TOWN SHOW ROOM | TECHNICAL DIVISION | MAIN SHOW ROOM |
|---|---|---|
| 10-14, STANLY ROAD JAFFNA | 288, PALALY ROAD. KANTHARMADAM, JAFFNA. 021 222 9581 | 269E, PALALY ROAD, KANTHARMADAM, JAFFNA 021 222 0388 |

**Sky Computers (Pvt) Ltd**

அனைத்துப் பாடத்துக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.

சிங்களம், ஆங்கிலம், புதிய பிரிவுகள் ஆரம்பம்.
மேலதிக விபரங்களிற்கு:TP:0212221417
89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

**ST.ANTONY's**

சித்திரைப் புத்தாண்டு
மாபெரும்
கணனி மலிவு விற்பனை

HP CORE 2 DUO FULL SET
29, 750/-
19" LED MON
250 GB HDD
2 GB RAM
FREE - H/PHONE/WEB CAM/SKYPE
(ஒரு வருட உத்தரவாதம்)
187, K.K.S. RD, JAFFNA TOWN
021 222 4865, 0750 698608
(80 GB HDD, 250GB, 500GB, மற்றும் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில்) (சி-13342)

புதுவருடத்தினை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
காலம் : 12.04.2014,
13.04.2014

| | | |
|---|---|---|
| ரவுசர் துணி 1 லைன்ந் | → ~~800~~/= | → 550/= |
| ரவல் | → ~~380~~/= | → 190/= |
| சாறி | → ~~875~~/= | → 700/= |
| சாறி | → ~~1200~~/= | → 950/= |
| சிறுவர்களுக்கான ரீசேர்ட் | → ~~400~~/= | → 320/= |
| சிறுவர்களுக்கான டெனிம் காற்சட்டை (3/4) | → ~~800~~/= | → 550/= |
| சாரம் | → ~~350~~/= | → 250/= |

இடம் : 210, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(திருமுருகன் கொம்நெற்றுக்கு முன்பாக)
(46717)(7.6.3.)

புதுப்பொலிவுடன் நியூ லலிதாஸ் ஜுவல்லறி



இல.32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில்
இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இன்று
(12.04.2014) சனிக்கிழமை
முற்பகல் 11.30 மணிக்கு



இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகின்றது
என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5511
(சி/13492)(5.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.